தமிழ் மொழிச் செல்வம்

545
2-56

டாக்டர் மா. இராசமாணிக்கனர்

] பதிப்பகம், காரைக்குடி.

56

தமிழ் மொழிச் செல்வம்

டாக்டர் மா. இராசமாணிக்கனர்.
M. A., L. T., M. O. L., Ph. D.
தமிழ்த் துறைத் தலைவர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

செல்வி பதிப்பகம்
காரைக்குடி.

செல்வி - 6
முதற் பதிப்பு : பிப்ரவரி 1956

P31
N56

ஆசிரியரின் பிற நூல்கள்

P31y7
J6

திருவள்ளுவர் காலம் யாது ?	1—0—0
தமிழர் திருமணத்தில் தாலி	1—8—0
கம்பன் யார் ?	1—8—0
சைவ சமயம்	2—4—0
தமிழ் இனம்	அச்சில்
இல்வாழ்க்கை	,,

110188

விலை ரூ. 1—8—0

அச்சிட்டோர் : சௌத் இந்தியா பிரஸ், காரைக்குடி

முன்னுரை

ஒரு மொழி பேசும் மக்கள் தம் மொழியின் பழைமையையும், பெருமையையும், வளர்ச்சியையும் நன்கு அறிந்தாற்ருன், அம்மொழியினிடத்து ஆர்வமும், அதன் வளர்ச்சியில் கருத்தும், அம்மொழி பேசும் தம்மினத்தவர்மீது பற்றும் கொள்வர். இங்ஙனம் மொழியுணர்ச்சி கொள்ளும் மக்களிடையே தான் நாட்டுப்பற்றும் இனவுணர்ச்சியும் சிறந்து தோன்றும். ஆதலின் ஓரினத்தவர் இனவொற்றுமையோடு நல்வாழ்வு வாழ, மொழி நூலறிவு உயிர் நாடி போன்றதாகும். இம் மொழி நூலறிவு தற்காப்புக்காகவும், தம் வளர்ச்சிக்காகவும் வேண்டற்பாலது என்பதைத் தமிழ் மக்கள் அறிதல் நலமாகும்.

இந் நோக்கங் கொண்டே, மொழி ஆராய்ச்சிக் கட்டுரைகள் "தமிழ் மொழிச் செல்வம்" என்னும் நூல் வடிவில் தரப்பட்டுள்ளன. இக் கட்டுரைகள் திராவிட மொழிகள், ஆசிய-ஆஸ்திரேலிய மொழிகள், வடமொழி என்பவற்றிடைக் காணப்படும் ஒற்றுமைகளை நன்குணர்த்தும்; தமிழ் எழுத்துக்களின் தோற்றத்தையும் அவற்றின் வளர்ச்சியையும் தெளிவுறுத்தும்; பேச்சு வழக்கிலுள்ள இலக்கியச் சொற்களைக் கண்டறியவும் தொகுக்கவும் ஊக்கத்தை அளிக்கும்; தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய திராவிட மொழிகளைப் பேசும் மக்களிடமுள்ள தமிழ்ச் சொற்களைக் கண்டுபிடிக்கும் உணர்வை மிகுவிக்கும்; எவ்வெவ் வழியில் முயன்று தமிழ் மொழியைப் பாதுகாத்து வளர்க்க வேண்டும் என்பதையும் அறிவுறுத்தும்.

சுருங்கக் கூறின், இக் கட்டுரைகள் தமிழ் மொழிப் பற்றையும், மொழி ஆராய்ச்சியில் ஆர்வத்தையும் ஊட்ட வல்லன என்னலாம். இதனை நன் முறையில் அச்சிட்டு வெளிப்படுத்திய காரைக் குடி செல்வி பதிப்பகத்தாருக்கு எனது நன்றி உரியதாகும்.

தியாகராசர் கல்லூரி,
மதுரை.

மா. இராசமாணிக்கனார்

உள்ளுறை

எண்	பொருள்	பக்கம்
1.	திராவிட மொழியின் தொன்மை	9
2.	தமிழ் எழுத்துக்களின் தோற்றமும் வளர்ச்சியும்	21
3.	வடமொழியும் திராவிடமும்	35
4.	வடமொழியும் ஆசிய — ஆஸ்திரேலிய மொழிகளும்	44
5.	கல்வெட்டுக்கள்	50
6.	‘ப்ராமன்’ என்னும் சொற்பொருள்	63
7.	இலக்கியச் சொற்கள்	69
8.	மலையாள நாட்டில் தமிழ்ச் சொற்கள்	81
9.	வரைமொழியும் வாய்மொழியும்	95
10.	தமிழ் வளர்ச்சி	104

தமிழ் மொழிச் செல்வம்



திராவிட மொழிகள்
ஹரப்பா
ப்ராஹுயி
மொஹெஞ்சொ-தரோ
ஒராவோன்
இராஜ்மகால்
கோண்டு
தெலுங்கு
கன்னடம்
துளு
குடகு
துதவம்
கோட்டா
தமிழ்

தமிழ் மொழிச் செல்வம்

1. திராவிட மொழியின் தொன்மை

திராவிட மொழிகள்

இப்போது இந்தியாவில் உள்ள திராவிட மொழிகள் பன்னிரண்டாகும். அவற்றுள் ஆறு செப்பம் செய்யப்பெற்றவை; ஆறு செப்பஞ் செய்யப்பெருதவை. செப்பஞ் செய்யப்பட்டவை: தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு, குடகு. செப்பஞ் செய்யப்படாதவை: தொதவர் மொழி, கோத்தர் மொழி, கோண்ட், கூயி, ஒராவோன், இராஜ்மகால் என்பன. முகப்புப் படத்தைப் பார்த்தால் இவை இன்றும் பேசப்படும் இடங்களைக் காணலாம்.

இம்மொழிகள் அனைத்தும் வேறு மொழி ஒன்றிலிருந்து பிரிந்தவை என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. திராவிட ஒப்பிலக்கண ஆராய்ச்சியைத் திறம்பட நடத்திய கால்டுவெல் பாதிரியாரும் இக்கருத்தே கொண்டுள்ளனர். ஆயின், அப்பெரியார் இவை அனைத்திலும் சிறந்தது தமிழே என்றும் அதனிடந்தான் பழைய திராவிட மொழிக்குரிய

அமைப்புக்கள் முற்றக் காணக் கிடக்கின்றன என்றும் கூறியுள்ளார்.[1] மேலும் செப்பஞ் செய்யப் பட்ட மொழிகளை எடுத்துக்கொண்டு ஆராய்கையில், அவர் கொண்ட முடிபாவது :

1.	பழைய தெலுங்கு	=	பழைய தமிழ்
2.	பழைய கன்னடம்	=	பழைய தமிழ்
3.	பழைய மலையாளம்	=	பழைய தமிழ்
4.	துளு	=	குடகு
5.	குடகு	=	தமிழ், மலையாள மொழிகளை ஒட்டியது.[2]

எனவே, செப்பஞ் செய்யப்பட்ட மொழிகள் அனைத் தும் தமிழை ஒட்டியனவே என்பது பெறப்படல் காண்க. ரிக் வேதத்தைச் சார்ந்த ' அயித்ரேய பிரா மணம்' என்ற நூலில் ஆந்திரர் குறிப்பிடப்பட்டுள் ளமையால், வேதகாலத்துக்கு முன்னரே தெலுங்கு மொழி தமிழிலிருந்து பிரிந்ததாதல் வேண்டும்.[3] கன்னட மொழி கிறிஸ்து பிறப்பதற்கு முற்பட்ட காலத்திலேயே வேறுபட்டிருத்தல் கூடியதே என் பது மோரியர் படையெடுப்பைப் பற்றி வருகின்ற அகநானூற்றுப் பாடல்களாலும், "வேங்கடத் தும்பர் மொழிபெயர் தேயம்" எனத் தமிழ்ப் புலவர் அப்பண்டைக் காலத்திலேயே கூறினமையாலும், கி. மு. வில் செய்யப்பட்ட உரோம நாடகமொன்றில் கன்னட மொழி அமைந்த காட்சியொன்று காணப் படலாலும் நன்கறியக் கிடக்கிறது. "வடவேங் கடம் தென்குமரி" எனப் பனம்பாரனார் பாயிரம்

---

1. கால்டுவெல் ஒப்பிலக்கணம், பக். 81—83
2. ,, ,, 14—33
3. ,, ,, 26; Dravidic Studies, P. 32.

தமிழகத்து எல்லை கூறலாலும், தொல்காப்பியர் காலத்துக்கும் முன்னரே (சுமார் கி. மு. 300-க்கு முன்பே) கன்னடம் தனிமொழியாயிற்று என்னும் உண்மையை உணரலாம். மலையாள மொழி தமிழினின்றே பிரிந்ததென்பதை மறுப்பார், 'தம்மை மறுப்பார்' ஆவர். மலையாள நாடே தமிழ் நாடாக இளங்கோவடிகள் காலத்தில் இருந்த தென்பது இலக்கியம் கண்ட சான்று. கன்னடத்தின் தொடர்பாலும் கிரந்த எழுத்துக்களின் வன்மையாலும், நம்பூதிரிகள் (ஆரியப் பார்ப்பனர்) செல்வாக்காலும், பௌத்த—சமண சமயப் பிரசாரம் வடமொழி கலந்த தமிழில் செய்யப்பட்டமையாலும் மலையாளம் கொடுந்தமிழாகி மிகப் பிற்பட்ட காலத்தே வேறு பிரிந்தது. இதனைத் தமிழின் சகோதரி என்பதைவிட 'மகள்' எனக் கூறலே மாண்புடைத்து.[4] கன்னடம் வேறுபட்ட காலத்திற்குப் பிறகு, கன்னடத்தினின்று சிறிதளவு வேறுபட்டுப் பிரிந்தது 'துளு' என்னல் தவருகாது. குடகு மொழி தமிழின் தூய்மையைப் பல வழிகளிலும் போற்றி வருகிறது. அதன் மொழி அமைப்பு, நடை ஆகிய இரண்டும் தமிழ்—மலையாள மொழிகளை ஒத்துள்ளது. கன்னடரும் மலையாளிகளும் பழக்கவழக்கங்களில் பிற்காலத்தில் மாறினாற் போலக் குடகு நாட்டார் மாருமல், பண்டைத் திராவிடர் நாகரிகத்தை இன்னும் பெரிய அளவில் பின்பற்றுதல் கவனிக்கத்தக்கது.[5]

இனிச் செப்பஞ் செய்யப்படாத திராவிட மொழிகளைக் காண்போம்:

---

4. கால்டுவெல் ஒப்பிலக்கணம்—பக். 18—19
5. ,, ,, 33

1. தொதவம் = பழைய கன்னடம்
2. கோத்தர் மொழி = பழைய கன்னடம்
3. கோண்ட் மொழி = தமிழைப்பெரிதும் தழுவியது
4. கூயி மொழி = தமிழும் கன்னடமும் தழுவியது
5. இராஜ்மகால் = தமிழைப் பெரிதும் தழுவியது
6. ஒராவோன் = தமிழைப் பெரிதும் தழுவியது.[6]

இவை செப்பஞ் செயப்படாத மொழிகளாயினும், இவை தமிழை ஒத்திருத்தலை நோக்க, இம்மொழிகள் பரவியிருந்த இடங்களையும் இருக்கின்ற இடங்களையும் நோக்க, ஆரியர் வருகையால் சிதறுண்ட இம்மக்கள் மலைப்பகுதிகளில் சென்று வாழலாயினர் என்பதும், அங்ஙனம் சென்ற போதிருந்த நிலைமையிலேயே இம்மொழிகள் பெரிதும் அமைந்துள்ளன என்பதும், பின்னர் ஆரிய மக்கள் தொடர்பால் மிகச் சிறிதளவே வேறுபட்டுள்ளது என்பதும் ஈண்டு உணரத்தகும் செய்திகளாகும்.

படத்தை உற்றுக் கவனிப்பின், பலுசிஸ்தானம் என்னும் இடத்தில், 'ப்ராஹுயி' மொழி ஒன்று குறிப்பிடப்பட்டுள்ளமை காணலாம். இது திராவிட மொழிகளைச் சேர்ந்தது என்று கூறுவதைவிடத் தமிழைச் சேர்ந்தது என்று கூறுதலே ஏற்புடையது எனக் கால்டுவெல் கூறுதல் கவனிக்கத்தக்கது.[7] தமிழுக்கே உரிய பால்பகா அஃறிணைப் பெயர் இம்மொழியில் காணப்படலும், இப்ப்ராஹுயியர் தென்னிந்தியத் தமிழ் மக்களை எல்லா வகைகளிலும் ஒத்துள்ளமையும் அவர்கள் தமிழரே எனக் கூறத்

6. கால்டுவெல் ஒப்பிலக்கணம்—பக். 626, 627, 630-632
7 ,, ,, 39, 633.

துணிவு தருகிறது. 1911-இல் எடுக்கப்பட்ட மக்கட் கணக்கிலும் ப்ராஹுயியைத் திராவிட மொழிகளிற் சேர்க்கப்பட்டதும் கவனிக்கத்தக்கது. "ப்ராஹுயி திராவிட மொழி என்று கூறக்கூடவில்லை; ஆயினும், அது திராவிட மொழியின் உயிர் நாடியைப் பெற்றுள்ள தென்பதில் ஐயமில்லை, எனவே, பலுசிஸ்தானத்துக்கு அருகில் மிகப்பழைய திராவிட நாகரிகம் இருந்திருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது,[8] என்று கால்டுவெல் பாதிரியார் கூறியது முற்றும் உண்மை என்பதைச் சிந்துவெளித் திராவிடர் நாகரிகம் விளக்கி நிற்கின்றது. மொஹெஞ்சதரோ, ஹரப்பா என்னும் இரண்டிடங்களில் (சிந்து, பஞ்சாப் மாகாணங்களைச் சேர்ந்த இடங்கள்) தோண்டிப் பார்த்தபோது, பழைய திராவிட நகரங்கள் இரண்டு கண்டுபிடிக்கப் பட்டன. அந்நகரங்களின் காலம் ஆரியர்க்கு (கி. மு. 2500க்கு) முற்பட்டதெனச் **சர். ஜான் மார்ஷல்** கூறுவர். அங்குக் கிடைத்துள்ள எழுத்து முறைகள் 'சித்திர சங்கேதக் குறிகள்' என **ஹீராஸ் பாதிரியார்** கூறி, அவ்வெழுத்துக்கள் தமிழ் மொழியையே குறிப்பன எனவும் வற்புறுத்திப் பல மேற்கோள்களோடு காட்டியிருத்தல் கவனிக்கத் தக்கது:

(மொ) (ஹ) (தமிழ்)

8 கால்டுவெல் ஒப்பிலக்கணம், பக். 63.

இம்மூன்று எழுத்துக்களையும் நோக்க, எழுத்து வளர்ச்சி நன்கு புலனுகுதல் காண்க.

இச்சித்திர சங்கேதக் குறிகளையே உரு எழுத்துக்கள் என்பர் மயிலைநாதர்.[9] இவ்வகை எழுத்துக்கள் மேலும் பல வகையாக யாப்பருங்கல விருத்தியுரையிலும், 'கண்ணெழுத்து' என்பதைச் சிலப்பதிகாரத்திலும், 'கரந்தெழுத்து' என்பதைச் சிந்தாமணியிலும் காணலாம். இவ்வாறு பல்வகை எழுத்துக்களைக் கூறும் மொழி இந்தியாவில் தமிழ் ஒன்றே. எனவே, தமிழ்மொழி ஒன்றுதான் இந்தியாவில் முழு வளர்ச்சியுற்று முழுதும் பரவியிருந்த மொழியாகும் என்பது இதனுல் இனிதுணரப்படும். இங்ஙனம் தமிழ் பேசிய சிந்துவெளித் திராவிடர் 8 ராசிகளைக் கண்டுபிடித்த காலம் சுமார் கி. மு. 5610 எனக் கூறுவர் ஹீராஸ் பாதிரியார். ஆகவே, ஆரியர் வருகைக்கு 2000 ஆண்டுகட்கு முன்னரே தமிழர் வான சாத்திர வல்லுநராகவும் பெரு நாகரிகம் படைத்த இனத்தவராகவும் விளங்கி இருந்தனர் என்பது தேற்றம்.[10]

இனி, இச் சிந்துவெளி நாகரிகம் இந்தியா முழுவதும் பரவியிருந்ததா எனின், ஆம். சிந்துவெளி எழுத்துக்குறிகள் ஹைதராபாத் சமாதிகளிலும், திருநெல்வேலிச் சீமையில் அகப்பட்ட நாணயங்களிலும் மட்பாண்டங்கள்மீதும், நீலகிரியிலுள்ள கல்வெட்டுக்களிலும் காணக்கிடைத்தலால், சிந்துவெளி நாகரிகம் இமயம் முதல் குமரி வரைப்

9. எழுத்ததிகாரம் ஈற்றுச் சூத்திரம்
10. Mohenjo-Daro and the Indus Civilization, Vol. II, P. 414.

பரவியிருந்ததென்று கூறலாம். இவற்றுக்குரிய சான்றுகள் பலவாம். அவற்றுள் சில கூறுவோம்: (1) யான், நான் என்பன தமிழ், மலேயாளம், கூயி, கோண்ட் மொழிகளில் இருத்தல், மிகப் பழைய மொழி எனப்படுவனவற்றின் கால எல்லையையும் கடந்து செல்கிறது. அஃதாவது, இன்றுள்ள தமிழ் இலக்கண நூலின் (இப்போதுள்ள தமிழ் நூல்களில் பழமையானது தொல்காப்பியம். அது சுமார் 2300 ஆண்டுகட்கு முற்பட்டது எனக் கொள்ளினும்) காலத்துக்கு மும்முறை மிகுதிப்பட்ட காலத்தே பண்டைத் தமிழரும் கோண்ட், கூயி மக்களும் வட இந்தியாவில் ஒன்றுபட்டிருந்து ஒரே மொழியைப் பேசிவந்த காலத்துக்கு 'நான்—யான்' என்பன நம்மை அழைத்துச் செல்கின்றன.[11]

இங்குக் கூறப்பெற்ற மக்களுள் 'கோண்ட்' வகுப்பினர் பழைய தமிழ்ப்பழக்க வழக்கங்களே இன்றும் விட்டிலர் என்பதை அறிதல் வேண்டும். அவர்கள் நிலமகளேத் 'தரைப் பெண்' என்று அழைக்கின்றனர்; வழிபடுகின்றனர்.[12] தொல்காப் பியம் சற்றேறக்குறைய 2300 ஆண்டுகட்கு முற் பட்டது. அதைவிட இரண்டு மடங்கு காலம் சென் றிருக்க வேண்டும் என்னும் கூற்ருல், சுமார் 7000 ஆண்டுகட்கு முன்னரே தமிழர் - கோண்டர் முதலி யோர் ஒன்ருக நடு இந்தியாவில் வாழ்ந்து வந்தன ராதல் வேண்டும் என்னும் கால்டுவெல் கூற்று நோக்கத்தக்கது; அஃதாவது, கி. மு. 5000 ஆண்டு கட்கு முன் என்பது. இதனேடு, 'சிந்துவெளித்

---

11. கால்டுவெல் ஒப்பிலக்கணம், பக். 368.
12. Castes and Tribes of S. I., Vol. 3, P. 372

திராவிடர்' வானசாத்திர வல்லுநராக இருந்தது கி. மு. 5610 எனக் கூறிய ஹீராஸ் பாதிரியார் கூற்று ஒப்புநோக்கத்தக்கது. எனவே, கி. மு. 5000-இல் இந்தியா முழுவதும் பண்டைத் திராவிட மொழி பரவி இருந்ததென்பது இங்கு அறியத்தகும் செய்தியாகும்.

"ப்ராக்ருத மொழிகள் இப்போதுள்ள வட இந்திய மொழிகளாக மாறுவதற்குப் பல காலத்திற்கு முன்பு, 'கூயி' வகுப்பாரும் தமிழரும் நடு இந்தியாவில் ஒன்றுபட்டவராய் ஒரே மொழி பேசியவராய் (வரலாற்றுக் காலத்துக்கு மிகவும் முற்பட்ட காலத்தில்) இருந்திருத்தல் வேண்டும். என்னை? கூயி மொழியிலும் பன்மையைக் குறிக்கப் பிரதி பெயர்ச் சொற்களில் 'ம்' (நாம், நீம், தாம்) வழங்கப்பட்டிருத்தலே போதிய சான்றாதலின் என்க."[13]

"திராவிட மொழிகளைப் பேசும் கோண்டர், கூயிகள் முதலியோர் நடு இந்தியாவிலும் வங்காளத்தின் அருகிலும் இன்றும் காணப்படல்-இந்தியா முழுவதும் இத்திராவிட மக்கள் இருந்தமையை இனிது விளக்குவதாகும்."[14]

"வங்காள மக்களிடையே மிகப் பரந்த அளவில் திராவிடக் கலப்பு ஏற்பட்டுள்ளது. வங்காளத்திலும், நாகபுரி, ஒரிஸ்ஸா முதலிய இடங்களிலும் பரவியுள்ள பண்டை மக்கள் திராவிடரே ஆவர். 'காக்' என்பவரும் இவ்வினத்தையே சேர்ந்தவர். இவ்விருவர் தொகை சுமார் 40 லட்சமாகும்."[15]

13. கால்டுவெல் ஒப்பிலக்கணம் P. 412
14. " " " P. 37
15. Col. Dalton, Ethnology of Bengal, P. 243

இதுகாறும் கூறியவற்றால், ஆரியர் வருகைக்கு முன் இந்தியா முழுவதும் திராவிட மொழி (பழந்தமிழ்) பரவியிருந்தது என்பது நன்கு புலனாகின்றதன்றோ?

[திராவிட மொழிகளை நன்கு ஆராய்ந்து பார்க்கையில், அவை இரானிய மொழிகளான பைசாச மொழிகளோடு தொடர்புடையன என்பதை நன்குணரலாம். அப்பைசாச மொழிகளே, "பிராக்ருத மொழிகள்" என்பவை. இவை ஆரியர் வருகைக்கு முன்பு இந்தியாவில் இருந்தவை. இவை இந்தியாவில் தமக்கு முன்னிருந்த முண்டா இன மொழிகளோடு கலப்புண்டன. இக் கலப்பில் தோன்றியவையே திராவிட மொழிகள் எனக் கூறலாம். இவற்றுக்கும் வடமொழிக்கும் சில இடங்களில் ஒருமைப்பாடு உண்டு.]* இப் ப்ராக்ருத மொழிகளிலிருந்து தோன்றியவையே இப்போதைய வட இந்திய மொழிகள். ஆரியர் வருகைக்கு நீண்ட காலத்திற்கு முன்னரே திராவிடர் இந்தியா முழுவதும் பரவியிருந்தனர் என்பதில் வியப்பில்லை.[16]

"வடமொழியில் சில சொற்கள் வேற்றுமுகத்துடன் சாணப்படுகின்றன. அவற்றின் பகுதி முதலியவற்றை வடமொழித் துணைக் கொண்டு அறிய முடியவில்லை. அவை வடமொழி அல்லாத பழைய இந்திய மொழியைச் சேர்ந்தவையாக இருத்தல் வேண்டும். பழைய மொழி ஒன்று

---

16 C. Narayana Rao, An Introduction to Dravidian Philology, PP. 104, 105, 147.

* இஃது ஒப்புக்கொள்ளத் தக்கதன்று.

வடமொழியின் உயிர்நாடியிலேயே கை வைத்து விட்டதென்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.''[17]

"த, ட- இவற்றை முதலாகக் கொண்ட சொற்கள் 'சிந்தி மொழியில்' ஆரியச் சொற்களாகக் காணப்பட்டில. 'த, ட' இரண்டும் ஆரியத்துக்கே புதியவை. எனவே, இவை பழைய இந்திய மொழி ஒன்றிலிருந்து கடன் பெற்றனவாதல் வேண்டும். [18] இவை திராவிட மொழிக்கே உரியவை. [19]

சிந்தி மொழி பேசப்படும் சிந்துப்பிரதேசமே கி. மு. 5000 ஆண்டுகட்கு முன்பிருந்த திராவிட மொழி பேசப்பட்ட பகுதி என்பது மேல் ஆராய்ச்சியால் விளக்கப்பட்டதன்றோ? எனவே, ஆரியர் குறிப்பிடும் பழைய இந்திய மொழி திராவிட மொழி என்பது அறியத்தகுவதாகும்.

"ஹிந்து எண்ணங்கள் முதலியன உரம் பெருத ரிக்வேத காலத்திலேயே திராவிட மொழியும், திராவிடர் பழக்க வழக்கங்களும் ஆரியர் மதத்தையும் அவர்தம் மொழியையும் தாக்கியுள்ளன என்பது அறியக் கிடக்கிறது. ரிக்வேதத்தில் 'மறுபிறவி' பற்றிய பேச்சே இல்லை. திராவிடர் தெய்வங்கள் (சிவன், முருகன், கொற்றவை முதலியன) ஆரிய வேதங்களில் இடங்கொண்டன. ரிக்வேத நடை, மொழி, உணர்ச்சி யாவும் தூய ஆரிய முறையில் இருப்பினும், உச்சரிப்புத் திராவிட மொழியால்

17 Dr. Beames, A Comparative Grammar of the Modern Aryan Languages of India, P. 128.

18 Dr. Earnest Trumpp. Grammar of the Sindhi Language.

19 Dravidic Studies, Part II, P, 58.

மாறுபட்டுவிட்டது. ரிக்வேத வடமொழி திராவிடத்தி னின்றும் கோல், முண்டா மொழிகளிலிருந்தும் சொற்களைக் கடன்பெற்றுவிட்டது. திராவிட மொழிக்கலப்பு வடமொழியில் மிகுந்த அளவில் ஏற்பட்டதாற்றான் 'ப்ராக்ருத' மொழிகள் தோன்ற லாயின." [20]

"வட இந்தியாவில் 'பிராமி' எழுத்து முறை ஆரியரால் கொள்ளப்பட்டு வளர்க்கப்பட்டது. அவர்கள் இந்தியாவில் புகுந்தபோது எழுதக் கற்றிலர். தென் பிராமி எழுத்துக்கள் திராவிடரால் வளர்க்கப் பெற்றவை." [21]

"பிராமி எழுத்துக்கள் தமிழுக்கெனவே ஏற் பட்டவை என்பதும், அவை வேறு விகற்பங்களுடன் வடமொழியாக ஆரியரால் மாற்றிக்கொள்ளப் பட்டன என்பதும் அறியக் கிடக்கின்றன." [22]

"வடமொழியையும், பிராக்ருத மொழிகளையும், திராவிட மொழிகளையும் நன்கு ஆராய்கையில், ஒரு காலத்தில் வடஇந்தியா முழுவதும் திராவிடர் இருந்தனர் என்பது நன்கு புலனுகும். பாலி முதலிய பிராக்ருத மொழிகள் வடமொழிக்குரிய முற்கூட்டு உருபுகளை (Pre-positions) அறவே விட்டுத் திராவிட மொழிகள் பயன்படுத்தும் பிற்கூட்டு உருபுகளைக் (Post positions) கையாளலாயின." [23]

---

20. Dr. S. K. Chatterji, Origin and Development of the Bengali Language, Vol. I, PP. 42—45.
21. Heras' article in The New Review, P. 7. (July 1936.)
22. P. N. Subramaniyan's article in Kalaimagal, Part—70.
23. Dravidic Studies, Part III, PP. 57, 61.

முடிவுரை

இதுகாறும் விளக்கமாகக் கூறியவற்ருல், பண்டைத் தமிழ்மொழியே (திராவிட மொழியே) இந்தியா முழுவதும் பரவி இருந்ததென்பதும், ஆரியர் வந்து ரிக்வேதம் செய்த காலத்தில் அந் நூலுள் இடம்பெற்ற புதியசொற்கள் திராவிடச் சொற்களே என்பதும், வடமொழியின் உச்சரிப்பை மாற்றிப் பிராக்ருத மொழிகளைத் தோற்றுவித்தது திராவிடமே (பழந்தமிழே) என்பதும், பழைய தமிழுக்குரிய எழுத்துக்குறிகளே சில மாறுதல் களோடு வடமொழிக்குரிய எழுத்துக்களாக மாற்றப் பட்டிருக்கலாம் என்பதும் மொழி ஆராய்ச்சியாளர் கருத்தாதல் காண்க.

2. தமிழ் எழுத்துக்களின் தோற்றமும் வளர்ச்சியும்

பண்டைத் தமிழ் எழுத்துக்கள்

'மொழி' என்பதைப்பற்றி விரிவாக எழுதப் புகுந்த எஸ்பெர்ஸன் (Gesperson) என்பார், "மனிதன், முதலில் தான் கண்ட பொருளுக்குப் பெயர் வைக்க இயலாத விலங்கு நிலையில் இருந்தான்; தன் இனத்தவருடன் பேச இயலாத வகை இருந்தான்; (1) பின்னர் நாளடைவில் அறிவும் அநுபவமும் கைவரப்பெற்றுத் தனக்கு வேண்டியவற்றைப் பிறரிடம் சொல்லுங்கால் அப் பொருள்களின் உருவத்தினைச் சித்திரித்துக் காட்டினன்; (2) அதன் பிறகு பொருளின் குணத்தைத் தன் செய்கையால் அறிவித்து அதனைப் பெற்றுவந்தான்; (3) மூன்றும் முறை குறுக்கெழுத்து (Short hand)ப் போன்றது; ஒரு பொருளுக்கு ஓர் எழுத்து இடல்; (4) எழுத முடியாமல் பேச்சு வகையால் சொற்றொடர்களைக் குறித்த அடையாளம். இங்ஙனமே மொழியானது உருப் பெறுகிறது," எனத் தம் அரிய ஆராய்ச்சி நூலில் விளக்கமாகக் கூறியுள்ளார். இவை நான்கும் முறையே **1. உருவெழுத்து, 2. தன்மை எழுத்து,**

3. உணர்வெழுத்து, 4. ஒலி எழுத்து எனப்படும். இவை விளக்கமாக நன்னூல், எழுத்தியல் ஈற்றுச் சூத்திர உரையில் மயிலைநாதர் என்னும் உரையாசிரியர் கூறியிருத்தல் காணத்தக்கது. இதனைச் சிற்சில வேறுபாட்டுடன் 'யாப்பருங்கல விருத்தி' என்னும் நூலின் உரையாசிரியர் விளக்கமாகக் கூறுவர். அவர் அத்துடன் வேறு பல எழுத்து வகைகளையும், "பார்ப்பான் வழக்காகிய பதின் மூன்றெழுத்தும் ......கட்டுரை எழுத்தும், வச்சிரம் முதலிய வடிவெழுத்தும் மற்றும் பல வகையாற் காட்டப் பட்ட எல்லா எழுத்தும் வல்லார்வாய்க் கேட்டுணர்க" (பக். 568. 569) எனக் கூறியிருத்தல் கூர்ந்து நோக்கத் தக்கது.

மேற்கூறிய நால்வகை எழுத்துக்களுள் உருவெழுத்து (சித்திர எழுத்து)ச் சிந்துவெளித் திராவிடரிடம் காணப்படுகிறதென ஹீராஸ் பாதிரியார் கூறியது இங்கு நினைவிற் கொள்ளற்பாலது. இவ்வெழுத்துக்களைப் பழைய எகிப்தியரும் பாபிலோனியரும் வழங்கிவந்தனர். 'உணர்வெழுத்து' என்பவை சீனர்பால் காணப்பட்டவை; "'தன்மை எழுத்து' எகிப்தியரிடம் காணப்பட்டவை; "அறிவு நுட்பத்திற்குக் கண்ணும் எறும்பும், அறிவின்மைக்கு ஈயும், நன்றியின்மைக்கு விரியன்பாம்பும், வெற்றிக்குக் கருடனும் பிறவுமாம்.[1]......" ஆகவே, சீனர், எகிப்தியர், பாபிலோனியர் முதலிய தொல்லை நாகரிகமுடைய மக்கள் வழங்கியவை போன்ற எழுத்துக்கள்-சிந்துவெளித் திராவிடர் வழங்கியவை போன்ற எழுத்துக்கள்—அத் தொல்லை நாள்

1. மு. இராகவையங்கார் 'இலக்கிய சாசன வழக்காறுகள்', p. 4.

தொட்டே இத் தமிழகத்தும் வழங்கி வந்தன என்பதும், அவற்றுட் சில யாப்பருங்கல விருத்தியுரையார் காலத்தும் (சுமார் கி. பி. 10-ஆம் நூற்றுண்டில்) வழக்கில் இருந்திருக்கலாம், அல்லது அவை பற்றிய நூல்கள் இருந்திருக்கலாம் என்பதும் இங்கு அறியத்தக்கன.

கண்ணெழுத்துக்கள்

இவையன்றிச் சிலப்பதிகாரத்தில் காவிரிப்பூம் பட்டினத்துத் துறைமுகத்தில் 'இறக்குமதி' ஆன மூட்டைகட்கும் பண்டம் ஏற்றிய வண்டிகட்கும் **கண்ணெழுத்துக்கள்** இடப்பட்டிருந்தனவாம்.

"வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பலபொதி."[2]

"............இருபதிுயிரம்
கண்ணெழுத்துப் படுத்தன கைபுனை சகடம்"[3]

அரசாங்கத்தாருக்குத் திருமுகம் எழுதுவோர் **கண்ணெழுத்தாளர்** எனப்பட்டனர்.

"**கண்ணெழுத்** தாளர் காவல் வேந்தன்
மண்ணுடை முடங்கல் மன்னவர்க் களித்து.[4]

இவற்றால், 'கண்ணெழுத்து' என்பது சங்க காலத்தில் வழங்கிய ஒருவகை எழுத்தின் பெயர் என்பதும், வெளிநாட்டு வணிகர் (வம்பமாக்கள்) தம்பெயர் முதலியவற்றைஇவ்வெழுத்துக்களிலேயே பொறித்து வந்தனர் என்பதும், இவ்வெழுத்துக்களிலேயே அக்கால அரசர் திருமுகம் முதலியன எழுதப்

2. சிலப்பதிகாரம், காதை. 5, வரி. 111-112. 3. ஷை காதை 26, வரி. 136. 4. ஷை காதை 26, வரி. 170, 171.

பட்டுவந்தன என்பதும் அறியத்தக்கன. "கண்ணெழுத்து—சித்திர எழுத்து; கண்ணுள் வினைஞர்—சித்திர காரிகள்; இதற்கு, 'நோக்கினர் கண்ணிடத்தே தம் தொழிலை நிறுத்துவோர்' என்று பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர். 'எழுதுதல்' என்பதற்குச் 'சித்திரித்தல்' என்பது பழைய பொருள். இவ்வெழுத்துக்கள் முற்காலத்தே தமிழில் வழங்கியவை என்பதற்குக் கண்கூடாகக் கண்ட பிரமாணமும் உண்டு. சாசன இலாகாவினின்றும் வெளிவந்த புத்தகத் தொகுதிகளை நோக்குமிடத்து, தமிழில் முன்னுளில்வழங்கிவந்த குறியீட்டெழுத்துக் களைக் காணலாம். இச் சங்கேத எழுத்துக்களே 'கரந்தெழுத்து' என்றும் வழங்கப்பட்டன. காந்தருவதத்தை சீவகனுக்குக் கரந்தெழுத்தில் கடிதம் வரைந்ததாகத் தம் காலத்து வழங்கிய இக்குறியீட்டெழுத்துக்களை உள்ளத்துக்கொண்டு திருத்தக்க தேவர் பாடுதல் இங்கறியத்தக்கது.[5] 'தமிழாசிரியன் ஒருவன் நாட்டில் வழங்கும் இத்தகைய எழுத்துக் களை எல்லாம் உணர்ந்தவனுதல் வேண்டும்' என முன்னோர் நியமித்திருத்தலால், பழைய வடிவு, பெயர், தன்மை, முடிவு முதலிய சங்கேத எழுத்துக்கள் நாட்டில் பெருவழக்குப் பெற்றிருந்தன என்பதும், அவையாவும் முன்னோரால் முறையா கற்கவும் கற்பிக்கவும் பெற்றுவந்தன என்ப நாம் நன்கறியக்கூடும்.

"சிந்து, பாஞ்சால தேசங்களில் உள் ஹரப்பா, மொஹெஞ்சதரோ என்ற ஊர்களி சமீபத்தில் கண்டறியப்பட்ட சுமேரியர் எழுத்

5 சிந்தாமணி, செ. 1767.

களாகக் கூறப்படுபவை, இச்சித்திர சங்கேதக் குறிகளாகவும், 5000, 6000 ஆண்டுகட்கு முற்பட்டவைகளாகவும் உள்ளன என்பர். இதனுல், அக்குறி எழுத்துக்கள் நம் தேசத்துக்குப் புறம்பானவை அல்ல என்பது தெளிவாகின்றது. அம்முறையில், நான் மேலே கூறிய எழுத்து வகைகளை நோக்குமிடத்து, **அப்புராதன மக்களில் தமிழரும் விலக்கப்பட்டவர் அல்லர்** என்று கொள்ளக் கூடியதாம்.''[6] "எழுத்துகள் நெடுங்கணக்கின் நிலையை அடைவதற்கு முந்திய காலங்களில் பெற்றிருந்த உருவங்களைப்பற்றிய குறிப்புக்கள் **தமிழைத் தவிர வேறு இந்திய மொழிகளில் உள்ள இலக்கியங்களில் காணப்படவில்லை.**''[7] இது நன்கு கவனித்து மகிழ்தற்குரியது.

தொல்காப்பியர் காலத்தில்

தொல்காப்பியர் காலத்துக்கு முற்பட்டதான இராமாயண - பாரத காலத்தில் (கி. மு. 1400-கி. மு. 750) வடமொழியாளர் தமிழகத்தே சிறு தொகையினராக நுழைந்து நிலைபெறலாயினர். அவர்தம் வடமொழி தமிழில் சிறிதளவு கலக்கவும் பெற்றது. இராமாயண - பாரத காலத்தில் வேங்கடத்துக்கு வடக்கிருக்கும் நாடு (டெக்கான்) வடமொழி வயப்பட்டு, நாளடைவில் மாறித் தெலுங்கு, கன்னட மொழிகள் பெற்றதாக மாறிவிட்டது. இவ்வுண்மையை வால்மீகி இராமாயணத்தாலும்

6 மு. இராகவையங்கார்-'சிலாசாசன வழக்காறுகள்' PP. 1 & 8.

7 Vide P. N. Subramanian's 'Ancient Tamil letters', Kalaimagal Part 70. P. 299.

வியாச பாரதத்தாலும் நன்கு உணரலாம். எனவே, தொல்காப்பியர் காலத்தே "வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்" எனத் தமிழகம் எல்லை பெற்றது. "வேங்கடத் தும்பர் மொழி பெயர் தேயம்" ஆதலின், அங்கு வழங்கப் பெற்ற வடமொழியும் வடமொழிக் கலப்புடைய தெலுங்கு - கன்னட மொழிகளும், தமிழகத்தே வழக்காறு கொண்ட வடமொழியும் கண்ட தொல் காப்பியர்,

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே,"

என வடசொல் தமிழிற் கலத்தற்கு இலக்கணம் கூறலாயினர். தொல்காப்பியத்தை நன்கு ஆராயின், வடமொழியாளர் தமிழகத்தே நிலைபெற்றிருந்த அளவு நன்கு புலனாகும்.

இக்காலத்தேதான் தமிழகத்தில் வடமொழி யாளரால் கிரந்த எழுத்துக்கள் எழுதப்பட்டு வந்தன வாதல்வேண்டும்; தமிழ் மக்களால் தமிழ் எழுத்துக் கள் எழுதப்பட்டு வந்தன என்பதில் ஐயமே இல்லை. இங்ஙனம் தமிழகத்தே தமிழ் எழுத்துக்கள் பேரள விலும், கிரந்த எழுத்துக்கள் சிறிய அளவிலும் எழுதப்பட்டு வந்தன; ஆனால், தக்ஷிணப் பிரதேசத் திலும் வட இந்தியாவிலும் பிராமி எழுத்துக்களே பயிலலாயின. ஆயினும், இவை எழுதப்பட்ட காலம் அசோகன் காலத்தில் எனக் கூறப்பட்டது. இப்பொழுது, "சிந்துவெளிக் குறிகட்கும் அசோ கன் காலத்திய பிராமிக்கும் இடை நிலையில் உள்ளன என்று கூறப்படும் குறிகளால் எழுதப் பட்டுள்ள சாஸனம் ஒன்று மத்திய இந்தியாவில்

'விக்ரம கோல்' என்னுமிடத்தே கண்டுபிடிக்கப் பட்டுள்ளது, (Indian Antiquary, Vol. 62.) என்பது கூறப்படுகிறது.[8] எனவே, அசோகன் காலத்துக்கு முன்னும் சாஸனங்கள் இருந்தமையும்—எழுத்துக் கள் எழுதப்பட்டமையும் எளிதிற் புலனுகும்.

கி. மு. மூன்றும் நூற்ருண்டில் அசோகன் கல் வெட்டுக்கள் தமிழகத்து எல்லைப்புறத்தில் குத்தி யிலும், மைசூர் நாட்டில் சித்தபுரத்திலும் கிடைத் துள்ளன. அவை பிராமி எழுத்துக்கள் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அதே நூற்ருண் டில் தமிழ்நாடு புகுந்த சமண–பௌத்தரால் எழு தப்பட்ட சாஸனங்கள் அசோகன் சாஸனங்களைப் போன்ற பிராமி எழுத்துக்களைக் கொண்டவையே. என்னை? சமண – பௌத்தர் வடநாட்டிலிருந்து வந்தவராதலின் தம் தாய் மொழியிலேயே வரைந் தனர். இதில் வியப்பு இல்லை அல்லவா? அதற்குப் பின்னர்க் காலம் குறிப்பிடாமல் கிடைக்கப்பெற் றுள்ள 'திருநாதர் குன்று' என்னும் இடத்தில் கிடைக்கும் சாஸனம், வட்டெழுத்தில் எழுதப்பட்ட தாகத் தெரிகிறது. இதற்குப் பிற்பட்ட சாஸனங் கள் கிடைத்தில; கி. பி. 7-ஆம் நூற்ருண்டுத் தொடக்கத்திலிருந்து இயற்றப்பட்ட சாஸனங்களே இதுகாறும் கிடைத்துள்ளன. இவற்றைப் பார்க் கையில், தமிழகத்தில் கிரந்தம், வட்டம், தமிழ் என்று வழங்கப்பெறும் மூவகை எழுத்துக்கள் உள்ளன என்பது தெரிகின்றது. (நாகர லிபியிலும் சில சாச னங்கள் உண்டு; ஆனல் அவை மிகப் பிற் பட்டவை; அவற்றைப்பற்றி நாம் கவலையுற வேண்டா.)

8, Vide Kalaimagal, Part 70, P 297.

பிற எழுத்துக்கள்

கிரந்த எழுத்துக்கள் வடமொழிச் சாசனங்களை யும் தமிழ்மொழிச் சாஸனங்களில் வரும் வட மொழிச் சொற்களையும் எழுதப் பயன்பட்டன. தமிழ் மொழியில் உள்ள சாஸனங்கள் வட்டம், தமிழ் என்னும் இருவகை எழுத்துக்களிலும் எழுதப் பட்டுவந்தன.

தமிழகத்தில் காணப்பட்ட பிராமி எழுத்துக் களும் அசோகன் பொறித்த தென் கல்வெட்டு எழுத்துக்களும் ஏறக்குறைய ஒத்தே உள்ளன. அவை தமிழ் எழுத்துக்களின் அமைப்பையே அடிப் படையாகக் கொண்டவை. என்னை ? அவற்றுள் க, ச, ட, த, ப ஆகிய வல்லெழுத்துக்கள் மட்டுமே காணப்படுகின்றன ; வடமொழியில் உள்ள அவற் றின் வர்க்க எழுத்துக்கள் பெரும்பான்மை காணப் படவில்லை. வடநாட்டுப் பிராமிக் கல்வெட்டுக்களிற் காணப்பெறாத சில எழுத்துக்கள் கிடைக்கின்றன.

வட்டெழுத்து முறை எப்பொழுது தொடங்கப் பெற்றது என்பதை உறுதியாகக் கூறமுடியாதாயி னும், அஃது ஒருகாலத்துத் தமிழ்நாடு முழுவதும் பரவி யிருந்திருத்தல் வேண்டும். வட்ட எழுத்துக் கள் கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் மிகவும் வளர்ச்சி யுள்ள நிலையில் ஒரு தனிவடிவத்தைப் பெற்றிருந் தன எனக் கல்வெட்டுக்கள்கொண்டு கூறலாம். இவ் வட்ட எழுத்துக்களுக்கும் பிராமி எழுத்துக்களுக்கும் நெருங்கிய ஒற்றுமைகள் உண்டு.வட்டெழுத்துக்கள் பாண்டிய நாட்டிலும் மலையாள நாட்டிலுமே பெரும் பாலான கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. சோழ நாட்டிலும் தொண்டை நாட்டிலும் கி. பி.

7-ஆம் நூற்றுண்டிலிருந்து பொறிக்ககப்பட்ட சாஸனங்கள் தமிழ் எழுத்துகளில் உள்ளன. 10-ஆம் நூற்றுண்டுக்குப்பின் பாண்டி மண்டலம் சோழர் கைப்பட்டதும், அங்கும் இவற்றிலேயே சாஸனங்கள் பொறிக்கப்பட்டன. 11-ஆம் நூற்றுண்டிலிருந்து தமிழ்நாடு முழுவதும் இவ்வகை எழுத்துக்களே வழங்கிவருகின்றன. சில சாஸனங்களில் இருவகை எழுத்துக்களும் கலந்து காணப்படுகின்றன.

இதுகாறும் கூறியவற்ருல், தமிழைக் குறிக்கவே தமிழகம் முழுவதும் வட்டெழுத்து இருந்தது என்பதும், பின்னரே வட்டெழுத்து முறையும் தமிழ் எழுத்து முறையும் தனித் தனியே தமிழகத்தில் இருந்தன என்பதும் கருத வேண்டுபவையாக இருக்கின்றன. மலையாளத்தில் சோழர் ஆதிக்கத்தால் வட்டெழுத்து வழக்கு வீழ்ந்தபின், அதன் கிளையாகக் 'கோல் எழுத்துக்கள்' தோன்றின. அவை மலையாள மாப்பிள்ளைகளிடம் அண்மைக்காலம் வரை வழக்கில் இருந்துவந்தன. டாக்டர் பீலர், "வட்டெழுத்துக்கள் பிராமியினின்றும் வந்தவை; இவை தமிழ் எழுத்துக்களின் திரிபு"[9] என்று கூறுகின்ருர். "வட்டெழுத்துக்கள் பிராமிக்கு மூலாதாரமான பினீஷிய எழுத்துக்களினின்று தமிழரால் கொள்ளப்பட்டன"[10] என்பர் டாக்டர் பர்நெல். சாஸனங்களை நன்கு ஆராயின், தமிழ் எழுத்துக்கள் தனி வளர்ச்சியுடையன; வட்டெழுத்துக்கள் தனி வளர்ச்சியுடையன; இரண்டும் பிராமியினின்றே

9 'Ancient Indian letters', P. 73.

10 Vide his 'South Indian Paleography', P. 49

வந்தன என்னும் செய்திகளை அறியலாம்.[11] பிராமி எழுத்துக்களுக்கும் வட்டெழுத்துக்களுக்கும் ஒரோவழி ஒற்றுமை இருப்பினும், பிராமியிலிருந்து வட்டெழுத்து வந்தது எனக் கோடல் சரியன்று. என்னை ? தமிழைக் குறிக்கும் வட்டெழுத்தும் கிரந்தத் தமிழ் எழுத்தும் ஒரேவகை எழுத்தான பிராமியிலிருந்து வளர்ச்சி அடைந்தது எனக்கூறல் அத்துணைப் பொருத்தமாகத் தோன்றவில்லை. பிராமி வருவதற்கு முன்னரே தமிழகம் முழுவதும் பரவியிருந்ததும் தொல்லை உரு, தன்மை, உணர்வு, ஒலி, கண் முதலிய எழுத்துகளின் வாயிலாகவே வளர்ச்சி அடைந்ததே 'வட்டெழுத்து' எனக் கோடலே தமிழ் வரலாற்றுக்கும் பகுத்தறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருந்துவதாகத் தெரிகிறது. கிரந்தத் தமிழ் எழுத்துப் பிராமியினின்றும் வட்டெழுத்தினின்றும் வளர்ச்சி பெற்றதென்பது தோன்றுகிறது. என்னை? வட்டெழுத்தே தமிழகம் முழுவதும் பரவி இருக்கிற தென்பது அனைவரும் ஒப்புக்கொண்ட உண்மை. அவ்வெழுத்துக்கள் பிராமியின் தொடர்பால் நாளடைவில் மாறுதல் அடைந்து சோழநாடு முழுவதும் கிரந்தத் தமிழாக விளங்கிய தென்பது கல்வெட்டுக் களால் விளக்கமாகிறது. மேலும், "வட்டெழுத்துக்கும் பிராமி எழுத்துக்கும் தொடர்பே இல்லை. முன்னது பின்னதினின்றும் வந்ததெனக் கூறுதல் பொருந்தாது,"[12] என டாக்டர் பர்னெல் கூறுதல் நமது முடிவுக்கு அரண்செய்தல் காண்க. மேலும், வட்டெழுத்துக் கல்வெட்டுக்களில் கிரந்த எழுத்துக் கள்காணப்படல் அரிது. ஆயின், கிரந்த எழுத்துக்

---

11 Vide Kalaimagal, Part 67, PP. 22, 23.
12 Vide his South Indian Paleography, PP. 50, 130.

கள், கிரந்தத் தமிழ் எழுத்துக் கல்வெட்டுக்களிலும், இப்பின்னவை கிரந்தக் கல்வெட்டுக்களிலும்காணப் படல் கவனிக்கத்தகும். இவையன்றிக் கோலார், சேலம், வட ஆர்க்காடு முதலிய நிலப்பகுதிகளில் உள்ள சில கல்வெட்டுக்களில் தமிழ்–வட்டெழுத்து ஆகிய இருவகை எழுத்துக்களும் காணப்படுகின் றன. இவை கி. பி. 900-க்கு முற்பட்டவை. இத ஞலும், இருவகைத் தமிழ் எழுத்துக்களும் வேறு வேறு என்பதை அறிக. இவற்றுடன், "தென் இந் தியாவில் காணப்பெறுவது வட்டெழுத்து ஒன்றே. பின்னரே வடமொழியாளரும் பௌத்தரும் தத்தம் எழுத்துக்களோடு (கிரந்தம், பிராமி) தமிழகம் புக்கனர்"[13] எனப் பர்னெல் கூறுதலும் காண்க.

மேனுட்டு ஆராய்ச்சியாளர் பலர், வேறு நாட்டு மொழியினின்றும் பிராமி எழுத்துக்கள் தோன்றி யிருத்தல் வேண்டும் என முடிவு கட்டினர். (ஆனல் இவ்விரு திறத்தார் காலத்திலும் சிந்துவெளித் திராவிடர் நாகரிகம் கண்டறியப்படவில்லை என்பது கவனிக்கத் தகுந்தது. ஆயினும், பிராமி இந்தியா வில் தோன்றிய எழுத்தே என்பதை லாசன் (Lassan), கன்னிங்ஹாம் என்னும் ஆராய்ச்சியாளர் துணிந் தனர்.) நிற்க.

"பிராமி எழுத்துக்களை நன்கு கவனித்து ஆரா யின், அவை முதலில் வடமொழிக்காக ஏற்படவில்லை என்பதும், • உயிர் எழுத்துக்களுள் 'அ, இ, உ' ஆகிய மூன்றுக்கும் மிக்க சிறப்பை அளிப்பதும் மெய்யெழுத்துக்களில் வர்க்க எழுத்துக்களைக் கொள்ளாததுமான ஒரு பாஷைக்கென அமைக்

13 Ibid. P. 4,

கப்பட்டுப் பின்னுல் வடமொழிக்கு உபயோகப்படும் படி புதிய குறிகள் உண்டாக்கப்பட்டன என்றும் எண்ண வேண்டி இருக்கிறது. இந்தியாவில் உள்ள மொழிகளுள் இவ்விதம் உள்ளது தமிழ் ஒன்றுதான். சிந்துப் பிரதேச ஆராய்ச்சி, திராவிட மக்களின் நாகரிகத்தை விளக்குவதாகும். தமிழ் மக்கள் பண்டைக்காலத்தில் உயர்ந்த நாகரிகம் உடையவர்களாக வாழ்ந்தார்கள் என்பதை நாம் அறிவோம். மொஹஞ்சோதாரோ அதனையே விளக்குகின்றதாம். அவ்விடங்களில் கிடைத் துள்ள குறிகளைப் போன்றவற்றைக் கொண்ட மட்பாண்டங்கள் ஹைதராபாத் சம்ஸ்தானத்திலும், நாணயங்கள் திருநெல்வேலி ஜில்லாவிலும் கிடைத் துள்ளன. இவ்விதக் குறிகள் இந்தியாவின் பிற பாகங்களில் கிடைக்கவில்லை. அன்றி, **எழுத்துகள் நெடுங்கணக்கு நிலையை அடைவதற்கு முந்திய காலங் களில் பெற்றிருந்த உருவங்களைப் பற்றிய குறிப்புக்கள் தமிழைத்தவிர வேறு இந்திய மொழிகளில் உள்ள இலக் கியங்களில் காணப்படவில்லை.** ''[14]

இதுகாறும் கூறியவற்ருல், கி. மு. 5000 ஆண்டு கட்கு முற்பட்ட சிந்துவெளித் திராவிட மக்கள் கொண்டிருந்த மொழியே தென் இந்தியத் தமிழரும் கொண்டிருந்தனர் என்பதும், முழு இந்தியாவிலும் ஆரியர் வருகைக்கு முன் தமிழ்மொழி ஒரே வகை யில் வளர்ச்சி அடைந்து வந்தது என்பதும், சிந்துப் பிரதேசத்தில் காணப்பெற்ற 'சங்கேதக் குறிகளே நாளடைவில் 'விக்ரமகோல்' கல்வெட் டிற் கண்ட வடிவம் பெற்றன என்பதும், அவையே பின்னர்ப் பிராமி எழுத்துக்களாக மாறின என்

14. P N. Subramanian, Ancient Tamil Letters, P.103

பதும், அப்பிராமி எழுத்தினின்றே வேறு மாறுதல் களுடன் வடமொழிக் குறிகள் ஏற்படுத்தப்பட்டன என்பதும், அப்பிராமி எழுத்தினின்றே கிரந்தம், கிரந்தத் தமிழ் வளர்ச்சியடைந்தன என்பதும், முதலில் சிந்துவெளியிற் காணப்பெறும் சித்திர சங்கேதக் குறிகள் தமிழ்நாட்டுப் பழைய நாணயங் களில் காணப்படுதலாலும், தமிழ் நூல்களே எழுத்துகளின் தோற்றங்களை மேற்கூறியவாறு பலவகையாக விளக்குதலாலும், சித்திர சங்கேத எழுத்துக்களினின்றும் தமிழகத்தில் எழுத்துக்கள் தனி முறையில் தோற்றமாகி வளர்ச்சிபெற்று, 'வட்டெழுத்து' நிலைமையை அடைந்திருத்தல் வேண்டும் என்பதும், அதுவே பிராமியின் வட் டெழுத்து வழிவந்த தமிழ் பரவுமுன் தமிழகம் முழு வதும் பரவி இருந்தது என்பதும், அதுவே, கி. பி. 10-ஆம் நூற்றுண்டு வரை பாண்டிய—மலையாள நாடுகளில் நிலைபெற்றிருந்தது என்பதும், சோழர் களால் வளர்க்கப்பட்ட கிரந்தத் தமிழ், சோழர் ஆதிக்கம் பெற்ற கி. பி. 11-ஆம் நூற்றுண்டுக்குப் பின் தமிழ்நாடு முழுவதும் பரவலாயிற்று என் பதும், கிரந்தம் பல்லவ அரசர்களால் போற்றப் பட்டது என்பதும் நன்கு அறியலாம்.

முடிவுரை

மேலும், தமிழகத்தில் பழமை வாய்ந்த நக ரங்களான கொற்கை, காயல், முசிறி, வஞ்சி, புகார், உறையூர் முதலிய இடங்களில் ஆராய்ச்சி செய்தால் மேலும் பல சான்றுகளும் தமிழகத்து எழுத்து வளர்ச்சி முறையும் விளக்கமாக அறிய வழியுண்டா கும். அண்மையில் (1936-இல்) நடு மாகாணத்தில்

ஆராய்ச்சியாளர் வெயின்கங்காப் பிரதேசத்தில் உள்ள மேடுகளைத் தோண்டி பார்த்தார்கள். அவற்றில் கி. மு. 3-ஆம் நூற்றுண்டில் வெட்டப்பட்ட ஓர் ஏரியின் கல்வெட்டு அகப்பட்டதாம். இவ்வாறு புதிது புதிதாக ஆராய்ச்சியில் கிடைக்கும் கல்வெட்டுக்கள் நாளடைவில் வெளிப்படும். அதன் பின்னரே, திராவிடர் வரலாறும் தமிழின் தொன்மையும் குன்றின்மீதிட்ட விளக்கென ஒளிரும். இறுதியாக ஒன்று கூறுவல்: கல்வெட்டுக்களை நன்முறையில் ஆராய்ச்சி செய்வோர் எழுத்துக்கள் அடைந்துள்ள அற்புத மாறுதல்களைத் தெளிவாக அறியலாம். உதாரணமாக, இப்பொழுது எழுதப்படும் 'லை' என்னும் உயிர் மெய் எழுத்துப் பண்டைக் காலத்தில் 'லை' என்றே எழுதப்பட்டதாகத் தெரிகிறது. கி. பி. 900-க்கு முற்பட்ட கல்வெட்டொன்றில் இங்ஙனமே காணப்படுகிறது. அது பின்னர் ஒன்ருக இணைக்கப்பட்டுப் பன்னிரண்டு மாறுதல்களைப் பெற்றுப் பின்னரே இன்றுள்ள 'லை' உருவத்தில் வந்ததென்பது தெரிகிறது. இதன் முதல் நிலையே 'லை'-சரியென்பதும், எழுதுவோர், ஏடுகளில் எழுத்தாணி கொண்டு விரைவாக எழுதிஞராதலின் இரண்டும் ஒன்று சேர்க்கப்பட்டு நாளடைவில் இன்றைய நிலைமை எய்திய தென்பதும் கல்வெட்டு உணர்வுடையார் நன்கறிவர்.

3. வடமொழியும் திராவிடமும் *

'ஆராய்ச்சி' என்பது பல திறப்பட்டது. அவ ரவர் தத்தம் அறிவுக்கும் ஆற்றற்கும் ஏற்றவாறு ஆராய்ச்சிசெய்து உண்மைகளை வெளியிடுகின் றனர். எனவே, அவற்றை இயலும் வரை ஆய்ந்து உண்மை கோடலே அறிஞர் செயற்பாலதாகும்.

முண்டா மொழிகளைப் பேசும் மக்களின் இன் றைய எண்ணிக்கை இந்திய மக்கள் தொகையில் 100-இல் ஒரு பாகம்; அஃதாவது, சுமார் 36-லக்ஷம் ஆகும். திராவிட மக்கள் தொகை 5-இல் ஒரு பாகம்; அஃதாவது, 7 கோடி யாவர். இவருள் 6 கோடி மக்கள் சென்னை மாகாணத்தில் உள்ளனர். ஒரு கோடி மக்கள் இந்தியா முழுவதும் சிதறுண்டு கூய், கோண்ட், ஒராவோன், இராஜ்மஹால், குருக். ப்ராஹுயி, கோட்டா, தொதவம் முதலிய திராவிட மொழிகளைப் பேசி வருகின்றனர். பலுசிஸ்தானத்தில் உள்ள ப்ராஹுயி திராவிட மொழி என்பதும், சிந்து வெளி நாகரிகம் கி. மு. 3000-க்கு முற்பட்ட திராவிடர் நாகரிகம் என்பதும், ஆரியத்துக்கு முன் இந்தியாவில் சிறப்புற்று இருந்தது திராவிடமே

* இது 'ஜூலெஸ் ப்ளாக்' என்பார் வரைந்துள்ள 'வட மொழியும் திராவிடமும்' என்னும் கட்டுரையை ஒட்டியும் வெட்டியும் எழுதப்பட்டது.

என்பதும், சிறந்த ஆராய்ச்சியாளர் துணிபு. எனவே, இந்தியாவின் பெரும் பகுதியை ஒரு காலத்தில் திராவிடம் கவர்ந்திருந்த தென்று கூறலாம்.

இனி இங்ஙனம் சிறப்புறப் பரவியிருந்த திராவிடமொழி யாது? திராவிட மொழிகளுள் பழமை வாய்ந்தது 'தமிழ்' என்பதும், அதுவே, பிறதிராவிட மொழிகளில் இல்லாத நூற்றுக்கணக்கான பழைய சொல் உருவங்களையும் அமைப்புக்களையும் இலக்கண முடிபுகளையும் தனிமுறையிற் பெற்றிருப்பதும், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போல வடமொழி எழுத்துக்களையும் இலக்கணத்தையும் தழுவித் தன் உருவம் - பழமை முதலியவை இழவாமல் இருக்கிற தென்பதும் அனைவரும் அறிந்த உண்மை. மேலும், ப்ராஹுயி மொழியில் பெரும்பாலான சொற்கள் தமிழ்ச் சொற்களோடு ஒத்திருத்தலும், தமிழே பண்டையது என்பதைப் பறை அறைந்து பகர்வதற் கொப்பாகும். "திராவிட மொழிகளுள் தமிழ் ஒன்றே வேத காலத்திலிருந்து இன்றுவரை மாறுதல் இல்லாமல் பண்டை நிலையில் இருப்பது; வேதகால நாகரிகத்திலும் முற்பட்டது; பெரியதோர் பரப்பை உடையது. பிற திராவிட மொழிகட்கு இச் சிறப்புக்கள் இல்லை. இவ்வொரு காரணம் கொண்டே, ஒப்பிலக்கணத்துக்கு ஆதாரமாக எடுத்துக்கொள்ளத் தகுதி பெற்றது தமிழ் ஒன்றே. மெய்யாகவே தமிழ் ஒன்றே பொதுவான திராவிட மொழிக்குப் பிரதிநிதியாக இருக்கிறது"[1] எனவரும் கூற்றையும் காண்க,

1. Pre-Aryan and pre-Dravidian in India PP. 38&39

"இப்பொழுது தெற்கே உள்ள திராவிடம் ஒரு காலத்தில் வட இந்தியாவிலும் இருந்திருத்தல் வேண்டும் என்பது வடமொழி—தென்மொழி ஆராய்ச்சியால் உறுதிப்படுகிறது"[2] என்னும் கூற்றையும் நோக்குக.

இன்ன பிற காரணங்களால் தமிழ் (இன்றுள்ள அத்துணைச் சொற்களையும் இந்த உருவத்திலேயே கொண்டதன்று) மொழிதான் முண்டா மொழிகளோடு உறவுபூண்டு ஆரியம் வருமுன் இந்தியா முழுவதும் இயங்கியதென்பதை அறியலாம். இதனைக் கீழ்வரும் ஆராய்ச்சியும் வலியுறுத்தும்.

ஒரு மொழியோடு மற்றொரு மொழி சேரும்போது, தன்னிடம் இல்லாத சொற்களை அம்மொழி மற்றொரு மொழியிலிருந்து பெறல் இயல்பே. அதுபோல வடமொழி, தான் பழகிய திராவிடம் (தமிழ்) முண்டாமொழிச் சொற்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டது. அதுபோலவே சில சொற்கள் இவ்விரண்டிலும் கலந்தன.

இங்கு, வடமொழிக்குச் சென்ற திராவிடச் சொற்களைக் காண்க :

1.	கோடா (ghota)	— குதிரை	(வடமொழி)
	ஙுர்ரமு	— ,,	(தெலுங்கு)
	குதுரெ	— ,,	(கன்னடம்)
	குதிரை	— ,,	(தமிழ்)
	கோரு	— ,,	(கோண்ட்)
	கோடா (goda)	— ,,	(கூய்)

2. Ibid P. 49

எனவே, இச் சொற்களின் முதல் எழுத்துக்கள் கு, ஙு (க்-ங்) இரண்டே மாறி வருவன. பிற ஏறக் குறைய ஒத்துள்ளன. 'க்' என்பதனுடன் தொடங்கும் சில திராவிடச் சொற்கள் வேறு சில திராவிட மொழிகளில் 'ங்'—ஒடு தொடங்கப்பெறல் இயல்பே. என்னை? காதல்—தமிழ், ஙாதிலு—தெலுங்கு, கீறு—கன்னடம், ஙீறு—தெலுங்கு, குறி—(ஆடு) கன்னடம், ஙொர்ரெ—தெலுங்கு, எனவருதலால் என்க. ஆதலின், 'ஙோடா' என்னும் சொல் திராவிடச் சொல் என்பதும், அது வட சொல்லாக மாறியதென்பதும் காண்க. மேலும் 'குதிரை' வட இந்தியாவில் சிவாலிய மலைக் காடு களில் காணப்பட்டன. அது தென் இந்தியாவில் இல்லை. எனவே திராவிடர் இந்தியா முழுவதும் பரவி யிருந்தபோதுதான் இச்சொல் திராவிடருடையதாக இருந்திருத்தல் வேண்டும். அவரோடு பழகிய ஆரியர் அச் சொல்லைத் தங்கள் ரிக் வேதத்தில் குறிப்பிட்டனர் எனக் கோடலே பொருத்தமானது.

2 ஙர்தபா — கழுதை (ரிக்வேதவட்சொல்)
ஙாடிதெ — ,, (தெலுங்கு)
கழ்தெ, கத்தெ — ,, (கன்னடம்)
கழுதை — ,, (தமிழ்)
ஙத்ரார்நா — கழுதையின் கத்தல் (குருக்)
கலெத்தெ — (செலிபிஸ் 'பக்' சாதியார் மொழி)

தமிழ் 'ழ்' - தெலுங்கில் 'ட்' ஆகும். கழுதை என்பது இந்திய - ஈரானிய விலங்கு. எனவே, ஆரியமொழி திராவிடத்திலிருந்து கடன்வாங்கியதே 'ஙர்தபா' என்னும் சொல்லாகும் எனல்பொருந்தும்.

3 (i)	பிட்—ஆல பூனை (வடமொழி)		
	பில்—ஆல ,, ,,		
	பிர்—ஆல ,, ,,		
	பில்லீ—ஹிந்தி		
	பில்லி—தெலுங்கு, கன்னடம்.		
(ii)	பெர்கு, பெக்கு	— பூனை	(கன்னடம்) *
	பெர்க்ஸா	— ,,	(குருக்)
	பேர்கா	— ,,	(கோண்ட்)
	வெருகு	— ,,	(தமிழ்)
(iii)	பூனை, பூசை	— பூனை	(தமிழ்)
	பூசி	— ,,	(முண்டா)
	பிசி	— ,,	(தீபெத்)
	பிசொ	— ,,	(ஆப்கன்)
	புசெக்	— ,,	(பாரசீகம்)
	புசி, பூசி (Pusi)	— ,,	(வடமேற்கு இந்திய மொழிகள்)
	பிஸி	— ,,	(ப்ராஹுயி)

எனவே, 'பில்லி, பெர்கு, புசெ' என்பன பண்டைத் திராவிடச் சொற்களாக இருத்தல் கூடும். இவை, பிறகு பல மாறுதல்கள் உற்றன என அறியலாம். 'பில் - ஆல' என்பது திராவிடத்திலிருந்து வந்த தெனக் கோடல் பொருந்தும்.

4	மரிச	— மிளகு	(வடசொல்)
	மெலசு	— ,,	(கன்னடம்)
	மிளகு	— ,,	(தமிழ்)
	மிரியாலு	— ,,	(தெலுங்கு)

* தமிழ் 'வ' கன்னடத்தில் 'ப' (Bha.) ஆகும். வெறுநீர்—பெருநீர்.

'மிளகு' மலையாள நாட்டில் விளைவதென்பதும், இங்கிருந்து மேனாடுகட்குக் கடல் வழியாக அனுப்பப்பட்டதென்பதும் சங்க நூல்களாலும், ரோமநாட்டுக் குறிப்புக்களாலும், தாலமி முதலிய யவன வழிப்போக்கர் குறிப்புக்களாலும் வெளியாதல் உண்மை. இதனாலும், இது வட இந்தியாவில் கிடையாததாலும், 'மிளகு' என்னும் சொல்லே 'மரிச' என வடமொழியில் திரிந்து வந்ததென்பதும் தெரிகிறது.

5 மஹா — பெரிய (வடசொல்)
மிகெ, மிக்கு — ,, (கன்னடம்)
மிகை — ,, (தமிழ்)
மிஞ்சு, மின்சு — ,, (தெலுங்கு)
மெகா, மெக்ரோ — ,, (குருக்)

மரிசா-மிளகு என வருதல் போல, 'மிக, மிகெ' என்பனவற்றுள் உள்ள 'இ,' 'மஹா' என்பதில் உள்ள 'அ' - வாக மாறுதல் இயல்பே அன்றோ? எனவே, 'மஹா' என்னும் வட சொல்லும் திராவிடச் சொல்லின் திரிபே என்பதை அறிக.

6 விஜன, வ்யஜன — விசிரி (வடசொல்)
பீசு — விசிறு (வினை) (கன்னடம்)
வீசு — " ,, (தெலுங்கு, தமிழ்)
விசிசி — தமிழ்
விசன — தெலுங்கு

விசிரி உஷ்ணப் பிரதேசமாகிய இந்தியாவினதே என்பதும், ஆரியர் நடு ஆசியாவிலிருந்து (சம

சீதோஷ்ண மண்டலத்திலும் குளிர் மிக்கதும் ஆகிய பிரதேசங்களிலிருந்து) வந்தனர் ஆதலாலும், 'விசிறி, விசன' என்னும் திராவிடச் சொற்களிலிருந்தே 'விஜன' வந்திருத்தல் வேண்டும் எனக் கருதுதல் பொருத்தமே யாகும்.

7 மயூர — மயில் (ரிக்வேதம்)
மொர — ,, (அசோகனது கர்னர் சாஸனம்)
மஜுர — ,, (,, வடமேற்குச் ,,)
மஜுல— ,, (,, கால்சி ,,)
மயில் — ,, (தமிழ்)
மய்லு — ,, (கன்னடம்)
(நெ) மலி— ,, (தெலுங்கு)
மல் — ,, (கோண்ட்)

(i) 'மயூர' என்னும் ரிக்வேதச் சொல்லும் தமிழ்ச் சொல்லும் பெரிதும் ஒத்துள்ளதால், 'மயில்' என்பதே பண்டை யுருவம் எனக்கொள்ளலாம்.

மார —மயில் (சவரமொழி, ஆசிய-ஆஸ்ட்ரிய மொழிகள்)

மரக்—, ,, (சந்தாலி)

(ii) எனவே, 'மொர' என்னும் அசோக சாஸனச் சொல், 'மரக்' – 'மார', என்னும் முண்டாமொழிச் சொல்லாக இருக்கலாம்.

(iii) 'மயூர' என்பதே திரிந்து 'மஜுர' 'மஜுல' என வந்தனவாகல் வேண்டும்.

8 ப்ஹல — பழம் (வடசொல்)
பண் — ,, (கன்னடம்)
பண்டு — ,, (தெலுங்கு)
பழம் — ,, (தமிழ்)

பன்ஞ்நா — ,, (குருக்)
ப்ஹ்லெ — ,, (ஹ்மெர்)
ப்லெய் — ,, (கிசெங்)
பலெய் — ,, (பஹ்தர்)
ப்லய் — ,, (ஸ்டெயிங்)
ப்லய் — ,, (அன்னமைட்)

இவ்விருவகை (திராவிட, ஆசிய-ஆஸ்ட்ரிய)ச் சொற்களில் எவ்வகைச் சொல்லிலிருந்து வடசொல் (ப்ஹல) வந்ததெனல் பொருந்தும்? ஆசிய-ஆஸ்ட்ரியச் சொற்களிலிருந்து வந்ததெனல் மிகவும் பொருத்தமாகும்.

9 முக (Mukha) — (அம்பின்) நுனி (ரிக்வேத வடசொல்)
முக ,, — வாய் (,,)
முகு,மூ — மூக்கு (கன்னடம்)
முக்கு — ,, (தெலுங்கு)
மூக்கு — ,, (தமிழ்)
முசோத் — ,, (மால்டிவ் மொழி)
பாமுஸ் — ,, (ப்ராஹுயி)
முங்கேலி — ,, (கூய்)
முக் — குள்ள, தட்டையான மூக்கு (காஷ்மீர்)

இவையாவும் 'முன்புறம்' என்னும் பொருளை உணர்த்தும் 'மு', 'மூ', 'மு(ன்)' என்னும் சொற்களை முதலிற் கொண்டுள்ளமை காண்க.

மூ–தெலுங்கு, கன்னடம்; மு (ன்)–தமிழ், முந்த்–குருக், மோன்–ப்ராஹுயி.

மூதி—முகம், வாய் } (தெலுங்கு), மூன்–முகம் (தொதவம்)

முதல்—தமிழ், முந்த்—முதல் (குருக்)
எனவே, முன்புறம் உள்ள வாய், மூக்கு என்னும் கருவிகளைக் குறித்த சொல், பின்னர் 'முகத்தையே' குறித்ததாதல் வேண்டும் என்பது இவ்வாராய்ச்சியாற் புலனும். இது திராவிடச் சொல்லே எனல் எளிதில் அறியற் பாலது.

10 இந்திய ஆரிய மொழிகள் மராத்தி, குஜராத்தி, வங்காளி முதலியன :

தொண்ட் —	உறுப்பு	(மராத்தி)
துண்ட் —	,,	(பெங்காலி, குஜராத்தி)
துட, தொட—	,,	(சிங்களம்)
துண்டம் —	,,	(தமிழ்)
துட்டி —	முகம், வாய்,—கோண்ட்)	

எனவே, இந்த இந்தோ-ஆரியச் சொற்கள் திராவிடச் சொற்களே ஆதல் காண்க.

இதுகாறும் கூறியவற்றால் வடமொழிச் சொற்கள் எனக் கருதப்படுவன, சில திராவிடச் சொற்களாக இருக்கலாம் என்பது நன்கு புலனாகும். இவை அல்லாமல் வேதங்களில் குடிபுகுந்த பிற சொற்களும் பலவாகும். அவற்றுள் சில: 'அணு, அரணி, கபி, கர்மார (கருமான்), கால (காலம்), குட (குடி), கண (இயம்-வாத்தியம்), நாண, நீல, புஷ்பம், பூசனை, பீஜ (விதை), ராத்ரி, ரூப' என்பன.[6]

6 Origin & Development of the Bengali Language by S. K. Chatterji, pp. 41-45.

4. வடமொழியும் ஆசிய—ஆஸ்ட்ரேலிய மொழிகளும்

ஆரியர் இந்தியாவிற் புகுமுன் இந்தியாவி லிருந்த மொழிகள் மூன்று:— (1) இமாலய மொழிகள் (மலையடிவாரப் பகுதிகளில் பேசப்படு பவை), (2) திராவிட மொழிகள், (3) முண்டா மொழிகள். பின்னவை இரண்டும் வட இந்தியா வில் இருந்தபோது ஆரியம் (சம்ஸ்கிருதம்) இந்தி யாவினுள் நுழைந்தமையால், ஆரியர் தாம் முன் னர் அறிந்திராத பலவகை மரங்கள் செடிகொடி கள், பழவகைகள், விலங்குகள், விளைபொருள்கள் முதலியவற்றின் பெயர்களைத் திராவிடரிடமிருந்தும் முண்டரிடமிருந்தும் கடன் பெற்றனர்.[1]

"பேராசிரியர் '**ஸ்டென் கொனோ**' என்பார், ஆரிய இலக்கணத்தைத் திராவிட மொழி மாற்றி யிருத்தல் கூடுமென்பதைக் கண்டறிந்தார்; அங் ஙனமே முண்டர்மொழியும் செய்திருக்கக் கூடும் என்பதை மெய்ப்பிக்கலாம் என்பார்,[2]" எனவரும் தொடர்களைக் காண்க. பேராசிரியர் '**ப்ரிஸ்லஸ்கி**' என்பார், 'இந்தியக் கதை'கள் (இந்துமதக் கதை

1. 'Pre—Aryan and Pre—Dravidian in India', P. 4.
2. Ibid. Int. P. XI.

கள்) பலவற்றையும், 'மச்சகந்தி கதை' போன்ற மாபாரதக் கதைகளையும் ஆஸ்ட்ரிய–ஆசிய மொழிகள் பேசும் மக்களிடைக் கேட்கலாம். இவை இம் **மக்கள் கதைகளெனக் கூற இடமுண்டு,**[3]" எனக் கூறுதல் உணர்தற்பாலது. 'ப்ரிஸ்லஸ்கி' என்பாரே, "மதம் சம்பந்தமாக '**லிங்கம்**' என்னும் சொல் ஆராய்தற்கு உரியது. இது ஆசிய–ஆஸ்ட்ரியச் சொல்லாகும். 1923-இல் நான் சிலவகை ஆராய்ச்சிகளைச் செய்யலானேன்; ஆரிய இந்தியக் கதைகள், கர்ணபரம்பரைக் கதைகள், கட்டுக் கதைகள் முதலியன ஆஸ்ட்ரோ–ஆசிய மக்களிடமிருந்து ஆரியர் கடன் வாங்கியவை என்பதைக் கண்டறிந்தேன்,[4]" எனக் கூறுதலும் நோக்கற்பாலது. "பண்டை இந்திய சமூக–மத விஷயங்களில் ஆசிய-ஆஸ்ட்ரிய நாகரிகம் எவ்வளவு குடிகொண்டுள்ளதென்பதை யான் இரு கட்டுரைகள் மூலம் விளக்கி உள்ளேன்," என '**ஜீன் பிரிஸ்லஸ்கி**' கூறியிருத்தலும் உன்னற்பாலது.[5] ஆரிய மொழிகள் பல, ஆசிய–ஆஸ்ட்ரேலிய மொழிகளிலிருந்து கொள்ளப்பட்டன. அங்ஙனம் கொள்ளப்பட்ட பலவற்றுள் சில கீழே தரப்படுகின்றன:

வடமொழி	ஆசிய-ஆஸ்ட்ரேலிய சொற்கள்
1 பாண-அம்பு	பன-அம்பு
பிநாக-வில்(பின் + ஆக)	ஆக், அநக்-வில்
2 மார்பு-(பெண்)சுசுக	சுசு-மார்பு (பெண்)
3 அங்கார்-அடுப்புக்கரி	அங்கு-அடுப்புக்கரி
4 கபோல-கன்னம்	கப-கன்னம் கபோ-முகம் தபோ-முகம்

3. Ibid. Int P. XIII. 4. Ibid. P. 15. 5. Ibid. P. 135.

5	நாரிகெலா-தேங்காய்	நியர்-தேங்காய் கொலை-பழம் நியர்கொலை-தேங்காய்ப் பழம்
6	கமதா, கர்க்கட-நண்டு	காதா, கடம், கதாம்-நண்டு
7	பெகா-தவளை	புஆக், தபெக், தபெங்-தவளை
8	ஜங்கா-பாதம்	சாங், ஜொங், ஜங், ஜங்ங்கா-பாதம்
9	ஞொடாலி-குதிக்கால்	காடௌல், டொவ்ல்-குதிக்கால்
10	பகா-வெண் பறவை	பக், போக்-வெண்மை
11	கன்டா-மணி	கெண்டாங்-மணி
12	கஜா-யானை	கஜா, கஜாஹ், கசாஹ்-யானை
13	காக-காகம்	காங்-காகம்
14	ஹலாஹல-விஷம்	ஹாலெ, ஹலி-விஷம்
15	கராத்-இரம்பம்	கொராத்-இரம்பம்
16	ஙுட-சர்க்கரை	ஙுலா, ஙுல-சர்க்கரை
17	பிராகார-தடுசுவர்	பகர்-வேலி (தடை) பக்ர்ஒ-வாய்க்கால்வெட்டு பகார்-வாய்க்கால் (வங்க மொழி)
18	கதலீ-வாழை	கெலுய், தெலி, தெலெய்
19	பால-மயிர் கம்பல-மயிர்	பல-மயிர் க(ம்)பல-மயிர்
20	லாங்கல லாங்குல லிங்க } -கலப்பை உழுகருவி	க-லிங்கர் தெங்கால, ஏதங்கல் தங்கால, தங்கல் கல்-உழு, கலப்பை } கலப்பை, உழு கருவி.
21	லகுடா லஙுடா } - குச்சி	லாங்குலா-உழுகருவி, குச்சி
22	பல-பழம்	ப்லெ, ப்லெய், பண், பஞ்நா-பழம் பண்டு-பழம்-(தெலுங்கு) பிர்ஸ்-பழம் (ப்ராஹுயி)

23	மாதங்க-யானை	ம், மஹ்-பெரிய; தங்-கை மதங்-பெரிய கை (யானை) மெய்ந்தங்-யானை
24	மயூர மயூக மருக } - மயில்	மரக் மயக் } - மயில்
25	ருத்ரா-ஓசையிடுவபன் ருத்-ஓசையிடு	பரு-ஓசையிடு, ஓசை ரூ-(புலிபோல்) ஓசையிடு
26	குட-கோட்டை	குட்-மூடு, குட-ஊர், கிராமம்
27	லதா-பிரம்பு	லதெய்க்-பிரம்பு
28	மசக-கொசுகு	மஸ்-கொசுகு

இதுகாறுங் கூறியவற்ருல் பல வடமொழிச் சொற்கள் ஆசிய-ஆஸ்ட்ரேலிய மொழிகளிலிருந்து கொண்டவை என்பதும், வடமொழியாளர், முண்டர் முதலிய பழைய மக்களுடன் இந்தியாவில் கலந்து பழகியிருத்தல் வேண்டுமென்பதும் அறியக்கிடக்கின்றன. 'தாலமி' எழுதியுள்ள இந்திய ஊர்களில் 'தந்தகூர' என்பது ஒன்று. 'தந்த' என்பது யானைப்பல், யானைக்கோடு; 'கூர' என்பது நகரம்; 'கூர' என்பது ஆரியச்சொல் அன்று. 'ஊர்' என்பது தமிழ்ச் சொல். எனவே 'கூர' என்பது ஆசிய–ஆஸ்ட்ரேலிய சொல்லாக இருக்கலாம். 'தந்த' என்னும் வடசொல்லோடு 'கூர' என்னும் ஆரியமல்லாத சொல் கலந்து வருதல், ஆரியமும் அஃதல்லாத பிறமொழிகளும்(திராவிடம், முண்டாமொழிகள்) ஒன்ருேடொன்று நெருங்கி இருந்ததை நன்கு புலனுக்குகிறது.[6]

இதுபோலவே, பல தமிழ்ச் சொற்கள் வேத கால வடமொழியிற் புகுந்து ரிக்வேதத்திலேயே

6 'Pre Aryan and Pre-Dravidian in India', PP. 140-141.

இடம் பெற்றுவிட்டன. அவற்குள், ஆணி, அரண், முத்தம் (முக்தா), பூ (புஷ்பம்)என்பன சிலவாகும். இவ்வுண்மைகளை நூலறிவும் நுண்ணறிவும் உடைய பெருமக்கள் நன்குணர்வர்.

சுமேரிய மொழி—தமிழ் மொழி—ஆசிய—ஆஸ்ட்ரிய மொழி

'சுமேரியர்' என்பவர் அரேபியாவில் யூப்ரெடிஸ், டைக்ரிஸ் ஆறுகட்கு இடையே இருக்கும் பரந்த நாட்டைச் சரித்திர காலத்துக்குமுன் ஆண்டுவந்த மக்கள் ஆவர். அவர்கள் அப்பண்டைக் காலத்தில் தமிழரோடு வாணிகம் நடத்திவந்தனர். மலையாளக் கரையிலிருந்து தேக்கமரத் துண்டுகள் அப்பழைய காலத்தில் கடல்வழியாக அனுப்பப்பட்டன என்பது தெரிகிறது [7] அச்சுமேரியர் காலம் கி. மு. 4000-க்கு முற்பட்டது. அவர்கள் திராவிடர்களே என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். [8] அச்சுமேரியர் மொழிச்சொற்கட்கும் ஆசிய-ஆஸ்ட்ரிய சொற்கட்கும் ஒருமைப்பாடு சில இடங்களில் காணப்படுகின்றன; ஒரோவழித் தமிழ்ச் சொற்கள் சிலவற்றுக்கும் ஒற்றுமை காணப்படுகிறது. M. ரிவட் என்னும் ஆராய்ச்சியாளர், 'சுமேரியர் ஆசிய—ஆப்பிரிக்க—ஐரோப்பிய கலை வளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டார்' எனக் கூறுவார். பேராசிரியர் 'பிரிஸ்லஸ்கி' என்பார் பல சொற்களின் ஒருமைப்பாடு கண்டு வியக்கின்றார். [9]

---

7 Ragozin's Vedic India, P. 305.

8 H. R. Hall's 'Ancient History of the Near East'.

9 'Pre Aryan and Pre - Dravidian in India,' PP. 147 - 148.

சுமேரியமொழி	ஆசிய-ஆஸ்ட்ரியமொழி	தமிழ்மொழி
பில் (Fil)	பல் (Bal)	பல் (Pal
ஙர் (வளை, சுற்று)	கர்	சு-வர்
ஙுட(ஊர், நகரம், கிராமம்)	குட	குடி
இங்கர் (மதில்)	...	இஞ்சி
கர் (சுவர்)	...	சு-வர்
உர், உரு (நகரம்)	...	ஊர்
ங்அ (மீன்)	க	ஊர்
சிங் (மயிர், கம்பளம்)	சொங்	...
ஙலு (மனிதன்	கொல்	...
புரு (பழம்)	பெலெ	பழம்
ஙுல, ஙல் (பெரிய)	கரு	பெரு
மஸ் (பெரிய)	ம, மஹ்	மா
நே (சுட்டுச்சொல்)	நி, நே	...

இத்துறை ஆராய்ச்சி பல புதிய விவரங்களை விளக்கலாம்; வரலாற்றில் பல மாறுதல்கள் உண்டாகலாம். அறிவுடையோர் ஆராய்வாராக.

5. கல்வெட்டுக்கள்

பண்டை எழுத்துக்கள்

எகிப்து, சீனம், பாபிலோனியா முதலிய நாடுகளில் தோன்றிய நாகரிகங்களே உலக நாகரிகங்களில் மிகப் பழமையானவை என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. இவ்விடங்களில் கிடைத்துள்ள எழுத்துக்களின் வளர்ச்சிக் குறிகளையும், மெக்ஸிகோ, ஈஸ்டர் தீவுகள் முதலியவற்றில் காணப்படும் எழுத்துக் குறிகளையும் நன்கு ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள், "இவ்வெழுத்து முறைகளின் தோற்றமும் வளர்ச்சியும் ஒருபடித்தாகவே காணப்படுகின்றன" என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

"முதலில் உடும்பின் உருவம் அவ்வுயிரைக் குறிக்க வரையப்பட்டது. பின்னர் அவ்வுருவம் அவ்வுயிரைக் குறிக்காமல் நிலத்தைக் குறிக்கப் பயன்பட்டது. முதலில் வரையப்பட்டது 'உரு எழுத்து' எனப்படும்; பின் குறிக்கப்பட்டது சித்திர சங்கேதக்குறி (குழூஉக்குறி) எனப்படும். சீனம், எகிப்து முதலிய பண்டைநாடுகளில் இச் சங்கேதக் குறிகள் பல கிடைத்துள்ளன. நடைக்குக் கால்களும், பார்வைக்குக் கண்ணும், அதிகாரத்

திற்குக் கையும், பலத்திற்குத் தோளும் வரையப் பட்டன. இங்ஙனம் ஒரு பொருளைக் குறிக்க வரையப்பட்ட சித்திரம், நாளடைவில், அப்பொருளின் பெயரைக் குறிப்பதாக மாறியது. அதுவே 'ஒலி எழுத்து' என்பது. அஃதாவது, 'வேல்' என்பதை உணர்த்தும் சித்திரம், 'வேல்' என்னும் பெயரையே குறிக்கத் தொடங்கியது. ஒரு மனிதனைச் சித்திரித்துக்காட்டி, அவன் கையில் வேல் இருப்பதாக எழுதியுள்ள 'தொடர்ச் சித்திரம்,' 'வேல்,' 'ஆள்,' என்னும் இரு பெயர்களைக் குறிக்கத் தொடங்கியது.

"ஆனால் இக்குறிகளைக் கொண்டு தொடர் மொழிகளையும், முற்றிய கருத்துக்களையும் எழுத இடர்ப்பாடு ஏற்பட்டது. அதனால் வார்த்தைகளை அசைகளாகவும் சீர்களாகவும் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உருவத்தை எழுதி, அவற்றைச் சேர்த்து வாசிக்கும் முறை ஏற்பட்டது. அம்முறையும் கடினமாகத் தோற்றியதால், பின்வந்த மக்கள், சில குறிப்பிட்ட குறிகளைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு குறியையும் அது உணர்த்தும் சொற்களின் சிறப்பாகக் கொண்டனர். இம்முறையில் தோன்றிப் படிப்படியாக வளரத் தொடங்கியதே 'வரி வடிவம்' என்று எழுத்தாராய்ச்சியாளர் எடுத்தியம்புகின்றனர்.

110188

தமிழ் நூற்சான்றுகள்

மேலே கூறப்பெற்ற சித்திர சங்கேதக் குறிகளும், அவற்றின் வடிவ வளர்ச்சிக் குறிகளும் இந்தியாவில் சிந்துவெளி நாகரிகப் புதைபொருள்

கள்மீது பொறிக்கப்பட்டுள்ளன. இவற்ருல் இவை இந்தியாவிற்குப் புதியன அல்ல என்பதை அறியலாம் ; ஆயினும் மேலே சொல்லப்பட்ட எழுத்துக்களின் விவரங்களைத் தமிழைத் தவிர வேறு எந்த இந்திய மொழி நூல்களிலும் காணல் இயலாது. நன்னூலுக்கு உரைவகுத்த மயிலைநாதர் எழுத்துக்களை, 1. உரு எழுத்து, 2. தன்மை எழுத்து, 3. உணர்வு எழுத்து, 4. ஒலி எழுத்து என்று குறித்துள்ளார். யாப்பருங்கல இறுதிச் சூத்திரவுரையில் ஓராசிரியனுக்குத் தெரிந்திருக்கவேண்டிய எழுத்து வகைகளைக் குறிக்கும் இடத்தில் உரையாசிரியர், இவ்வெழுத்துக்களுக்குரிய சூத்திரங்களை மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார்.

1 "காணப் பட்ட வுருவம் எல்லாம்
மாணக் காட்டும் வகைமை நாடி
வழுவில் ஓவியன் கைவினை போல
எழுதப் படுவது **உருவெழுத் தாகும்.**"

2 "கொண்டவோர் குறியாற் கொண்ட அதனை
உண்டென் றுணர்த்துவது **உணர்வெழுத் தாகும்.**"

3 "இசைப்படு புல்லின் எழாஅல் போலச்
செவிப்புல னாவது **ஒலியெழுத் தாகும்.**"

4 "முதற்கா ரணமும் துணைக்கா ரணமும்
துணைக்கா ரணத்தொடு தொடரிய உணர்வும்
அவற்றெடு புணர்ந்த அகத்தெழு வளியின்
மிடற்றுப்பிறந் திசைப்பது **தன்மை எழுத்து.**"

இவையன்றி, அச்சூத்திரவுரையில் வேறுபல எழுத்து வகைகளும் குறிக்கப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தில், காவிரிப்பூம் பட்டிணத்துத் துறைமுகத்தில் இறக்குமதியான மூட்டைகட்குக் 'கண்

ணெழுத்து' இடப்பட்டது என்பது கூறப்பட்டுள்ளது. 'கண்ணெழுத்து-சித்திர எழுத்து' அன்று நச்சினார்க்கினியர் பொருள் கூறலை நோக்க, சிலப்பதிகார காலத்திலும் ஒருவகைச் சித்திர எழுத்துக்கள் குறிப்பிட்ட சில காரியங்களுக்கேனும் வழக்கில் இருந்தன என்று கருத இடமுண்டாகிறது. இவை நிற்க.

இந்திய எழுத்துக்கள்

வரலாற்று உண்மைக்குப் பொருந்தியினவாக ஆராய்ச்சியாளர் ஒப்புக்கொண்ட இந்திய எழுத்துக்கள் நான்கு வகைப்படும். அவை (1) பிராமி, (2) கரோஷ்டி, (3) திராவிட, (4) யவனாணியா என்பன. இவற்றுள் யவனாணியா என்பது கிரேக்கரும் அவரைச் சார்ந்தவரும் பயன்படுத்தி வந்தவை. 'கரோஷ்ட' என்பது வடமேற்கு இந்தியாவின் ஒரு பகுதியில் ஏறத்தாழக் கி. பி. 4-ஆம் நூற்றாண்டில் வழக்கில் இருந்த எழுத்து முறையாகும். பிராமி என்பது அசோகனுடைய கல்வெட்டுக்களிலும், கி. மு. முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் தென் இந்தியக் குகைகளிலும் காணப்படும் எழுத்து முறையாகும். பிராமி எழுத்து முறை மேற்சொன்ன இரண்டு எழுத்து முறைக்கும் மாறுபட்டது. பிராமி எழுத்துக்களை நன்கு ஆராய்ந்த அறிஞர்கள், அது தமிழுக்கென அமைக்கப்பட்ட குறியாகலாம் எனக் கருதுகின்றனர். திராவிட என்பது வட்டெழுத்து. உருவெழுத்து முதலிய நிலைகளைத் தாண்டி அகர வரிசை எழுத்துக்களைப் பெற்ற பிராமிலிபி, ஏறத்தாழக் கி. மு. 3-ஆம் நூற்றாண்டில் தமிழகத்திற்

புகுந்து, நாட்டு நிலைக்கேற்பச் சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து வட்டெழுத்தாக மாறியிருத்தல் வேண்டும் என்று அறிஞர் கருதுகின்றனர். வட்டெழுத்து ஒரு காலத்தில் தமிழகம் முழுதும் வழக்கில் இருந்திருத்தல் வேண்டும். தொண்டை நாட்டிலும் காவிரி வரையுள்ள தமிழகத்திலும் பல்லவராட்சி ஏற்பட்ட பிறகு, பல்லவரால் போற்றி வளர்க்கப்பட்ட பிராமிலிபியின் வழிவந்த கிரந்தமும், அதனை ஒட்டி வளர்ந்த கிரந்தத் தமிழும் வழக்காறு பெறத்தொடங்கின. அக்காலத்தில் பல்லவராட்சி ஏற்படாத பாண்டியநாடு, சேரநாடு, கொங்கு நாடுகளில் வட்டெழுத்து வழங்கிவந்தது.

பல்லவர்க்குப் பின்பு தென்னிந்தியா முழுவதையும் ஒரு குடைக் கீழ் வைத்தாண்ட சோழர் காலத்தில் கிரந்தத்தமிழே பெருவழக்குப் பெற்றது.

சோழர்க்குப்பின் தமிழகத்தை ஆண்ட விஜய நகர அரசர் காலத்திலும் மகாராஷ்டிர மன்னர்கள் காலத்திலும் நாகர எழுத்துக்கள் தமிழகத்தில் இடம் பெற்றன.

இந்திய சாஸனங்கள்

இந்திய எழுத்துக்களைப்பற்றி இதுகாறும் கூறப்பெற்ற விவரங்கள், இந்தியாவில் உள்ள கல்வெட்டுக்களிலிருந்தும் செப்பேடுகளிலிருந்தும் தெரிவனவாகும். இந்திய சாஸனங்கள் எவ்வாறு தோன்றலாயின என்பது அடுத்துவரும் வினவாகும். பிராமி எழுத்துக்களைக் கொண்ட அசோகன் காலத்துக் கல்வெட்டுக்கள் பௌத்த சமயக்கொள்கைகளை மக்களிடைப் பரப்புவதற்காக உண்டானவை

யாகும். பின்வந்த பட்டயங்களும் கல்வெட்டுக்களும் கல்வியிற் பெரியவர்க்கும், வீரர்கட்கும், கோயில்கட்கும், அவ்வப்போது நிலதானம் முதலிய தானங்கள் செய்யப்பட்டபோது எழுதப் பெற்றவையாகும். ஒரு பொருளைக் குறித்துக் கல்லில் வெட்டி, அக்கல்லைப் பலரும் சேர்ந்து பார்க்கத்தக்க கோயில் போன்ற பொது இடங்களில் பதித்து, மக்களைக் காணச் செய்வது நம்நாட்டில் இன்றளவும் இருந்துவரும் வழக்கமாகும். போரில் இறந்த வீரனுக்குக் கல் நாட்டி, அதன் அடியில் அவனுடைய பெயரையும் சிறப்புக்களையும் வெட்டுவித்தல் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது.

அரசர்கள் கற்றூண்களை நாட்டி, அவற்றில் தங்கள் வெற்றிகளைக் குறிக்கத் தொடங்கினது முதல், கல்வெட்டுக்கள் நாட்டில் மதிப்படையலாயின. ஏறத்தாழக் கி. மு. 170-இல் கலிங்கப் பேரரசனாக இருந்த **காரவேலன்** உதயகிரியில் நாட்டிய ஹதிகும்பாதூண் கல்வெட்டுக் குறிக்கத் தக்கது. தனக்கு 117 ஆண்டுகட்கு முன்பு (ஏறத்தாழக் கி. மு. மூன்றும் நூற்றாண்டில்) தமிழக வேந்தர் ஒற்றுமையுற்று வன்மையோடிருந்தனர் என்பதை அவன் அக்கல்வெட்டில் குறித்துள்ளான். மோரியப் படையெடுப்புத் தமிழகத்தில் நடந்து படுதோல்வியுற்றது என்பதைச் சங்க நூல்களின் வாயிலாக அறிகிறோம். ஆயின், அதன் காலம் புலப்படவில்லை. காரவேலன் கல்வெட்டுச் சான்றை நோக்க, வலிமிக்க மோரியர் படையெடுத்துத் தோல்வியுற்றதையும் காண, அத்தோல்விக்குத் தமிழரசர் ஒற்றுமையே காரணம் என்பதையும், அப் படையெடுப்பின் காலம் கி. மு. 3-ஆம் நூற்றாண்

டாக இருக்கலாம் என்றும் ஊகித்தல் தவருகாது. இவ்வாறு இந்திய வரலாறு கட்ட, இலக்கியத்திற்கு உறுதுணையாக உதவுவது கல்வெட்டாகும்.

கி. பி. நான்காம் நூற்ருண்டில் பேரரசனுக இருந்த சமுத்ர குப்தன் கி. பி. 340-இல் தக்கணத்தின் மீதும் தென்னிந்தியாவின் மீதும் படையெடுத்து வந்தான். அவனது வெற்றியைக் குறிப்பது அல்லஹபாத்தில் உள்ள தூரண்கல்வெட்டாகும். அதில் பல அரசர் பெயர்களும் அவர்கள் நாடும் ஊரும் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகச் சிறந்த குறிப்பு - காஞ்சியை விஷ்ணுகோபன் என்ற பல்லவன் ஆண்டுவந்தான் என்பது. பல்லவர் என்ற சொல்லே சங்க நூல்களில் இல்லை. சங்க காலத்தின் இறுதியில், காஞ்சி சோழராட்சியில் இருந்ததை மணிமேகலை குறிக்கிறது. கி. பி. 340-இல் காஞ்சியில் பல்லவ வேந்தன் இருந்தான் என்பதை நோக்க, பல்லவர் சங்கப் பாடல்களில் குறிக்கப்படாமையையும் நோக்க, சங்கத்தின் இறுதிக் காலம் ஏறத்தாழக் கி. பி. 300 என்று கொள்ளச் சமுத்திரகுப்தனது வெற்றித்தூண் கல் வெட்டு உதவிபுரிதலைக் காணலாம்.

வடநாட்டு ஹர்ஷனையே புறங்கண்ட சாளுக்கிய வேந்தனை இரண்டாம் புலிகேசி என்பவன் சுமார் கி.பி. 642-இல் நரசிம்மவர்மனிடம் தோல்வியுற்ருன். அவனது தலைநகர் வீழ்ந்தது. அங்கொரு வெற்றித் தூண் எழுந்தது. அதில் பல்லவன் வெற்றி பெற்றதையும்,வாதாபி பல்லவராட்சியில் 13ஆண்டு கள் இருந்ததையும் அத்தூண் கல்வெட்டுக் குறிக் கிறது. தம் அரசன் ஏவலாற் சென்றுவடபுலத்து

வாதாபியை வென்றவர் சிறுத்தொண்டர் என்று சேக்கிழார் தமது வரலாற்றுச் சிறப்புடைய பெரிய புராணத்தில் பாடியுள்ளார். வாதாபி இவ்வாறு வீழ்த்தப்பட்ட காலம் கி. பி. 642 என்று மேற் சொன்ன கல்வெட்டுக் குறிக்கிறது. இதனுல் சிறுத்தொண்டர் காலம் இன்னதென உறுதிப் படுகிறது. அதனுல் அவரது சமகாலத்தவரான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், நின்ற சீர் நெடுமாறர் முதலியோர் காலமும் உறுதிப்படுகிறது. வாதாபிக் கல்வெட்டுச் செய்தி பெரியபுராணச் செய்திக்கு உறுதுணையாக நின்று, சமயாச்சாரியர் காலத்தை அறியவும் பெருந்துணை புரியும் பெற்றியை நாம் நன்கு உணரலாம்.

இப்பல்லவர் காலத்துக் கல்வெட்டுக்களில் மன்னன் பெயர், அவனுடைய விருதுப் பெயர்கள். அவனுடைய போர்ச்சிறப்புகள், கல்வெட்டு எழுந்த நோக்கம் முதலியன சுருங்கிய அளவில் குறிக்கப் பட்டன ; ஆயின், கூரம் பட்டயம் போன்ற பல்லவர் பட்டயங்களில் அவ்வேந்தர்கள் செய்த போர்களின் வருணனைகள் விரிவான முறையில் வடமொழிச் சுலோகங்களாகக் காணக்கிடக்கின்றன.

மெய்க்கீர்த்தி

பல்லவர்க்குப் பின்வந்த விஜயாலயன் மரபினரான பிற்காலச் சோழப் பேரரசருள் முதலாம் இராஜராஜன் கால முதலே தென் இந்தியக் கல்வெட்டுக்களிலும் பட்டயங்களிலும் விரிவான முறையில் அரசர் தம் வெற்றிகளை முறைப்படுத்திக்கூறும் 'மெய்க்கீர்த்தி' இடம் பெறலாயிற்று. மெய்க்

கீர்த்தி எப்படி அமைந்திருக்கும் என்பதைப் பின் வரும் உதாரணம் கொண்டு அறியலாம்.

"ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் போலப் பெருநிலச் செல்வியும் தனக்கே உரிமை பூண்டமை மனக் கொளக் காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி வேங்கை நாடும் கங்கபாடியும் நுளம்பபாடியும் தடிகை பாடியும் குடமலைநாடும் கொல்லமும் கலிங்கமும் முரட் டொழில் சிங்களர் ஈழமண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமும் முன்னீர்ப் பழந்தீவு பன்னீராயி ரமும் திண்டிறல் வென்றித் தண்டாற்கொண்ட தன்னெழில்வளர் ஊழியுள் எல்லா யாண்டுந் தொழுதகை விளங்கும் யாண்டே செழியரைத் தேசு கொள் ஸ்ரீ கோராஜகேசரிவர்மரான ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு 26-வது......................."

இதனால், இராஜராஜன் தனது 26 ஆம் ஆட்சி யாண்டுக்குள் சேர நாடு, வேங்கைநாடு எனப்படும் கீழைச் சாளுக்கிய நாடு, கங்கபாடி, நுளம்பபாடி, தடிகைபாடி, குடமலைநாடு, கொல்லம், கலிங்கம், ஈழமண்டலம், முன்னீர்ப்பழந்தீவு பன்னீராயிரம் எனப்படும் மாலத்தீவுகள் என்பவற்றை வென்று சோழப் பேரரசனாக விளங்கினான் என்பது தெளி வாதல் காணலாம்.

இவ்வாறு சாஸனங்களில் இராஜராஜன் நுழைத்த மெய்க்கீர்த்தி முறை பின்வந்த சோழப் பேரரசர் அனைவராலும் கைக்கொள்ளப்பட்டது. மேலும் சோழப் பேரரசர் சமயவுணர்ச்சி மிக்கவரா யிருந்தமையால், அவர்கள் காலத்தில் கோவில்கள் பெருஞ்சிறப்புற்றன ; அரசன் முதல் சாதாரணக் குடிமகன் ஈறாக அனைவருமே கோவில்களைத் தம்

உயிரெனக் கருதி, அவற்றின் வளர்ச்சிக்குத் தம்மாலான அறங்களைச்செய்தனர்; அவ்வறங்களைக் கல்வெட்டுக்களில் பொறித்தனர். எனவே, சோழர் காலத்தில் ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்கள் ஏற்பட்டன.

கல்வெட்டுக்கள் உணர்த்துவன

கல்வெட்டுக்கள் அனைத்தும் வேந்தர் தம் போர்ச்செயல்கள், அரசியல் அமைப்பு, கொடைச் சிறப்பு, சமயநிலை, நாட்டு நடப்பு, உள்நாட்டு வாணிகம், வெளி நாட்டு வாணிகம், கைத்தொழில், பயிர்த்தொழில், நாட்டு விளைபொருள்கள், அயல் நாட்டு உறவு, நாட்டில் வழங்கிய எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் முதலிய அளவைகள், பல வகை ஆடைகள், அணிகள் முதலியன பற்றிய விவரங்களை நமக்குத் தெரிவிக்கின்றன. இவற்றுடன், இலக்கியங்களில் உள்ள பல விளங்காத பகுதிகட்கும் கல்வெட்டுக்கள் விளக்கம் தருகின்றன. சிறுத்தொண்டர் வாதாபி வென்ற காலத்தை உறுதிப்படுத்த வாதாபிக் கல்வெட்டுத்தானே உதவி புரிந்தது! மற்றொரு சிறந்த செய்தியையும் இங்குக் குறிக்க விரும்புகிறேன்.

தன் மைந்தனது தேர்க்காலில் பசுக்கன்று அகப்பட்டு இறந்தமைக்காக, அம்மகன் தன் ஒரே மைந்தன் என்பதையும் கருதாது, அவனைத் தேரூர்ந்து கொன்ற மநுநீதிச் சோழனது வரலாறு முழுவதையும் - அதாவது, அரசன் ஏவற்படி அரச குமாரனைக் கொல்ல மனம்வராது தானேதற்கொலை செய்துகொண்ட அமைச்சன் செயல் உட்பட எந்தத் தமிழ் நூலிலும் கூறப்படவில்லை என்பது நோக்கத் தக்கது. இந்த விபரங்களை எல்லாம் நமக்குத் தரும்

நூல் பெரிய புராணம் ஒன்றுதான். அந்நூலாசிரியர் இவ்விவரங்களை எங்கிருந்து பெற்றார் எனின் அவருக்குச் சிறிது முன்னர்ப் பொறிக்கப்பெற்ற திருவாரூர்க் கோவிலில் உள்ள பெரிய கல்வெட்டி லிருந்துதான் எனக்கூறலாம். சேக்கிழார் இரண் டாம் குலோத்துங்கன் காலத்தவர். மேற்சொன்ன கல்வெட்டு இவ்விரண்டாம் குலோத்துங்கனுக்குத் தந்தையான விக்கிரம சோழன் காலத்தில் பொறிக் கப்பட்டது. மனு வேந்தன் ஆணையை நிறைவேற்ற மனமில்லாது இறந்த அமைச்சனது பரம்பரையி னருள், ஒருவன் விக்கிரம சோழனுக்கு அமைச்சன். அவன் பெயர் பாலையூருடையான் சந்திரசேகரன் ஆதிவிடங்கனான குலோத்துங்க சோழ 'மாவலி வாணராயன் என்பவன்.

சுந்தரருடைய தாயாரான இசை ஞானியார் திருவாரூர்க் கோவில் தலைமை அர்ச்சகரான ஞான சிவாசாரியார் மகளார் என்பதைத் திருவாரூர்க் கல்வெட்டே உணர்த்துகின்றது. இவ்வாறு கல் வெட்டுக்கள் உணர்த்தும் அரிய செய்திகள் மிகப் பல. இவை நாட்டின் பழம்பெருமைக்கு உயிர்நாடி ஆதலை நன்குணர்ந்தே அக்காலமக்கள் இவற்றைப் பொன்னேபோலப் போற்றிவந்தனர் ; இவை சிறி தும் பழுதுபடாதபடி எண்ணெய் பூசிப் பாதுகாத்து வந்தனர் ; கல்வெட்டுகளுக்குச் செப்பேடுகளில் படியும் எடுத்துவைத்திருந்தனர் ; பழுதுற்ற கோவிலையிடித்துப் பழுதுபார்ப்பதற்கு முன்பு, அவற்றில் இருந்த கல்வெட்டுச் செய்திகளைப் பனை யோலைகளில் எழுதிக்கொண்டு, கோவில் திருப்பணி முடிந்த பின்னர், அவற்றை ஊரவையோர் காண, அக்கோவிற் சுவர்களில் பொறித்துவைத்தனர்.

ஆராய்ச்சியாளர் உழைப்பு

இங்ஙனம் நம் முன்னோரால் பாதுகாக்கப்பட்டு வந்த கல்வெட்டுக்கள் இடைக்காலத்தில் ஏற்பட்ட ஆட்சி மாறுபாடுகளால் கவனிக்கப்படாமல் கிடந்தன. ஆங்கில ஆட்சி ஏற்பட்ட பிறகு ஊக்கமும் உழைப்பும் கொண்ட மேனாட்டறிஞர் பலர், சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியா வந்தனர். அவருட் சிலர் வடமொழி நூல்களையும் தென்மொழி நூல்களையும் ஆராய்ந்தனர். வேறு சிலர் ஒவ்வொரு மாகாண மொழியையும் உழைத்துக்கற்று ஆராயத் தொடங்கினர். முன் சொல்லப்பட்ட பிராமி, வட்டெழுத்து முதலிய எழுத்துக்களைக் கற்ற அறிஞர் சிலர் இந்திய சாஸனங்களைப் படித்தறிய முற்பட்டனர்; அவற்றைப் படியெடுத்தனர், ‘இண்டியன் ஆன்டிகுவெரி’ முதலிய ஆங்கிலத் தாள்களில் வெளியிட்டு, அவை பற்றிய தங்கள் ஆராய்ச்சியையும் தெரிவித்தனர். இத்துறையில் உழைத்தவருள் **பிலீட் (Fleet)**, பேராசிரியர் **வெப்பர்**, **எம். ஏ. பாரத்**, **எச். ஜே. ஸ்டோக்ஸ்**, **மக்கென்ஸி**, சர் டபிள்யூ. எலியட், சி. பி. **பிரௌன்**, என்பவர் குறிக்கத்தக்கவராவர். இப்பெருமக்களது அரிய உழைப்பால், கல்விகற்ற இந்தியர் சிலர் இத்துறையில் பயிற்சிபெறலாயினர். இந்நிலையில் **டாக்டர் உல்ஸ்** என்ற ஜெர்மானியர் இந்தியா வந்தார்; ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்களைக் கண்டார்; அக்காலை அரசப் பிரதிநிதியாயிருந்த ரிப்பன் பிரபுவிடம் (1884-1888) இந்தியக் கல்வெட்டுக்களின் அருமைப்பாட்டினை விளக்கி, அவற்றைப் படியெடுத்து, ஆராய்ச்சி செய்யவும் வெளியிடவும் ஓர் இலாகாவை அமைக்கச் செய்தார். அதுவே **கல்வெட்டு இலாகா** என்பது. அவ்விலாகா

வில் அப்பெரியாரும் இருந்து உழைத்தார். அந் நிலையில் "தென் இந்தியக் கல்வெட்டுகள்" என்னும் பெயருடன் அரசாங்க ஆதரவில் மூன்று தொகுதிகள் வெளிவந்தன. ஒவ்வொரு கல்வெட்டுக்கும் ஏற்ற முன்னுரை, ஆங்கில மொழிபெயர்ப்பு, அருஞ்சொல் விளக்கம் முதலிய வெளியிடப் பெற்றன.

உல்ஸ் துரைமகனுர்க்குப் பின்வந்த கல்வெட்டுத் தொகுதிகள் ஒன்பதாகும். ஆயின், அவற்றில் வெறுங் கல்வெட்டுப் பகுதிகளே வெளிவந்துள்ளன. படியெடுத்து இன்றளவும் வெளிவராத கல்வெட்டுக்கள் சில ஆயிரமேனும் இருக்கலாம். அவை அனைத்தும் தக்க அறிஞரால் விளக்கங்களுடன் வெளியிடப்படுமாயின், மேலும் பல உண்மைகளை வரலாற்று உலகமும், பொதுமக்கள் உலகமும் அறிந்து பயன்பெற இடமுண்டாகும்.

6. ‘ ப்ராமன் ’ என்னும் சொற்பொருள் *

‘ பிராமன் ’ (பிராமணர்) என்னும் வடமொழிச் சொல்லுக்குப் பொருள் காண வேண்டுமாயின், வட மொழி ஆராய்ச்சி வேண்டற்பாலது. அத்துடன் ஐரோப்பிய மொழிகளின் அறிவும் வேண்டற்பாலது. ‘ஆரியர் இந்தியா, பாரசீகம், இத்தாலி, ஜெர்மனி முதலியஇடங்களிற்சென்று குடியேறியவர்ஆதலின், அவர்கள் பேசிய வடமொழி,பாரசீகமொழி, லத்தீன், பழைய ஜெர்மன் ஆகிய மொழிகள் ஓரினத்தன ஆகும். ஆதலாற்றான் ஒப்பிலக்கண முறைப்படி இவற்றை நோக்குதல் வேண்டும். இங்ஙனம் நோக்குதலாலும், இப்பலதிறப்பட்ட ஆரிய மக்கள் வரலாற்றை நன்கறிவதாலும் சில நுட்பமான செய்திகள் ஒருமைப்பட்டிருத்தல் அறிதல் கூடும். இது நிற்க, ‘ பிராமன் ’ என்னும் சொல், லத்தீன், பாரசீக மொழிகளில் உள்ளதா ? இருப்பின், அதன் பொருள் யாது ? அது யாரைக்குறித்தது ? என்னும்

---

* இவ்வாராய்ச்சிக் கட்டுரை, C. M. மல்வஙீ M. A. B. Litt., என்பாரது ‘இந்திய ஐரோப்பிய மொழி’ என்ற ஆராய்ச்சி நூலைக் கொண்டும் (பக். 93-95), ஹூக்ளி-கல்லூரி வரலாற்றுப் பேராசிரியரான நிருபேந்திரகுமார் டட் M. A., என்பாரது ‘ இந்திய சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும் ’ என்னும் அரியஆராய்ச்சி நூலைக்கொண்டும் எழுதப்பெற்றது.

வினைக்கட்கு உற்ற விடைகளைக் காணல் சுவை பயப்பதாகும்.

பரெஸ்மன் (Baresman) - புற்கம்பிகளின் கட்டு, அல்லது வேள்வி மேடையை மூடுவதற்காகப் பரப்பப்பட்டதும் உயர்த்தப்பட்டதுமான தூய 'புல் கட்டு' அல்லது, வேள்விக்கென அமைக்கப்படும் 'புல் ஆசனம்.'

பரெஸிஷ் (Barezish) – மெத்தெனும் ஆசனம் (cushion); இந்தியாவில் 'குசைப்புல்'; வேள்விக் களத்தில் விரிக்கப்படுவது ; கடவுளர்க்கு ஆசன மாகப் போடுவது.

பராமன் (Brahman) - ஆண்பாற் சொல்; யாக மேடையைத் தயாரிப்பவன் அல்லது யாகமேடை யைப் புல்படலத்தால் மூடுபவன்.

ப்ரமன் (Brahman)- யாகம் (அஃறிணை, ஒன்றன் பால்). 'ப்ரமன்' என்னும் சொல் முதலில் யாக மேடைக்கு அமைக்கப்படும் புல்லுக்காகி, யாக மேடைக்காகி, பின்னர் யாகத்துக்காகி, அதனைச் செய்யும் மனிதனுக்காகி வந்தது என்பது நன்கு அறியத்தகுவது. இங்ஙனம் ஒரு சொல் மும் முறை பல்வேறு பொருள்களைக் குறித்து வருதலை 'மும்மடி ஆகுபெயர்' எனத் தமிழ் இலக்கணம் கூறும்.

இத்தாலி நாட்டில் பூசை முதலியன செய்த வன் 'ப்லாமென்' (flamen) எனப்பட்டான். இந்த 'ப்லாமென்' என்பார் சிறு தொகையினரே ; ஒரு குறிப்பிட்ட சாதியாரல்லர் ; இத்தொழில் பரம் பரைப் பாத்தியமுடையதன்று. நகர மக்களால் இறைவழிபாடு செய்ய இவர்கள் அமர்த்தப்பட்டிருந்

தனர். ரோமாபுரியில் இருந்த முப்பது பண்டைக் குடிகள் (tribes) தத்தமக்கெனத் தனித்தனிப் 'ப்லாமென்' உடையராயிருந்தனர். இவரன்றித் தனித்தனிக் கடவுள் பூசை செய்வதற்கெனப் பதினைந்து 'ப்லாமென்' அமர்த்தப்பட்டிருந் தனர். இவருள் முதன்மையாக இருக்கத்தக்க மூவர்—ரோமாபுரியில் இருந்த **இரண்டு உயரிய வருணங்களைச்** சேர்ந்தவராவர். [ரிக்வேத காலத்தில் இந்தியா வந்த ஆரியர்க்குள்ளும் முதல் இரண்டு வகுப்பாரே யாகம்செய்து வந்தனர் என்பது அறியத் தகுவது. விசுவாமித்திரர் திரிசங்கு மன்னர் செய்த யாகத்துக்கும் புரோகிதராக இருந்தார். 'தேவபி' என்னும் க்ஷத்திரியர், சந்தனுவின் புரோகிதராக இருந்தார்."[1]] இம்மூவருள் தலைவனாக இருந்தவன் '**தியாலிஸ்**' (Flamen Dialis) எனப்பட்டான். அவன் ஜூபிட்டர் (தியாலிஸ் பிதா) தேவனின் புரோகிதன். அவனே வேத காலத்தில் '**தியாயஸ்** பிதா'

---

1. நிருபேந்திர குமார்டட் எழுதிய 'இந்திய சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும்'—புத். 1, பக். 39, 52-54

இங்ஙனமே, பாரசீகம் புக்க ஆரியருள்ளும் **முதல் மூன்று வருணங்கள்** இருந்தன என்பது '**அவெஸ்டா**' (**Avesta**) என்னும் பாரசீகர் மதநூலால் அறியலாம். எனவே, இந்தியா முதலிய இடங்கட்கு வருமுன்னரே ஆரியர்க்குள் முதல் மூன்று வருணங்கள் பெயரளவில் (தொழில் அளவில்) ஏற்பட்டிருந்தன என்பது நன்கு புலனாகும். ஆரியர் இந்தியா வந்த பின்னர்த் தம்மினும் நிறம்—மொழி—நாகரிகம் இவற்றில் வேறுபட்ட மக்களைத் '**தாசர்**' எனவும் '**சூத்திரர்**' எனவும் கொண்டனர் என்பது அறியத்தக்கது.

(Dyaus Pita) எனப்பட்ட கடவுளின் புரோகிதன்.[2] அவன் தன் மனைவி உயிரோடிருக்கும் வரைதான் புரோகிதனாக இருத்தல் வேண்டும். ஏனெனில் இருவரும் சேர்ந்து சில சடங்குகள் செய்யவேண்டியிருந்தன. மனைவி இறப்பின், அவன் வேலையினின்று நீங்குதல் வேண்டும் என்பது விதி. 'ப்லாமென்' வேலை 'ப்லாமோனியம்' (flamaniam) எனப்படும். இத்துடன் 'ப்ராமன்' வேலை 'ப்ராமணீயம்' எனப் படுதலை ஒப்பு நோக்கிச்சுவைக்க.

பாரசீக 'ப்ரெஸ்மன்' என்றும் 'புல் கதிர்க்கட்டு' பாரசீகப் புரோகிதனது இன்றியமையாத பொருளாக விளங்கினது போல, ரோமாபுரியில் பாஸீஸ் (fasees) என்பன கோடரி கொண்டனவாய் நீதிபதிகள் முன்னும், 'ப்ராமன் தியாலிஸ்' என்னும் பிரதம குரு முன்னும் கொண்டு செல்லப்பட்டன. இவை குற்றவாளிகளைத் தண்டிக்க வல்லன; ஆனால், அவர்களைத் தூய்மைப்படுத்தும் கருவிகளாகவே கொண்டு செல்லப்பட்டன. அக்கால நீதிபதி அல்லது புரோகிதன் தெய்வத்தன்மையுடையவன்; தீயவரையும் தீய ஆவிகளையும் விரட்டுபவன் என்று நம்பப்பட்டான். அதனாற்றான் புரோகிதன் அதனைக் கையில் தாங்கி வருதல் வழக்கம். இஃதன்றி, ரோமாபுரியில் யாகத்துக்கென்று இலைக்

---

2. "வேதகாலத்துக்கு முற்பட்டவரும் இந்திய—ஈரானிய ஆரியர் காலத்துக்கு முற்பட்டவருமான தேவர்கள் 'தியஸ்பிதா, திவொ பிதா' ஆவர். இவர்களே ரோமர்களால் 'ஜுபிட்டர், ஜியஸ் (zeus) எனப்பட்டவர்கள்".— Dr. R. Timmerman's article in 'Proceedings and Transactions of the Third Oriental Corference, Madras 1924, P. 116.

கொத்துக்கள், சில செடிகளின் இலைகள் முதலியன பயன் படுத்தப்பட்டன. இவை '**வெர்பேன்**' (Verbanae) எனப்பட்டன. [இப்பெயருடன் ரிக்வேத காலத் '**தர்பை**' என்னும் (புல்-பெயர்) ஒப்பிடுக.] ரோமாபுரிப் புலவர் ஒருவர் புதிய புல்லாலும் வெர் பேனுலும் மேடையமைக்க விரும்புவதாகவும், பிறி தோரிடத்தில் 'வெர்பேனல் மேடை சுற்றி அமைக் கப்பட்டுப் பலியிட்ட ஆட்டிறைச்சி சிதறப்பட்டதாக இருத்தல் வேண்டும்' எனவும் கூறியுள்ளமை நோக்குக. வேறொரு லத்தீன் புலவர் அரசனை நோக்கி, "பொதுக்கடவுளர் பொருட்டுச் சிலர் வெர்பேனையும் புல்மேடையினையும் அமைத்தனர்; சிலர் தீயையும் தண்ணீரையும்........தங்கள் நெற் றியில் வெர்பேனையும் கட்டிக்கொண்டு கொணர்ந் தனர்," என்று கூறியுள்ளார். இந்த 'வெர்பேன்' என்பது 'ப்ரெஸ்மன்' என்பதைப் போன்றது - குசைப்புல்லைப் போன்றது-யாகமேடைக்கு அமைப் பது. இதுவே இத்தாலியில் 'ப்லாமென்,' எனவும், பாரசீகத்தில் '**பரெஸ்மன்**' எனவும், ரிக்வேத இந் தியாவில் '**ப்ரமன்**' எனவும் வழங்கப்பட்டது என்பது இதுகாறும் கூறியவற்ருல் நன்கறியலாம்.[3]

அங்ஙனமாயின், 'ப்ரஹ்மன்' என்பதில் உள்ள 'ப்ரஹ்' என்பது பகுதியாகும். இதில் 'ர்' என்

---

3 "**ப்ராமன்** : இச்சொல் ரிக்வேதத்தில் ஒன்றன் பாலி லும் வழங்கப்பட்டுள்ளது. பின்னர் அது 'சுலோகம், ஆசிரியன், ஓதுவான், ஓதுவான் மகன், ஆசிரியன் மகன், புரோகிதன்' என்னும் பல பொருள்களில் வந் துள்ளது" எனக்கூறும் நிருபேந்திரகுமார் டட் (புத். 1., பக். 40) கூற்று இங்கு நோக்கத்தக்கது.

பது, முற்பட்ட 'ல்' என்பதற்குச் சமம். 'ப்ஹ' (bh) என்பது லத்தீன் மொழியில் 'ப்' (f) ஆகும். எனவே, 'ப்லா மென்' (flamen) என்பது 'ப்ராமன்' (bhraman) எனவரும். 'த்ரஹித்' என்பது (பாரசீகச் சொல்) வடமொழியில் 'த்ராங்மா' எனவரும். எனவே, 'பரெஸ்மன்' என்பது வடமொழியில் 'ப்ராமன்' எனவரும்.

இதுகாறும் கூறியவற்றால்,

லத்தின்—'ப்லாமென்' பாரசீக—'பரெஸ்மன்' சம்ஸ்கிருத—'ப்ராமன்'	என்பன ஒரு பொருளன – ஒரே தொழிலையுடைய புரோகிதனைக் குறிப்பன என்பது நன்கறியலாம்.

எனவே, இச்சொல்மூலம், இவ்வாரியார் பொது இடத்தினின்றும் பிரிவதற்கு முன்னரே ஏற்பட்ட தென்பதும், புரோகிதக் கூட்டம் அம்மூல இடத்திலேயே இவர்கள் பிரிவதற்கு முன்னரே இருந்திருத்தல் வேண்டும் என்பதும், ஒருவிதக் கொலை வேள்வி அவ்விடத்திற்றனே நடைபெற்று வந்த தென்பதும், குறைந்த பட்சம் உயர்சாதிகள் அப்பழைய காலத்திலேயே உண்டாகி இருத்தல் வேண்டும் என்பதும் இதுகாறும் கூறிய விளக்கமான விவரங்களால் நன்கறியலாம்.

7. இலக்கியச் சொற்கள்

காவிரிப்பூம்பட்டினம்

1942-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி நான் ஞானசம்பந்தர் பிறந்த ஊரான சீகாழிக்குச் சென்றிருந்தேன். அங்குள்ள திருக் கோயிலை வழிபட்டுத் திருவெண்காட்டுக்குச் செல்லத் தொடங்கினேன். நானும் சீகாழியிலிருந்த என் நண்பரும் ஒற்றைமாட்டு வண்டியில் ஏறிப் பிரயாணமானேம். திருவெண்காட்டுக்குச் செல்லும் பாதை மண்பாதையாக இருந்தது. முதல்நாள் பெய்த மழையால் அப்பாதை சீர்கெட்டிருந்தது. பாதையில் மேடு பள்ளங்கள் மிக்கிருந்தன. மாடு எங்களைவிட மெலிந்ததாகவும் களைத்தும் இருந்தது. அது இழுத்துச் சென்ற வண்டியில் ஏறத்தாழ நான்குமணி நேரம் பிரயாணம் செய்து நாங்கள் நடுப்பகலில் திருவெண்காட்டை அடைந்தோம்.

திருவெண்காட்டில் ஞானசம்பந்தரால் பாடப் பெற்ற மூன்று குளங்களைக் கோவிலில் கண்டோம். அவை பாசிபடிந்து மிகக்கேவல நிலையில் இருந்தன. பின்னர்க் கோவிலை நன்கு பார்வையிட்டு, ஓய்வு கொண்டோம்; மாலை மூன்று மணிக்குப்பிறகு நானும் நண்பரும் புறப்பட்டுக் காவிரிப்பூம்பட்டினத்தைப் பார்க்கச் சென்றேம்.

மாயூரத்திலிருந்து காவிரிப்பூம்பட்டினம் செல்லும் பெரும்பாதையில், திருவெண்காட்டிலிருந்து ஒரு பாதைவந்து கலக்கிறது. அச்சந்திப்பிலிருந்து கடற்கரைவரை செல்லும் பாதையின் நீளம் ஏறத்தாழ மூன்றுமைல் இருக்கும். அப்பாதையின் இருபுறங்களிலும் விட்டுவிட்டு வீடுகளும் கடைகளும் இருக்கின்றன. அந்த மூன்றுமைல் தொலைவும் காவிரிப்பூம்பட்டினத்தின் பகுதியாகும். அப்பாதைக்கு அப்பால் இருபுறங்களிலும் சிற்சில இடங்களில் சில தெருக்கள் இருக்கின்றன. பாதையோரமாகவே 'சாய்க்காடு' என்னும் பாடல் பெற்ற கோவில் இருக்கின்றது. அதற்கப்பால் சிறிது தொலைவில் 'பல்லவனீச்சரம்' என்னும் மற்றொரு பாடல்பெற்ற சிவன்கோவில் காட்சியளிக்கின்றது. குடிசைகளாகவும் ஓட்டுக் கட்டடங்களாகவும் சில கோவில்கள் காணப்பட்டன. நாங்கள் இவை அனைத்தையும் பார்த்துக்கொண்டு கடற்கரைக்குச் சென்றோம்.

காவிரி கடலொடு கலக்குமிடத்தில் நாங்கள் சென்று நின்றபோது, பகலவன் மேல்கடலில் மறைந்தான். காவிரியாற்றின் இருபுறங்களிலும் பரந்தவெளியே காணப்பட்டது. இந்திர விழா, மாதவி முதலியோர் கடலாடிய காட்சி, மாதவியும் கோவலனும் இருந்து கானல்வரிபாடின்மை முதலிய நிகழ்ச்சிகள் எல்லாம் எண்ணி வருந்தினேன்; அவ்வேளையில் காவிரியை நோக்கிநின்று இடப்பக்கம் திரும்பினேன்; ஏறத்தாழ ஐந்நூறு அடிகட்கப்பால் உயர்ந்த மணல் மேட்டைக் கண்டேன். அதன்மீது பல குடிசைகள் இருந்தன. 'அம் மணல் மேட்டுக்கடியில் பண்டைப் பூம்புகார் நகரத்

தின் ஒரு பகுதி அடங்கி இருக்குமோ? யாரைக் கேட்டால் உண்மை தெரியும்?' என்று யான் எண்ணமிட்டுக் கொண்டிருந்தேன். அப்பொழுது அம்மேட்டிலிருந்த குடிசையொன்றிலிருந்து ஒரு நங்கை வெளிப்பட்டாள். அவள் ஒரு கூடையைத் தலையில் வைத்துக்கொண்டு எங்கள் பக்கமாக வந்தாள். அவளைக் கேட்டு ஐயம் தீருவோம் என்று நான் எண்ணி மகிழ்ந்தேன்.

அம்மங்கை நல்லாள் காவிரியை அடைந்தாள். காவிரி கடலொடு கலக்குமிடத்தில் அரை அடி முதல் ஒரு அடி ஆழமே இருந்தது. நான், அப் பெண்மணியைப் பார்த்து, "அம்மா, இந்த மணல் மேட்டில் குடியிருப்போர் யார்? என்று கேட்டேன். அவள் உடனே, "நாங்கள்தானையா, குடி இருக் கிறோம்" என்று பதிலளித்தாள். "நீங்கள் என்றால் யார்?" என்று யான் கேட்டேன். அந் நங்கை, 'மீன் பிடிப்பவர்கள்' என்றாள். "நீங்கள் குடியிருக்கும் மேட்டை அரசாங்கத்தைச் சேர்ந்தவர் கள் எப்பொழுதாவது வந்து தோண்டிப் பார்த்த துண்டா?" என்று நான் கேட்டேன். உடனே அவள், "அங்கு யாரும் அகழ்ந்ததேயில்லை" என்று பதில் கூறிச் சென்றாள். 'அகழ்ந்தது' என்ற சொல்லைக் கேட்டவுடன் யான் திடுக்கிட்டேன். உடனே எனக்கு,

> "அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
> இகழ்வார்ப் பொறுத்தல் தலை."

என்னும் திருக்குறள் நினைவுக்கு வந்தது.

"திருக்குறள் போன்ற சங்க நூல்கள், பல நூற்றுண்டுகட்கு முன் பாடப்பட்டவை. அவற்றில் உள்ள **சொற்கள்** இக்கால மக்களது பேச்சு வழக்கில் இல்லை. ஆதலால் இக்கால மக்கள் அவற்றைப் படித்துப்பொருள் உணர்தல் இயலவில்லை. எனவே, சங்க நூல்களை யெல்லாம் ஒரு கோணியில் போட்டுக் கட்டிக் கடலில் எறிந்துவிடுதல் நல்லது" என்று 'தமிழறிஞர்' ஒருவர் பல ஆண்டுகட்கு முன்னர் நடைபெற்ற சென்னைக் கூட்டமொன்றில் பேசியதும், அது கேட்டு அங்கிருந்த புலவர்கள் நகைத்ததும் என் நினைவிற்கு வந்தன. கல்வியறிவு சிறிதும் இல்லாதவளும் கடற்கரை ஓரமாக வசிப்பவளுமாகிய இக்கரையாளர் நங்கையின் பேச்சு வழக்கில் '**அகழ்தல்**' என்னும் அரிய தமிழ்ச் சொல் இருக்கின்றதே! இவ்வாறு இவளது பேச்சு வழக்கில் இன்னும் எத்துணைச்சொற்கள் இருக்கின்றனவோ! தமிழாசிரியர் பேச்சு வழக்கிலும் இல்லாத இப்பழஞ் சொல், கல்லாத மக்களிடை வழங்கி வருதல்போல, இன்னும் எவ்வெவ்வூரில் கல்லாத மக்களிடம் எத்துணை அரிய சொற்கள் பேச்சு வழக்கில் இருக்கின்றனவோ" என்று எண்ணினேன். உடன்வந்த நண்பர்க்கு 'அகழ்தல்' என்னும் சொல்லின் பொருளையும், அது திருக்குறளில் இடம் பெற்றுள்ளமையும் எடுத்துக் கூறினேன். நண்பர் வியப்புடன் நான் கூறியவற்றைக் கேட்டறிந்தார். "கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்" என்று **தாயுமானவர்** பாராட்டிக் கூறியதற்கு உரிய காரணங்களுள், இலக்கியச் சொற்கள் அக்கல்லாதவரது பேச்சு வழக்கில் இருத்தலும் ஒன்றுகுமோ என்று **எண்ணினேன்.**

திருச்செங்கோட்டில்

திருச்செங்கோட்டுத் தேவஸ்தானத்தில் 1945-ஆம் ஆண்டு ஒரு சொற்பொழிவிற்காகச் சென்றிருந்தேன். இன்று ஈரோட்டு நகராண்மைக் கழகத் தலைவராகவுள்ள உயர்திரு. மீனாட்சிசுந்தர முதலியார் அவர்கள் (B. A., L. T.) என்னுடன் சொற்பொழிவாற்ற வந்திருந்தனர். சொற்பொழிவுகள் முடிந்த மறுநாள் காலையில் நாங்கள் இருவரும் அங்குள்ள ஆலை ஒன்றின் முதல்வராக உள்ள உயர்திரு. வையாபுரி முதலியார் அவர்கள் மாளிகை வாயிலில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது எதிர்வீட்டுத் திண்ணையில் அந்த வீட்டுக்குரிய அம்மையார் ஒரு கூடையைக் கொண்டுவந்து வைத்தார். அதில் துவரம் பருப்பும் ஒரு படியும் இருந்தன. சிறுமி ஒருத்தி வெறுங்கூடை ஒன்றைக் கொண்டு வந்து அத்திண்ணை மீது வைத்தாள். உடனே அந்த அம்மையார் பெரியகூடையிலிருந்து ஒரு படி துவரம் பருப்பை அளந்து சிறு கூடையில் கொட்டினார். அந்தப்படியை அச்சிறிய கூடையிலேயே வைத்தார்; பின்பு அக்கூடையைச் சிறுமியின் இடுப்பில் வைத்து, "அங்கம்மாள் வீட்டில் இக்குறியாப்பைக் கொண்டுபோய்க் கொடுத்து விட்டு வா," என்று கூறினார். சிறுமியும் வெளியில் புறப்பட்டுச் சென்றாள்.

நாங்கள் இருவரும் இந்த நிகழ்ச்சியைக் கவனித்துக் கொண்டிருந்தோம். நண்பர் மீனாட்சிசுந்தர முதலியார் என்னைப் பார்த்து, "அந்த அம்மையார் சொன்ன குறியாப்பு என்பதன் பொருள் உங்களுக்குத் தெரிகிறதா?" என்று கேட்டார்.

"பல மொழி மாக்கள் கலந்துறையும் சென்னையிலிருந்து வந்துள்ள எனக்கு இதன் பொருள் தெரியவில்லையே!" என்றேன். உடனே அவர் நகைத்து, "இச்சொல் இந்நாட்டில் மட்டும்தான் கேட்கப்படுகின்றது. வேறு எங்கும் வழக்கிலில்லை. ஒருவரிடம் ஓரளவில் வாங்கிய பொருளை அதே அளவில் திருப்பிக் கொடுத்தல் 'குறியாப்பு' எனப்படும்.

> "வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்
> குறியெதிர்ப்பை நீர துடைத்து"

என்னும் திருக்குறளில் உள்ள 'குறியெதிர்ப்பை' என்பதுவே 'குறியாப்பு' என மருவி வழங்குகிறது. 'குறியெதிர்ப்பையாவது—அளவு குறித்து வாங்கி அவ்வாங்கியவாறே எதிர் கொடுப்பது'— என்னும் பரிமேலழகர் விளக்கம் உங்களுக்கு நினைவில்லையா?", என்று கேட்டார். அந்த அம்மையார் சொல்லும், முதலியார் விளக்கமும் என்னைச் சொல்லொணு மகிழ்ச்சியில் ஆழ்த்தின. 'சங்க நூல்களைக் கட்டிக் கடலில் எறிதல் வேண்டும்' என்று கூறிய பெரியாரை அப்பொழுது நினைந்தேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

புதுச்சேரியில்

"புதுச்சேரியில் பெரிய இடுகாடும் சுடுகாடும் இருந்தன. அங்குள்ள அரிச்சந்திரன் கோவில் பார்க்கத் தக்கது என்று நண்பர் நாகமாணிக்கம் கூறினர். கிராமணியார் ஒருவர் காசிக்குச் சென்றார்; காசி மயானத்தில் அரிச்சந்திரன் கோவிலுக்குப் போயிருந்தார். அதனைப் பார்த்து மீண்ட

அவர் அதைப் போலவே இங்கும் ஒரு கோவிலைக் கட்டியிருக்கிறார்", என்று நண்பர் கூறினார். நானும் அந்த நண்பரும் அதனைப் பார்க்கச் சென்றோம். எத்துணை நாட்கள் இவ்வுலகில் உலவினாலும் முடிவில் நாம் சென்றடையத் தகுமிடம் அது தானே! ஆதலால் அங்குப் பெரு மகிழ்ச்சியோடு சென்றேன். நண்பரும் வழிகாட்டி வந்தார். அச் சுடுகாட்டில் குறியவும் நெடியவுமான பல சமாதிகள் இருந்தன. அவற்றைப் பார்த்துக்கொண்டே அரிச்சந்திரன் கோவிலை அடைந்தோம். அக் கோவில் வியத்தகு வேலைப்பாடு கொண்டதாக இருந்தது. அவ் வேலைப்பாட்டைக் கண்ட யான், அதனைக் கட்டி முடித்த கிராமணியாரைப் பார்க்க விரும்பினேன்; அவர் இருப்பிடத்தை அறிய அவாவினேன்.

அப்பொழுது அச் சுடுகாட்டுக் காவலன் எங்களை நோக்கி, எதிரே கையை நீட்டி, "இப்படியே நேரே போங்க; ஒரு வாய்க்கால் குறுக்கிடும், அதிலே இழிஞ்சித் தாண்டுங்க. பிறகு நேரே போனால் எதிரில் அவர் மாடி வீடு இருக்கும்" என்று கூறினான். அவனது பேச்சில் வந்த 'இழிஞ்சி' என்ற சொல் என்னைத் திடுக்கிடச் செய்தது. "மலையின் இழிந்து மாக்கடல் நோக்கி", "நிலவரை இழிதரும் பல்யாறு போல" என்னும் சங்ககால வரிகள் (புறம்—42) என் நினைவிற்கு வந்தன. சங்ககாலப் புலவர்கள் கையாண்ட இச்சொல், கல்வியறிவு கடுகளவும் இல்லாத சுடுகாட்டுக் காவலன் வாயில் வழக்குச் சொல்லாக இருந்து வெளிப்படுதலைக் கண்ட யான், மெய்ம்மறந்து நின்றதில் வியப்புண்டோ? வந்த நண்பரிடம் இந்த விவ

ரத்தை உரைத்தேன். அவர் நகைத்துக்கொண்டே, இங்கு இச்சொல் சாதாரணமாக வழக்கில் இருப்பது தான்' என்றார். 'தமிழ் இலக்கியச் சொற்கள் வாழ்கின்றன' என்று என்னை மறந்து யான் கூறினேன்.

அன்று மாலை அதே நண்பருடன் பேசிக் கொண்டிருக்கையில், ஆளவந்தார் என்ற மற்றொரு நண்பர் எங்களைக் காண வந்தார். நான் ஆளவந் தாரை ஒரு கேள்வி கேட்டபொழுது ஆளவந்தார், "அது எனக்குத் தெரியாது. அது பற்றிய விவரம் **தனக்குத்** தெரியும்; **தான்** அடிக்கடி அங்குப் போவது வழக்கம்" என்று கூறினார்.

'*தனக்கு*', '*தான்*' என்னும் சொற்களை அவர் வழங்கக் கேட்ட யான் வியப்புற்றேன். நாம் அவற்றைப் பேசுவதாக இருந்தால், 'இவருக்கு' 'இவர்' என்ற சொற்களைப் பயன்படுத்துவோம். ஆனால் ஆளவந்தார் அவ்வாறு பயன்படுத்தவில்லை.

'**யான்**' என்பது தன்மை ஒருமை; '**நீ(ன்)**' என்பது முன்னிலை ஒருமை; '**தான்**' என்பது படர்க்கை ஒருமை. இவையே பண்டைக்காலத்து வழங்கிய மூவிடத்துப் பெயர்கள். இந்த முறை வைப்பில் கேள்வி கேட்டவன் நான்; பதில் கூறிய வர் ஆளவந்தார்; அப்பதிலில் மற்றொரு நண்பரை (படர்க்கையிடத்தவரை)ப் பற்றிக் கூறினார். எனவே அவர் சொன்ன '*தான்*', '*தனக்கு*' என்பன இலக்கணப் பொருத்தமுடையவையே. இங்ஙனம் *படர்க்கையிடத்தவரைத் 'தான்'* என்று வழங்கு தல் வேறு இடங்களில் காண்டல் அருமையன்றோ? இதனால், 'இன்றைய பேச்சு வழக்கில் சங்ககால

இலக்கியச் சொற்கள் மட்டும் பேசப்படுகின்றன என்று கருத வேண்டா. அவற்ருேடு பண்டை இலக்கண வழக்குகளும் பேசப்படுகின்றன' என்ற பேருண்மையை நாம் அறியலாம்.

கன்னியாகுமரியில்

1939-ஆம் ஆண்டு மே திங்கள் 20-ஆம் நாள் காலையில் யான் கன்னியாகுமரியில் அலைகள் பாதங்களை அலம்ப நின்று கதிரவன் புறப்பாட்டைக்கண்டு கொண்டிருந்தேன். கதிரவன் காலையில் கடலிலிருந்து எழுகின்ற தோற்றத்தையும், அவ்வாறே அவன் மாலையில் கடலில்மறைகின்ற தோற்றத்தையும் கண்டு களிக்கத்தக்க இடம் இந்தியாவில் அஃது ஒன்றுதான். ஆதலால் காலைக்கதிரவனைக் கண்டு களிக்க விரும்பிய யான், மேற்சொன்னவாறு நின்றிருந்தேன். கதிரவன் உருக்கி வார்த்த பொன் தட்டைப்போல மேகங்களை ஊடுருவிக்கொண்டு மேலெழுந்த வண்ணம் இருந்தான். என் ஐம்புலன்களும் கட்புலனுக மாறிக் கதிரவன் காட்சியைக் கண்டு களித்துக்கொண்டிருந்த அளவில், ஓர் ஓசை என் அமைதியைக் குலைத்தது. "ஐயா, ஐயா ஓடி வாங்க ஓடிவாங்க" என்ற ஒலி என்னைத் திரும்பிப் பார்க்கச் செய்தது. ஏறத்தாழ இருபதடி தொலைவில் என் பின்னே நின்றுகொண்டிருந்த சிறுமி ஒருத்தியே இவ்வாறு ஓசை உண்டாக்கினுள் என்பதை அறிந்தேன். நான் சற்றும் நகராமல் அவளை மீண்டும் திரும்பிப் பார்த்தேன். அவள் என்னை நோக்கி ஓடிவந்து, "ஐயா, அதோ பாருங்க பெரிய திரை வருது. ஓடி வாங்க," என்று கூறிக்கொண்டே திரும்பி ஓடினுள். நான் அவள் காட்டிய திசையைப்

பார்த்தேன். ஒரு தென்னை மரம் உயரத்தில் அலை எழும்பிப் படமெடுத்த நாகம் சீறி வருதலைப்போல வருவதைக் கண்டேன். அவ்வளவே: ஓடிய சிறுமிக்கு அப்பாற்சென்று நின்றேன். நான் நின்ற அந்த இடத்தில் (அவ்வளவுதூரம்) அந்த அலைவந்து என் பாதங்களை அலம்பி மீண்டது. அச்சிறுமி தக்க காலத்தில் என்னை எச்சரிக்காமல் தன் வழியே சென்றிருப்பாளாயின், கடலரசன் என்னைக் கவர்ந் திருப்பான். என் உயிரைக் காத்த அச்சிறுமிக்கு வாழ்த்துக் கூறினேன். அடுத்த கணமே அவள் கூறிய திரை என்னும் சொல் நினைவுக்கு வந்தது. "திரை கடலோடியும் திரவியம் தேடு," தொண்டை மான் இளந்திரையன்" என்பனபோன்றவாசகங்கள் என் நினைவிற்குவந்தன. ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்குமேல் சென்னையில்—கடற்கரைப்பட் டினத்தில் வாழ்ந்த யான் 'அலை' என்ற சொல்லைக் கேட்டவன் இலக்கியச் சொல்லாகிய 'திரை' என்பதைக்கேட்டிலேன். இவ்வரிய பழந்தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்திய அச்சிறுமி நெய்தல் நிலச்சிறுமி; கல்வி அறியாதவள், ஆயினும், அவள் சமூகத்தில் அச்சொல் பேச்சு வழக்கில் இருக்கின்றது. இதை நினைத்தபொழுது எனக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை. அப்பொழுது, "சங்க காலச் சொற்கள் இக்கால வழக்கிலில்லை" என்று கூறிய 'பெரி யாரை' எண்ணினேன்.

அருப்புக்கோட்டையில்

தமிழ் வளர்த்த பாண்டிய நாட்டில் தமிழ்ப்பணி செய்ய வந்துள்ள யான்,1954-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அருப்புக்கோட்டையில் சொற்பொழிவாற்றச்

சென்றிருந்தேன். சொற்பொழிவு முடிந்தபின் நண்பர் சிலருடன் ஒரு தெரு வழியே சென்றுகொண்டிருந்தேன். வழியில் சிறு பிள்ளைகள் கூட்டமாக நின்றனர். நானும் நின்றேன். என் பின்வந்த நண்பரும் நின்றனர். அச்சிறுவருள் ஒருவன் மற்றொருவனைத் தன் நண்பர்க்குச் சுட்டிக் காட்டி "இவன் நான்கு மணிக்கு உறங்கப் போனான். நல்ல உறக்கம்போல, அப்போ இருந்து இவ்வளவு நேரம் வரையிலும் உறங்கினான்," என்று கூறி நகைத்தான். 'உறங்க' 'உறக்கம்' என்ற சொற்களைக் கேட்டதும், எனக்கு வியப்பு உண்டாயிற்று. தொண்டை நாட்டிலோ, சோழ நாட்டிலோ 'தூங்க' 'தூக்கம்' என்ற சொற்கள் பேசப்படுகின்றனவே தவிர, 'உறங்க' 'உறக்கம்' என்ற சொற்கள் பேசப்படுதலில்லை.

"உறங்கு வதுபோலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பதும் போலும் பிறப்பு"

என்னும் திருக்குறள் என் நினைவிற்கு வந்தது. திருவள்ளுவர் கையாண்ட இத்தீந்தமிழ்ச் சொல்லைப் பாண்டிய நாட்டில் சிறுவர் முதல் முதியர் ஈறாக அனைவருமே பேசுவதை அறிந்தேன். சங்க காலச் சொற்கள் இறவாமல் இருக்கின்றன என்ற எண்ணம் வரவர வலுப்பட்டது.

முடிவுரை

இவ்வாறு, கல்லாத மக்களிடையே இப்பழந் தமிழ்ச் சொற்கள் பெருவழக்கில் இருக்கின்றன. கற்ற மக்கள் வடமொழி முதலிய பலமொழிச் சொற்களையும் பேச்சில் கலந்து கலந்து, பழந்தமிழ்ச்

சொற்களை வழக்கற்றுப் போகச் செய்துவிட்டனர். இக் கற்றவர் தொடர்பு மிகுதியும் சேராத மக்களிடமே இலக்கியச் சொற்கள் இன்றளவும் உயிர் பெற்று வாழ்கின்றன. இந்த உண்மையை நோக்க, சங்க காலப் புலவர் பாடிய பாக்கள் அக்கால மக்கள் புரிந்துகொள்ளத்தக்க நிலையிலேதான் அமைந்தன- நமக்கு அவை கடுமையாகக் காணப்படினும், அக்கால மக்களுக்கு எளிமையுடையனவாகவே இருந்திருத்தல் வேண்டும் என்னும் பேருண்மை நன்கு புலனாகின்றதன்றோ?

8. மலையாள நாட்டில் தமிழ்ச் சொற்கள்

முன்னுரை

தென்னிந்தியாவில் மேற்குக் கடற்கரையோரமாக உள்ள மலையாள மாவட்டம், கொச்சி நாடு, திருவாங்கூர் நாடு என்னும் மூன்றும் இன்று **மலையாள நாடு** என்று சொல்லப்படுகிறது. இந் நிலப்பகுதியே பண்டைக் காலத்தில் **சேரநாடு** எனப் பெயர்பெற்றது. மிகப் பழைய காலத்திலிருந்து இச் சேர நாடு தமிழ்மொழி பேசப்பட்ட நாடாகவே இருந்தது.

"வட வேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்" என்று, தொல்காப்பியப் பாயிரத்தில் தமிழகத்திற்கு எல்லை கூறப்பட்டுள்ளது. அப்பாயிரம் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது. 'வடக்கில் வேங்கட மலையும் தெற்கில் குமரியும் கூறி, கிழக்கிலும் மேற்கிலும் எல்லை கூருது விட்டமையால், கடலே எல்லை எனக் கொள்க,' என்று தொல்காப்பிய உரையாசிரியர்கள் கூறியுள்ளமை கவனிக்கற்பாலது. தமிழகத்திற்கு மேற்கு எல்லை கடல் என்றமையால், இன்றைய மலையாள நாடு தமிழ் வழங்கப்பட்ட நாடு என்று கொள்ளுவதில் தடையில்லையன்றோ? நெடுஞ்

சேரலாதன், பெருஞ் சேரலாதன் முதலிய சேர மன்னர் பலர் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தவர்கள் என்பதைப் பதிற்றுப்பத்தும், புறநானூறும் கூறுகின்றன. சேரமான் கணைக்காலிரும்பொறை போன்ற சேர மன்னர்கள் தமிழ்ப் புலவர்களாகவும் இருந்தனர் என்பதற்குச் சங்கப் பாக்களே சான்றாகும். சிலப்பதிகாரம் பாடியவர் சேர மரபினர். கலித்தொகையுள் பாலைக்கலி பாடியவர் பெருங்கடுங்கோ என்ற சேர வேந்தராவார். ஐங்குறுநூற்றைத் தொகுப்பித்தவன் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்பவன். சிலப்பதிகார காலத்தில் (கி. பி. 2-ஆம் நூற்றாண்டிலும்) சேரநாடு தமிழ் பேசப்பட்ட நாடாகவே இருந்தது என்பது, சேரநாட்டு இளவரசராகிய இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரம் கொண்டே உணரலாம்.

கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் **சேரமான் பெருமாள் நாயனார்** திருக்கயிலாய ஞான உலா, பொன் வண்ணத்து அந்தாதி என்னும் தமிழ் நூல்களைப் பாடினார். பெருமாள் திருமொழி என்ற திவ்வியப் பிரபந்தம் பாடியவர் குலசேகர ஆழ்வார். இவ்வாறு ஏறத்தாழக் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு வரையில் சேர வேந்தர்கள் தமிழ் வள்ளல்களாகவும், தமிழ்ப் புலவர்களாகவும் இருந்திருக்கிறார்கள்.

மலையாள மொழி

"பண்டைக் காலத்தில் மலையாள மொழியானது, பெரிய தமக்கையான தமிழ் மொழியின் பாதுகாப்பில் இருந்தது. அக்காலத்துத் தமிழ்

எழுத்துக்களல்லாமல், தனக்கெனச் சொந்த எழுத்துக்கள் மலையாள மொழிக்கு இருந்ததில்லை. நெடுங்காலத்துக்குப் பிறகு, வட்டெழுத்தென்றும் கோலெழுத்தென்றும் பெயருள்ளவையும் தமிழினின்று அதிக மாறுபாடில்லாதவையுமான எழுத்துக்கள் மலையாள மொழிக்கு உண்டாயிருந்தன. மலையாள மொழி குழந்தைப் பருவத்திலிருந்த அக்காலத்தில் எழுதப்பட்ட நூல்கள் இப்பொழுது இல்லை என்றே சொல்லவேண்டும். வைதிகத் தொடர்பான சில பாட்டுக்கள் மாத்திரம் அங்கும் இங்கும் காணப்படுகின்றன. பின்னர், குழந்தைப் பருவம் கழிந்த பிறகும், மலையாள மொழியைப் பாதுகாக்கும் பொறுப்புத் தமிழ் மொழிக்கே யிருந்தபடியால், மலையாள மொழி தனித்து நின்று இயங்க முடியவில்லை. நடையுடை பாவனை பழக்க வழக்கங்கள் எல்லாம் தமிழ் மக்களுக்கிருந்தது போலவே மலையாளப் பெண்ணுக்கும் இருந்தது. பாட்டுக்கள் முதலிய செய்யுள்களும் தமிழ்ப் பாட்டினைப் பின்பற்றியே மலையாளத்தில் இயற்றப்பட்டன. பாவாணர்கள் தங்களுக்கு வேண்டிய சொற்றொடர்களையும் கருத்துக்களையும் தமிழிலிருந்தே எடுத்துக் கையாண்டார்கள். குழந்தைப் பருவம் நீங்கி வாலிபப்பருவமடைந்த பிற்காலத்தில் இயற்றப்பட்ட சில நூல்கள் இப்போதும் வழக்காற்றில் உள்ளன. இந்த மலையாளத்தைப் 'பழைய மலையாளம்' என்னலாம். முன் சொன்ன குழந்தைப் பருவத்து மலையாளத்தை 'ஆதி மலையாளம்' என்று கூறலாம். 'ராம சரிதம்' என்னும் நூல் பழைய மலையாள காலத்தின் தொடக்கத்தில் இயற்றப்பட்டதும், 'கண்ணஸ்ஸ ராமாயணம்' என்னும் நூல் அக்

காலத்தின் கடைப்பகுதியில் இயற்றப்பட்டதும் ஆகும்.

"கண்ணஸ்ஸ பணிக்கருக்குப் பிறகுள்ள மலையாளந்தான் இப்போதைய மலையாளம். இப்போதும் இதை நாம் பேசி வருகிறபடியால், இந்த மலையாளத்துக்கு வேறு பெயர் கூறவேண்டியதில்லை. இப்போதைய மலையாளம், பண்டைக்கால நிலையிலிருந்து பெரிதும் மாறுபட்டுள்ளது. இதற்குக் காரணம், சம்ஸ்கிருதத்தின் கூட்டுறவு ஆகும். பழைய மலையாளம் வழக்காற்றிலிருந்த காலத்திலேயே ஆரியராகிய நம்பூதிரிமார் கேரள நாட்டில் வந்து வாழ்ந்திருந்தார்கள். என்றாலும் நாட்டுமொழியை அவர் போற்றவில்லை. காலப்போக்கில், சம்ஸ்கிருதம் பேசியிருந்த நம்பூதிரிகளும், பழைய மலையாளம் பேசிவந்த கேரளநாட்டு மக்களும் தம்மில்ஒருவரோடொருவர் கலந்து உறவாடத் தொடங்கிய பிறகு, இரு திறத்தாருடைய மொழிகளும் கலந்து உண்டாகிய ஒரு கலப்பு மொழியாகும் இப்போதைய மலையாள மொழி. மலையாள மொழி வயதடைகிற வரையில், அதாவது குழந்தைப் பருவத்திலும், வாலிபப்பருவத்திலும் தமிழ் மொழியின் பாதுகாப்பிலும், தொடர்பிலும் இருந்ததென்று சொன்னேமல்லவா? அதன் பிறகுதான் அது சம்ஸ்கிருதத்தின் சம்பந்தத்தைப் பெற்றது. சம்பந்தம் என்றால் உண்மையான சம்பந்தந்தான். அதாவது, மணமகளுக்கும் மணமகனுக்கும் உள்ள தொடர்புதான். ஆயினும் மலையாளமொழி இன்றும் திராவிட கோத்திரத்தில்தான் இருக்கிறது... மலையாளமொழியில் இலக்கணத்தை இன்று வரையில் சம்ஸ்கிருத முறைப்படி அமைத்துக்கொள்ள முடியவில்லை...சுருக்கமாகச் சொல்வதென்றால், தமிழ்

இலக்கணத்திலே கூறப்பட்டுள்ள இலக்கணவிதிகளை, இன்னின்ன பாகத்தில் இன்னின்ன விதமாகச் சிறிது மாறுதல் செய்துவிட்டால், அதுவாக இருக்கும் மலையாள மொழியின் இலக்கண நூல் என்று சொல்வது அமையும். இதை எப்பொழுதும் மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.'' [1]

இதுகாறும் கூறப்பெற்ற உண்மைகளால், இன்றைய மலையாள நாடு நமது பைந்தமிழ் பேசப்பட்ட நிலப்பரப்பு என்பதை நன்கு தெளியலாம். நமது தமிழ்இலக்கியங்களில் காணப்பெறும் பாணர், கணியர் முதலிய மரபினர் மலையாள நாட்டில்தான் இன்றளவும் இருந்துவருகின்றனர். இனி, அங்கு வழக்கிலுள்ள சில சாதிகளின் பெயர்களையும், மக்கள் பெயர்களையும், பிறவற்றின் பெயர்களையும் அடுத்துக் காண்போம்.

வழக்கில் உள்ள பெயர்கள்

அம்பலம் என்பது ஊரார் கூடும் பொதுவிடத்தின் பெயர். அப் பொது விடங்களுள் கோவிலும் ஒன்று. எனவே, கோவிலுக்கும் அம்பலம் என்ற பெயர் வழக்கு உண்டு. தில்லையில் பொன் அம்பலம், மதுரையில் வெள்ளி அம்பலம் என்றாற்போலச் சில கோவிற்பகுதிகள் வழக்கிலுள்ளன. கோவிலில் பணி செய்யும் மக்கள் '**அம்பல வாசிகள்**' என்று மலையாள நாட்டில் பெயர் பெறுவர். அவருள்

1. கேரள பாணினீயம் எழுதிய ஏ. ஆர். இராஜ ராஜ வர்மா எழுதிய ''பாஷாஸ்வரூபம்'' என்னும் கட்டுரையின் ஒரு பகுதி.—செந்தமிழ்ச் செல்வி, 16, பக்கம் 392—394.

கோவிலையும் உருவச் சிலைகளையும் காப்பவர் '**அகப் பொதுவாள்**' எனப்படுவர். இவர்கள் நம்பூதிரி பார்ப்பனர்க்கும் சாதாரண பார்ப்பனர்க்கும் அடுத்த நிலையில் உள்ள பார்ப்பனராவர். இவர் சிவப்பிராமணர் என்றும் கூறப்படுவர். இவரை 'மூத்தது' என்று மலையாளிகள் அழைப்பர். அம்பலவாசிகள் கூட்டத்தில் உயரிய இடம் பெற்றுள்ள காரணத்தால் இவர்கள் இங்ஙனம் அழைக்கப்படுகின்றனர் போலும்! இவர்கள் கோவிலுக் குள்ளிருந்து கோயிற்பணி செய்தலால், 'அகப் பொதுவாள்' எனப் பெயர்பெற்றனர்.[2] இவர்தம் பெண்டிர் '**மனை அம்மமார்**' எனப்படுவர். இவர்தம் வீடு இல்லம், **மனை** எனப் பெயர்பெறும். இவர்தம் காதணி '**சுத்து**' (சுற்று) என்றும், '**குழல்**' என்றும் பெயர் பெறும்.[3]

இவர்களுக்கு அடுத்த கீழ் நிலையிலுள்ள பார்ப்பனர் '**இளையது**' எனப் பெயர் பெறுவர். இவர்கள் நாயர்க்குப் புரோகிதர் ஆவர். இவர்தம் பெண்டிர் '**இளையம்மமார்**' அல்லது 'குஞ்சம்மமார்' எனப்படுவர்.[4]

மலையாள நாட்டுக் கோவில்களில் மாலை கட்டுவோர் '**நம்பி**', '**நம்பியார்**', '**நம்பியாசான்**' எனப்படுவர். சாக்கைக் கூத்தில் முழவு அடிப்பவர் சாக்கைய நம்பியார் எனப்படுவர். அக்கூத்தில் பங்கு

---

2. கோவிலுக்கு வெளியிலிருந்து கோயிற்பணி செய்பவர் 'புறப் பொதுவாள்' (அல்லது பொதுவாள்) எனப்படுவர்.

3. Castes and Tribes of S. I. Volume 5, PP. 120-122.
4. Ibid. Volume 2, P. 205.

கொள்ளும் அவர்தம் பெண்டிர் '**நங்கையார்**' எனப் பெயர் பெறுவர்.[5]

நம்பூதிரி மணமகன், மணமகள் இல்லத்துக்கு முதன்முதல் செல்லும்பொழுது போர்க் கருவிகள் தாங்கிய வீரர்கள் (நாயர்கள்) அம்மணமகனுக்கு முன் செல்வர். அவர்கள் மணமகனுக்கு மெய்க் காவலர். இம் மெய்க் காவலர் அந்நாட்டில் '**அகம் படியர்**' என்று அழைக்கப்படுவர். நம்பூதிரியின் வீட்டுள் இருக்கும் **நடு முற்றம்** 'நடு மித்தம்' எனப்படும்.[6]

நாஞ்சில் நாட்டு வேளாளருள் மண நீக்கம் உண்டு. அதற்குரிய விடுதலை ஒப்பந்தம் '**விடுமுறி**' என்று வழங்கப்படுகிறது.[7]

சேர அரசரின் அரண்மனையில் இருந்த செல்வத்தையும், நகைகளையும் வைத்துப் பாதுகாத்து வந்தவர்கள் **கருவூலம் நாயர்** எனப்பட்டனர். இப் பெயர் இன்று 'கருவேலம்' என்று மாறி வழங்கப் படுகிறது. நாயருள் மற்றொரு பிரிவினர் '**வாத்தி**'* எனப்படுவர். இச்சொல் 'வாழ்த்தி' என்பதன் சிதைவாக இருக்கலாம். இவ்வகுப்பினர் மற்றவர் நலனுக்காகப் பிரார்த்தித்து வாழ்த்தும் பணியை மேற்கொண்டவராக இருந்திருக்கலாம். இப்பிரிவினர் 'நந்துனி' என்னும் ஒருவகை வாத்தியத்தை முழக்குவர். இவருட் சிலர் 'தெய்வம்படி' (தெய்

5. Ibid. Volume 5, P. 151.
6. Ibid. P. 205.
7. Ibid. P. 244.

* கல்வி கற்கவரும் குழந்தைகளைக் 'கல்வி பெறுக' என வாழ்த்திக் கற்பிக்கும் காரணத்தால் ஆசிரியர் 'வாத்தி' (வாழ்த்திக் கற்பிப்பவர்) என வழங்கப்பட்டனரோ என்பது ஆராயத்தகும்.

வம் ஆவேசிக்கப்பெற்று வாழ்த்துபவர்) எனப் படுவர்.[8]

திரு + ஆளன் = திருவாளன் என்றாற்போல, மணம் + ஆளன் = என்ற சொற்கள் புணர்ச்சியில் **மணவாளன்** என்றாகின்றன. இச்சொற்றொடர் மலையாள நாட்டில் மணமகனைக் குறிக்கின்றது. நம் நாட்டில் மாப்பிள்ளை என்று வழங்கும் தொடர் மணம் + பிள்ளை என்னும் இருசொற்களால் ஆகியது. மணம் + பிள்ளை = மணப்பிள்ளை. மகாநாடு என்பது *'மாநாடு'* என வழங்கப்படுதல்போல, மணப்பிள்ளை என்பது *'மாப்பிள்ளை'* என்று மருவி வழங்கப்படுகிறது. பெண்ணினுடைய இனத்தைச் சேர்ந்து மணமகனாகும் தகுதியுடையவன் **எணங்கன்** என்று மலையாள நாட்டில் குறிக்கப்படுகிறான். **இணங்கன்** என்னும் சொல்லின் திரிபே 'எணங்கன்' என்பது. இணக்கம் என்பது இசைப்பு, பொருத்தம் முதலிய பொருள்களை உடையது. இணங்கன்-திருமணத்திற்கு உடன்படும் தகுதியுடையவன். இவ்விணங்கன் ஒரு பெண்ணை மணக்கும்பொழுது மணவாளன் எனப்படுவான்.[9]

"ஆசான் பெருங்கணி" எனவரும் சிலப்பதிகாரத் தொடரில் **கணி** என்பது சோதிடனைக் குறிக்கும் சொல். கோள் நிலைகளைக் கணிக்கின்ற காரணத்தால் சோதிடன் *'கணியன்'* எனப்பெயர் பெற்றான். இக்கணியர்கட்குத் தலைவனாக இருந்தவன் பெருங்கணி எனப்பட்டான். சோதிடனைக் கணியன் என்றழைத்தல் இன்று தமிழ்நாட்டு வழக்கிலில்லை; ஆனால் மலையாள நாட்டு வழக்கில் இன்றும் இருந்து

8 Ibid—p. 298.
9 Ibid—p. 314.

வருகிறது. மலையாளக் கணியன் பனை ஏடுகளில் எழுதப்பெற்ற சோதிட நூல்களை வைத்துக் கொண்டு சோதிடம் கூறிவருதல் இன்றும் காணத் தகும் காட்சியாகும்.[10]

திருமணத்திற்கு முன்னுளிரவு பெண் வீட்டார் பிள்ளைவீட்டாருக்குத் தரும் விருந்து அயினி உண்ணு எனப்படும். 'அயினி' என்பது 'உணவு' என்னும் பொருளில் மலைபடுகடாத்தில் வழங்கப்பட்டுள்ளது.

"திண்டேர் நன்னற்கும் அயினி சான்மன்[11]

இவ்வரிய சங்ககாலச் சொல் இன்றளவும் நாயர் மண விருந்துக்குப் பெயராக இருத்தல் எண்ணிக் களிக்கத்தகும்.[12]

'அம்மை' (தாய்) யின் உடன் பிறந்தவன் அம்மான் எனப்படுதல் வழக்கம். அவன் மனைவி மாமி எனப்படுதலே தமிழ் வழக்கு. மாமன் என்னும் ஆண்பாற் சொல்லுக்கு ஏற்ற பெண்பாற் சொல்லே மாமி என்பது. இது அம்மான் என்னும் ஆண் பாற் சொல்லுக்கு ஏற்ற பெண்பாற் சொல் ஆகாது. தமிழ் நாட்டு வழக்கில் அம்மான் என்பதற் கேற்ற பெண்பாற்சொல் வழக்கிலில்லை. ஆயின், மலையாளத்தில் இச்சொல் இன்றளவும் வழக்கில் இருக்கின்றது. அங்குத் தாய்மாமன் மனைவி அம்மாயி என்று அழைக்கப்படுகிருள். 'அம்மான்' என்ற ஆண்பாற் சொல்லுக்கு 'அம்மாயி' என்ற பெண் பாற் சொல்லே ஏற்புடையதன்ரே? 'மாமன்' என்னும் சொல்லுக்கு 'மாமி' என்பது ஏற்புடை யது. அதுபோலவே அம்மான் என்ற ஆண்பாற் சொல்லுக்கு அம்மாயி என்ற பெண்பாற் சொல்லே

10. Ibid p. 320. 11. வரி-467. 12. Ibid p. 320

பொருந்துவதாகும். இவ்வழக்குண்மை தமிழராய நமக்கு எவ்வளவு மகிழ்ச்சியை அளிக்கின்றது ![13]

“தென்கடல் ... ...
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கு
... ...
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை யிரண்டே.”

— புறம், 189.

என்னும் புறப்பாட்டில் வந்துள்ள நாழி என்பது ஒரு முகத்தல் அளவையின் பெயர். இந்நாழி என்னும் சொல், பல நூற்றுண்டுகளாகத் தமிழகத்தில் வழக்குப் பெற்றிருந்தமை கல்வெட்டுக்களாலும், ‘நாழி அரிசிக்கே நாம்’ எனவரும் பிற்கால அவ்வை யார் பாட்டாலும் நன்குணரலாம். ஆயின், இச் சொல் இன்று தமிழ்நாட்டு வழக்கிலில்லை; மலே யாள நாட்டு வழக்கில் இன்றளவும் இருந்துவரு கிறது என்பது அறியத்தகும்.[14] இவ்வாறே இடங்கழி என்பது ஒரு முகத்தலளவையின் பெயர். புதுக்கோட்டைச் சீமையைச் சேர்ந்த கொடும்பா ளூரை ஆண்ட சிற்றரசருள் இடங்கழி நாயனர் என் பவர் ஒருவர். அவர் சிவனடியார்களுக்கு நெல் அளந்து கொடுத்து வந்தார் என்பது வரலாறு. அக்குறுநில மன்னர் ‘இடங்கழி’ என்னும் முகத் தலளவையைக் கொண்டு நெல் அளந்து கொடுத்து வந்த காரணத்தால் இடங்கழியார் என்று பெயர் பெற்றுர் என்று கூறுதல் பொருத்தமாகும். இவ் வளவைப் பெயர் இன்று தமிழ்நாட்டு வழக்கில் இல்லே; ஆயின், மலேயாள நாட்டு வழக்கில் இன் றளவும் இருந்துவருவது குழிப்பிடத்தக்கது.

13. Ibid p. 335. 14. Ibid. 335.

சூல்கொண்ட நாயர் மகள் ஒன்பதாம் திங்கள் குறிப்பிட்ட நல்ல நாளில் புளிச்சாறு குடித்தல் மிகச் சிறப்பான சடங்காக மலையாள நாட்டில் கருதப்படுகிறது. இச்சடங்கின் பெயர் 'புளி-குடி' எனப்படுகிறது. குழந்தை பிறந்த ஆரும் மாதம் அக்குழந்தைக்கு உணவு ஊட்டும் சடங்கு நடைபெறும். அச்சடங்கு சோறுண்ணு என்று சொல்லப்படுகிறது. இவ்வாறே குழந்தை பிறந்த இருபத்தெட்டாம் நாள் குழந்தைக்குப் பாலூட்டு விழா நடைபெறும். அச்சடங்கு 'பாலு-குடி' எனப் பெயர்பெறும். இப்பெயர்களெல்லாம் தமிழ்ச் சொற்கள் அல்லவா ?[15]

தென் திருவாங்கூர்ச் சீமையிலுள்ள மக்களுள் **கிருஷ்ணவகக்கர்** என்பவர் ஓரினத்தவர். இம்மரபினர் கண்ணன் பிறந்த வடநாட்டுப் பகுதியிலிருந்து தென்னடு போந்து, காஞ்சியை அடுத்த ஆயர் பாடியில் தங்கியிருந்ததாகவும், பின்பு மலையாள நாடு வந்து குடியேறியதாகவும் கூறிக்கொள்கின்றனர். பழைய அரசாங்கக் கணக்குகளில் இம்மரபைச் சேர்ந்த ஆடவன் இயற்பெயருடன் **ஆயன்** என்ற சொல்லும், பெண்ணின் இயற்பெயரோடு **ஆய்ச்சி** என்ற சொல்லும் காணப்படுகின்றன. எனவே, இவர்கள் தமிழிலக்கணம் கூறும் முல்லை நிலமக்களாதல் வேண்டும். முல்லை நில மக்களுக்குத் தான் **ஆயன்-ஆய்ச்சி** என்ற பட்டமுண்டு, ஆன் ஆயன் (ஆனயன்) நாயனர் என்ற இடைக்குல அடியார் பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ளமை இங்கு நினைவு கூர்தற்குரியது. **ஆய்ச்சியர் குரவை, ஆயர், ஆயன்** எனவரும் சங்ககால வழக்குகள் அண்

15, Iaid. PP. 339 & 346—7,

மைக்காலம்வரை மலையாளத்தில் வழக்குப் பெற்றிருந்தமை மகிழ்ச்சிக்குரியதன்றோ ?

திருவாங்கூர் அரசமரபினர் நால்வகையினருள் **திருமல்பாட்** என்பது ஒருவகை. தம்பான் என்று அழைக்கப்படுபவரும் இவ்வரச மரபினரே. இவர் தம் பெயர்களுடன் அரசமரபுக்குரிய 'வர்மா' என்ற பட்டம் இன்று சேர்க்கப்படுகின்றது. இவருள் சில குடும்பத்தார் **கோவில்** அதிகாரிகள் என்று பழைய பத்திரங்களில் குறிக்கப்பட்டுள்ளனர். கோவில் என்ற சொல்லுக்கு இங்கு அரண்மனை என்பது பொருள். எனவே, அரண்மனை அதிகாரிகளாக இருந்த அரசமரபினர் என்பதே கோவில் அதிகாரிகள் என்னும் தொடருக்குப் பொருளாகும், அரண்மனை, கோவில் என்ற பெயருடன் பண்டைக் காலத்தில் வழங்கப்பட்டு வந்தது என்பதை,

"வாயில் விடாது **கோயில்** புக்கு" (புறம், 62)
"வச்சிரத் தடக்கை நெடியோன் **கோயில்** "(புறம்,241)

என்ற புறநானூற்று அடிகள் உணர்த்துதல் காண்க. சிலப்பதிகாரத்திலும்,

"வாயில் வந்து **கோயில்** காட்ட"

என்னும் வரியில், கோயில் என்பது அரண்மனை என்னும் பொருளில் வழங்கப்பட்டுள்ளமை இங்கு அறியத்தகும். இக்கோயில் என்னும் சொல் அரண்மனை என்னும் பொருளில் தமிழ் நாட்டில் இன்று வழங்கப்படுவதில்லை. ஆயின், மலையாள நாட்டில் இவ்வழக்கு இன்றளவும் இருந்து வருகின்றது என்பதை மேற்சொல்லப்பட்ட கோவில் அதிகாரிகள் என்னும் தொடரும், '**கோயில் தம்புரான்**'

(தம்பிரான்) என்னும் தொடரும் நன்குஉணர்த்து கின்றன.[16]

அளம் என்பது நெய்தல் நிலம்; அஃதாவது கடலும் கடல் சார்ந்த இடமுமாகும். அந்நிலத்தில் வாழும் மக்கள் பொதுவாக **அளவர்** எனப்படுவர். அவருள் ஆடவர் அளவர் என்றும், பெண்டிர் **அளத்தியர்** என்றும் பண்டைத் தமிழகத்தில் வழங்கப் பட்டனர்.[17]

இச்சொல் வழக்கு இன்றுள்ள தமிழ்நாட்டு நெய்தல் நில மக்களுக்கு வழக்கில் இருத்தல் தெரியவில்லை. ஆயின், மலையாள நாட்டில் இவ்வழக்கு இருக்கின் றது. இவருள் உப்பளத்தில் வேலை செய்பவர் உப்பளவர்[18] எனப்படுகின்றனர். இவ்வரிய வழக்கு இன்று மலையாள நாட்டில் இருத்தல் அறிந்து மகிழ் தற்குறியதாகுமன்றோ ?[19]

வழுதுணங்காய்

கத்தரிக்காய் இரண்டு வகைப்படும். உருண்டை வடிவமுள்ள கத்தரிக்காய் ஒருவகை; நீண்ட வடிவ முள்ள கத்தரிக்காய் மற்றொரு வகை. வீர சைவர் லிங்க வணக்கத்தினர். லிங்கத்தை கையில் கட்டிக்

16. Ibid. vol. 7. pp. 34-35.
17. நம்பியகப்பொருள் சூ. 24.
18. இந்த உப்பளவர் என்னும் பெயரே திரிந்து தெலுங் கில் உப்பரவர் என வழங்குகின்றது என்பது ஆரா யத்தக்கது. இன்றைய தெலுங்கு உப்பரவர் ஒரு காலத்தில் உப்பளங்களில் வேலை செய்தவர்போலும்!
19. -Castes & Tribes of S. I. vol. 7, p. 229.
Castes & Tribes of S. I, vol. I, p. 21.

கொண்டிருப்பர், அல்லது மார்பில் கட்டித் தொங்க விட்டிருப்பர். வீரசைவ விருந்து ஒன்றில் திருடர் இருவர் கலந்துகொள்ள விரும்பினர். ஆயின், அவ்விருவரும் வீரசைவர் அல்லர். அவர்கள் நன்கு யோசித்து ஒரு சூழ்ச்சி செய்தனர்: நீண்ட கத்தரிக் காய் ஒன்றைத் துணியால் மூடிக் கட்டிக்கொண்டனர்; கட்டிக்கொண்டு விருந்தில் கலந்துகொண்டனர். உணவு கொள்ளுமுன் தாம் அணிந்துள்ள லிங்கத்திற்குப் பூசை செய்ய வேண்டுமாதலால் அங்கிருந்த வீரசைவர் அனைவரும் தாம் தாம் அணிந்திருந்த லிங்கத்திற்கு வழிபாடு செய்தனர். இம்முறையை முன்பு அறியாத கள்வர் இருவரும் செய்வகை அறியாது விழித்தனர். அங்கிருந்த வீரசைவர் அவர்களைப் பிடித்துக்கொண்டனர். அவர்கள் வேடத்தைக் களைந்து பார்க்கையில் நீண்ட கத்தரிக்காய்கள் வெளிப்பட்டன. இந்நீண்ட கத்தரிக்காய் வழுதுணக்காய் என்று பிரபு லிங்க லீலையில் குறிக்கப்பட்டுள்ளது. இது தமிழ் நாட்டுப் பேச்சு வழக்கில் இன்று இல்லை. ஆயின், மலையாளிகள் உருண்டைக் கத்தரிக்காயைக் 'கத்தரிக்காய்' என்றும், நீண்ட கத்தரிக்காயை மட்டும் 'வழுதுணங்காய்' என்றும் இன்றளவும் பேச்சு வழக்கில் வழங்கி வருகின்றனர் என்பது இங்கு அறிந்து இன்புறற்பாலது. இவ்வாறு எண்ணிறந்த தூய தமிழ்ச் சொற்கள் மலையாள நாட்டுப் பேச்சு வழக்கில் இன்றளவும் இருந்து வருகின்றன. இவற்றைத் தொகுத்து வெளியிடுதல் தமிழறிஞர் கடனாகும்.

9. வரைமொழியும் வாய்மொழியும்*

தமிழ் மொழி மாற்றம்

ஒரு காலத்தில் எல்லோராலும் பேசப்பட்ட மொழி எழுதப்பட்டவுடன் இலக்கிய மொழியாக மாறிவிடும். பிறகு அது, பேச்சு மொழி மாறுதலால் நாளடைவில் தனித்து நிற்றலும் உண்டு. இம் மாறுபாடுகள் இயல்பாக உண்டாகி வருதல் கண் கூடு. எழுதப்பட்ட காலத்திற்குரிய சொற்பொருள் பிற்காலத்தில் வேறுபடுதலும் உண்டு. சொற்களும் உருமாறும்; வழக்கொழிந்துவிடும். இவ்வுண்மை களைத் தொல்காப்பியஉரையாசிரியர்களும் சங்கநூல் உரையாளர்களும் ஆங்காங்குக் குறித்துச் செல்லலைக் காணலாம். 'அழன்,புழன்' என்ற தொல் காப்பியச் சொற்கள் வழக்கு ஒழிந்தன; 'புரத்தல்' என்னும் சங்ககாலச் சொல் 'காத்தல்' என்னும் பொருளில் இடம்பெற்றுவிட்டது. 'புரத்தல்-உண்டி கொடுத்துக் காத்தல்' என்பதே பழைய பொருள். இப்பொருளைக் கன்னட மொழியிற் காணலாம். இங்ஙனம் பிற்காலத்தில் பொருள் திரிந்த சங்க காலச் சொற்கள் பலவாகும். தமிழின் இனமான

* எழுத்து மொழியும் பேச்சு மொழியும் (Written and Spoken dialects)

தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளில் பழந்தமிழ்ச்சொற்களுக்கு நேரானபொருளைக் கண்டு மகிழலாம். பல சொற்கள் 'ஒரீஇ, நிறீஇ' என உருக்குலைந்துவிட்டன. அவை முறையே 'ஒருவி, நிறுவி' என்று இருத்தற்கு உரியன. இங்ஙனம் அவ்வப்போது உண்டாகும் மாறுதல்களை இலக்கண ஆசிரியர்கள் குறித்து, இலக்கிய மொழிக்கும் பேச்சு மொழிக்கும் தொடர்பு உண்டாக்க முயன்றனர்.

ஆங்கில மொழி மாற்றம்

இவ்வேறுபாடு தமிழ் ஒன்றுக்கே என்று எண்ண வேண்டா. 16-ஆம் நூற்றுண்டினராகிய ஷேக்ஸ்பியர் நூலில் உள்ள சொற்கள் பல இன்றுள்ள ஆங்கிலத்தில் வழக்கொழிந்துவிட்டன என்பதைத் தெள்ளத்தெளிய அறிஞர் ஒருவர்[1] விளக்கியுள்ளார்; விளக்கி, 'இவற்ருல், ஷேக்ஸ்பியர், இறந்தகால மொழியில் தம் நாடகங்களை இயற்றினர் எனல் பொருந்தும்' என்று குறித்துள்ளமை கவனித்தற்குரியது. "லாட்டின் (Latin) எப்படி இறந்த மொழியாகிவிட்டதோ அது போலவே ஷேக்ஸ்பியர் காலத்து ஆங்கிலமும் இறந்துபட்டது. என்னை ? அம்முறையில் அச்சொற்களைப் பயன்படுத்தி இன்று பேசுவார் இல்லாமையால் என்க," என்று டாக்டர் ஸ்வீட் என்னும் மொழி ஆராய்ச்சி நிபுணர் 'மொழிகளின் நேரிய தன்மை' என்ற தமது நூலிற்[2] கூறியுள்ளார்.

---

1 R. J. Gunliffe. 2 p. 228

வரைமொழி, வாய்மொழி-வேறுபாடுகள்

(1) இலக்கிய மொழி என்றும் மாறுதல் அடையாதது. பேச்சு மொழி மாறிக்கொண்டே வரும். (2) இலக்கிய மொழியில் பாடிய அல்லது எழுதிய புலவரே தமது நடைக்குப் பொறுப்பாளி ஆகின்ருர். அவர் இலக்கண-இலக்கியங்களைத் துணைக்கொண்டு எழுதியிருப்பின், அவரது காலம் பிற்பட்டதாயினும் பண்டைய இலக்கியப் புலவர் வரிசையில் வைத்து எண்ணப்படுவர். இந்நிலைமை பேச்சு மொழிக்குப் பொருந்தாது. (3) பேச்சு மொழி (வாய்மொழி) இயல்பாகக் குழந்தைப் பருவத்திலிருந்தே வருவது; இயல்பாகப் பேசப்படுவது. ஆனால், இலக்கிய மொழி, ஆசிரியர் ஒருவரைக் கொண்டு அறிய வேண்டுவது.

இம்மூன்று காரணங்களால் இலக்கிய மொழிக்கும் பேச்சு மொழிக்கும் உள்ள வேறுபாடுகள் நன்கு விளங்கும்; பேச்சுத் தமிழ் மாறுதல் அடைதற்குக் காரணமும் இலக்கியமொழி மாருமைக்குக் காரணமும் நன்கு விளங்கும். இலக்கியத் தமிழ் பேச்சு வழக்கு அற்றமையின், அஃது அழியாது; பேச்சுத் தமிழ் வழக்கில் இருப்பதால் மாறிக்கொண்டே இருக்கும். பண்டை இலக்கண இலக்கியங்களைப் படித்துச் சொல்பவர் சொல்லும் வரையிற்ருன் அவை பொதுமக்கள் கண்ணெதிரே தோன்றும்; இன்றேல், இறந்தவை ஆகும். பேச்சுத்தமிழில் கருத்தைச் செவ்வையாக விளக்க முடியாதபோதும், 'பண்டைத் தமிழில் இஃது எங்ஙனம் கூறப்பட்டுள்ளது?' என்று பார்க்க உணர்ச்சி உண்டாகும்போதும், பழைய மொழிச் சுவையை

நுகர அவா உண்டாகும் போதுமே இலக்கிய-இலக்கண நினைவு எழும்,

பண்டை வாய்மொழியே வரைமொழி

வரைமொழி (இலக்கிய மொழி)கள் யாவும் செப்பம் செய்யப்பட்டவையேயாகும். அவை, பேச்சு மொழியைத் திருத்த முறையிற் கொண்டவை ஆகும். 'பேச்சுமொழி ஒழுங்கு நிலையை அடையின், இந்நிலையிற்றான் இருக்கும்' என்பது போல நன்முறையில் அமைந்திருப்பதுவரைமொழி. இலக்கிய மொழியாக இன்று இருப்பது ஒரு காலத்தில் பேச்சு மொழியாக இருந்தது. "இன்று கடினமாகவும் வியப்பாகவும் தோன்றும் தாந்தே[3], பெட்ரார்க்[4] என்பவர்கள் வரைந்த லத்தீன்மொழி நடை ஒரு காலத்தில் சாதாரண மக்கள் பேசிவந்த மொழியே என்பதை நாம் அறிதல் வேண்டும். இவ்வுண்மை எல்லா மொழிகட்கும் பொருந்தும்", என டாக்டர் ஸ்வீட்[5] தமது நூலில் குறித்திருத்தல் கவனிக்கத்தக்கது.

நடை வளர்ச்சி

இவ்வாறு சாதாரணமாக வழங்கிய மொழி ஒன்றைச் செப்பம் செய்தலும் முடிபு கொடுத்தலும் பிறவும் நீண்டகால வளர்ச்சியாக இருத்தல் வேண்டும். சான்றாக, ரிக்வேத மொழிவளர்ச்சி அவ்வேத காலத்திற்கு மிக முன்னரே தொடங்கப் பெற்றிருத்தல் வேண்டும். ஏனெனில், திடீரென மொழி அமைதி அவ்வளவு செம்மையாக அமைதல் இயற்

---

3 Dante 4 Petrarch. 5 p. 50.

கைக்கு மாருனது ஆதலால் என்க. வாழையடி வாழையாக வந்த செய்யுள் நடையே ரிக்வேத நடையாகும். அவ்வாறே பண்டைச் சங்க நூல் தமிழ் நடை, அச்சங்க காலத்திற்கு முனபே பண் பட்டு வளர்ச்சி அடைந்துவந்த நடையென்பதை அறிதல் வேண்டும்.

வாய்மொழி வரைமொழி ஆகும்முறை

" ஒரு நாட்டு மொழி முதலில் கொச்சையாகவும் கரடு முரடாகவும் இருக்கும். அதனைச் செப்பம் செய்யச் சிற்பிகள் தோன்றுவர்; செப்பம் செய்வர். அங்ஙனம் செப்பம் செய்யப்பட்டதே இலக்கிய மொழி. முதன் முதலில் மொழியைச் செப்பம் செய்து எழுதும் நிலைக்குக் கொண்டு வருபவரே உயர்ந்தவர்; உழைப்பாளிகள். இதற்கெனச் சிலர் தோன்றி வேலை செய்தல் இயற்கையின் சிறப் பென்றே இயம்புதல் வேண்டும். ஒருவர் சொல் முடிபுகளைச் செப்பம் செய்வார்; ஒருவர் நடையை ஒழுங்காக்குவார்; ஒருவர் கருத்துக்களைப் பதப்படுத் துவார்; வேறு ஒருவர் கருத்துக்களை வெளியிடுவதற் குரிய சொல் அடுக்குகளை உண்டாக்குவார். இங் ஙனம் பேரறிஞர் பலரது கூட்டு உழைப்பாற்ருன் மொழி செம்மையுறுதல் உலக இயற்கை. இப்பெரு மக்களது தனிப்பட்ட நடை 'மொழிச் செல்வமா'கப் பின்னேரால் கருதப்படும். அரிய தொடர்கள், ஓசை நயம், எதுகை, மோனை இன்னபிற அழகுகள் படிப்படியாகப் படித்தவரிடம் பரவும்; அளவளாவும் பொழுது இவை அவரது உரையாடலை அணி செய்து ஆரா இன்பம் அளித்தல் உறுதி. சொல் அழகும் பொருள் அழகும் பின்னிச் செல்லும்

பான்மை மற்றோர்க்குக் கழிபேருவகை விளைப்பதாகும். இத்தகைய உயரிய பண்பை முதலில் உண்டாக்கித் தரும் மொழி வல்லுநர்க்கு உலகம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது அன்றோ ?'' என்று அறிஞர்[6] அறைந்துள்ளமை உண்மையே ஆகும். இக்கூற்றால், 'வாய்மொழி' எங்ஙனம் செப்பம் செய்யப்பட்டு 'வரைமொழி' ஆகின்றது என்பது எளிதிற் புலனாகும்.

வரை மொழியை வாய்மொழி ஆக்கலாம்

வரை மொழியும் வாய்மொழியும் ஒன்றாக இருத்தல் இயலாதா ? 'இயலாது' என்று கூறுதல் தவறாகாது ; மொழிப் புலமை எய்துதல் அனைவர்க்கும் ஆவதொன்றன்று. சாதாரணப் படிப்புடையார் ஓரளவு பயிற்சி பெறின். பிழையின்றி எளிய நடையிற் பேசலாகுமேயன்றிப்புலவர் நடையிற் பேசுதல் இயலாது. ஆயின், அனைவரும் கல்வி அறிவு பெறின்-தாய்மொழியைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டுமென்னும் ஆர்வம் அழுத்தமாக இருப்பின் அந்நிலையிற் பிழையற்ற தமிழ், பொது மக்கள் வாழ்வில் நடனம் செய்யும். அந்த முறை இன்று படித்தவர் வாழ்க்கையிலும் காணுதல் அருமையாக இருக்கிறது ! உள்ளத்தில் மொழிப்பற்று வன்மையோடு உறுத்துங்கால், பிழையற்ற முறையிற் பேசவேண்டும் என்னும் உணர்ச்சி தோன்றும்; அதற்குரிய முயற்சி தோன்றும்.

" குழந்தைகள் சிறுபருவத்திலேயே பெற்றோர்-மற்றோர் பழக்கத்தால் பிழையறப் பேசப் பயிலு

6 Cardinal Newman's 'English Catholic Lectures', section 4.

வாராயின், மொழி மாறுதல் அடையாது. ஆங்கிலச் சிறுர் இன்றும் ஆங்கிலோ-சாக்ஸன் சொற்களைப் பேசுதல் காணலாம். இதற்குப் பழக்கமே காரணம் ஆகும். மொழியில் உண்டாகும் மாறுதல்கள் முதலில்எளியவையாகவும் சிறியவையாகவும்காணப் படின்-அவையே சில தலைமுறைகளில் அம்மொழி யின் தன்மையை மாற்றிவிடுவன ஆகும்,''[7] என மொழி இலக்கணப் புலவராய டாக்டர் ஸ்வீட் கூறி யிருத்தல் கருதத்தக்கது.

மொழியால் உண்டாகும் பிளவு

எனவே, வரை மொழி பயின்று, அம்மொழி யினைப் பேசுவார்க்கும் அங்ஙனம் பேசாதார்க்கும் உள்ளதொரு வேறுபாடு நாளடைவில் பெருகித் தோன்றும் என்பது புலனாகும். படித்த மக்கள் ஒருவாறும் படியா மக்கள் ஒருவாறும் பல தலை முறைகளாய்ப் பேசி வருதலால் தமிழ் (ஒவ்வொரு மொழியும்) வரை மொழி எனவும் வாய் மொழி எனவும் இரண்டாகி, வரை மொழி ஒரே நிலையில் மாருது நிற்ப, வாய்மொழி காலம் கழியக் கழிய மாறுதல்கள் ஏற்று ஏற்றுப் போதல் இயல்பாய் நடைபெறுகின்ற நிகழ்ச்சியாக இருக்கின்றது. மேலும், ஒரே மொழி மக்கள் அறிவு நிலைக்கு ஏற்ப மாறுதல் அடைதலும் இயல்பு; எனவே, ஒரே மொழியை-'இழுத்துக்கொண்டு' என்று படித்த வரும், 'இழுத்துக்கிட்டு, ஈத்துகிட்டு, இஸ்துகினு' எனப் படிப்படியாகக் கீழ்நிலையில் உள்ள மக்களும் பேச இயல்பாகவே இடம் ஏற்படுகிறது. இந்நிலை

7 p. 75

வளர வளர, முன்னரே படியாத மக்களைப் பல்வேறு காரணங்கள் காட்டி வேறுபடுத்தி வந்த படித்தவர், இம்மொழி வேறுபாட்டையும் துணையாகக் காட்டித் தம்மைச்சமூகத்தினின்றும் வேறு பிரித்துக்கொள்ள முனைதல் கூடும்; இலக்கணம் வகுத்து, வாய்மொழி, வரைமொழியிற் புகாவண்ணம் எல்லை எடுப்பர்; தம் பிள்ளைகளை அவ்வாய் மொழியைப் பேசாதவாறு பாதுகாத்தலும் செய்வர். இங்ஙனம் மொழி மாறுதல் சமூகத்தில் இரண்டு பிரிவுகளை இயல்பாகவே உண்டாக்கிவிடுகின்றது.

பிளவு ஒழிய வழி

இப்பிளவு நீங்க வேண்டுமாயின், பிள்ளைகளை இளம் பருவ முதலே வரை மொழியைப் பயிலச் செய்தல் வேண்டும்; அதனிற் பிள்ளைகளைப் பேசப் பழக்கல் வேண்டும். இஃதொன்றே நாளடைவில் சமூகத்தைத் தூயமொழி பேச வைக்கும் தக்க வழியாகும். தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் ஆதலின், இளமையில் உண்டாகும் சொற்களின் பிழையுற்ற உச்சரிப்பு, ஒலி அமைப்பு முதலியவற்றை இளமையிற் பண்படச் செய்தல் வேண்டும். இவை இளமையில் வலியுறுமாயின், அவரது வாழ்க்கையில் வரைமொழி வாய்மொழியாதல் திண்ணம் என்று சொல்லலாம்.

முடிவுரை

இதுகாறும் கூறியவற்றால்—1. முதலில் வாய்மொழியாக இருந்த ஒன்றே வரைமொழி ஆனது; 2. காலம் கழியக் கழிய வரைமொழியினின்று வாய்

மொழி மாறுபாடு பெறும்; 3. இவ்வேறுபாட்டைத் தமிழர் கல்வி அறிவின்மையால் வளரவிடுவாராயின் இருமொழிகளும் நாளடைவில் தொடர்பற்றுத் தனி மொழிகளாக மாறி விடக்கூடும்; 4. ஆயின், மக்கள் ஓரளவு கல்வி அறிவும் தாய்மொழிப்பற்றும் உடைய ராயின், இரு மொழிகட்கும் இடையே வேறுபாடு சிறந்து தோன்ருது; ஆதலின், இம்முயற்சியில் தமிழ் மக்கள் முயன்று தாய்மொழி கற்றுத் தமிழ்ப் பற்றுடைய தமிழராக வாழ்தல் வேண்டும்; தாய் மொழிப் பற்றே தாய்நாட்டுப் பற்றுக்கு அடிப்படை யாகும் என்பனவற்றைத் தெளிவுறத் தெரிந்து கொள்ளலாம்.

10. தமிழ் வளர்ச்சி

தமிழின் பழைமை

நமது தாய் மொழியாகிய தமிழ் எப்பொழுது தோன்றியது என்பதை அறுதியிட்டுக் கூறுதல் இயலாது. அஃது ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டு கட்கு முன்னரே சிறந்த இலக்கண இலக்கியங்களைப் பெற்றிருந்தது. இந்த உண்மையை நோக்க, தமிழ் பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வந்த தனி மொழி என்னலாம்.

வடமொழிக் கலப்பு

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் வட இந்தியாவிலிருந்து வடமொழிவாணர் இந்நாட்டில் வந்து தங்கினர். அவர்தம் சேர்க்கையாலும் வடமொழி இலக்கண இலக்கியங்களாலும் தமிழ் இலக்கியத்தில் வடமொழிக் கலப்பு ஏற்படத்தொடங்கியது. பின்னர் நாளடைவில் வடவர் சமயமும் தமிழர் சமயமும் கலப்புண்டன. இக்கலப்பின் பயனாக, வைதிகச்சைவ நெறியும், வைதிக வைணவ நெறியும் தமிழகத்தில் தோன்றி வளர்ந்தன. அப்பொழுதுதான் நாயன்மார் பாடல்களும் ஆழ்வார் அருட்பாடல்களும் வெளிப்பட்டன. சங்க காலத்தில்

ஏற்பட்டதைவிடத் தோத்திர நூல்களில் வடமொழிக் கலப்பு மிகுதிப்பட்டது. பின்பு அமைந்த சோழப் பேரரசர் காலத்தில் (கி. பி. 900-1300) பாதி தமிழ்-பாதி வடமொழி அமைந்த மணிப் பிரவாள நடை தமிழில் தோன்றியது. வடமொழி மந்திரங்கள், புராணங்கள் முதலியன தமிழ் நாட்டிற் பெருகின. தமிழ்ப் புலவர்கள் வடமொழிப் புராணங்களை மொழி பெயர்த்தனர். இதனல் வடமொழியில் இருந்த சமயச் சொற்கள் தமிழிற் புகுந்தன.

வடமொழி ஆட்சி

இக்காலத்திற்றுன் வடமொழி வல்லுநர்களான சைவ ஆசாரியர்களும் சைவ குருக்களும் சமய அதிபதிகளாக விளங்கினர். சோழர்க்கு இராஜ குருக்களாக அமைந்தவரும் வடமொழி வாணர்களே. இவர்கள் சமயத் துறையில் அரசன் ஆணையையும் மாற்றவல்ல உயர்நிலையில் இருந்தனர். மூன்றும் குலோத்துங்க சோழன் செய்த முடிவினை அவனது அரசகுரு சுவாமிதேவர் மாற்றிவிட்டார் என்பதைக் கல்வெட்டுக் குறிக்கின்றது. தேவார காலத்தில் தமிழ்ப் பெயர் பெற்றிருந்த ஒவ்வொரு சிவத்தலமும் நாளடைவில் வடமொழிப் பெயர் பெற்றுவிட்டது. தேவார காலத்தில் திருமுதுகுன்றம் என்று வழங்கப்பட்ட ஊர், பிற்காலத்தில் **விருத்தாசலம்** எனவும், **மறைக்காடு** என்பது **வேதாரண்யம்** எனவும், **வெண்காடு** என்பது **சுவேதாரண்யம்** எனவும் மாறி வழங்கலாயின. இவ்வாறே சுவாமி பெயர்களும் அம்மன் பெயர்களும்வடமொழியில் ஆக்கப்பட்டன. ஐயாறனர் என்பது திருவையாற்றுச் சிவன் பெயர். இப்பெயர் **பஞ்சநதீஸ்வரர்** எனவும், மதுரை **அங்கயற்கண்ணி**

என்பது **மீனுட்சி** எனவும், **சொக்கர்** என்பது **சுந்தரேசுவரர்** எனவும் மாறின. ஐயாறப்பனது அம்மன் பெயர் தர்மசம்வர்தனீ என மாற்றப்பட்டது. இவ்வாறு ஒவ்வொரு தலத்திலுமுள்ள சுவாமி-அம்மன் பெயர்கள் தமிழ் மக்களுக்குப் புரியாத வடமொழிப் பெயர்களால் வழங்கப்பட்டன. தேவார காலத்திலேயே இம்முறை கையாளப்பட்டபோதிலும், பிற்பட்ட சோழர் காலத்தில் இது பெரு வழக்குப் பெற்றது. இக்காலத்தில் கட்சி வெறிகொண்ட சிலர் தம் தாய்மொழி வளர்ச்சியிலும் பாதுகாப்பிலும் கவலை கொள்ளாதிருத்தல் போலவே, சமய வெறி கொண்ட அக்காலத் தமிழர் தமிழுக்கு இங்ஙனம் படிப்படியாக நேர்ந்துவந்த கேட்டினை உணராதொழிந்தனர். இங்ஙனம் **சமயப் போர்வையில் வடமொழியின் செல்வாக்குப்** பெருகியது. அது பெருகப் பெருகத் தமிழ்,செல்வாக்கிற் படிப்படியாகச் சுருங்கத் தொடங்கியது.

பிறமொழிக் கலப்பு

சோழராட்சிக்குப் பிறகு மைசூர்ப் பகுதியை ஆண்ட ஹொய்சலர் ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்டது அதனுல் கன்னடர் தமிழகத்தில் பரவினர். பின்பு முஸ்லிம்கள் தென்னுட்டை ஆண்டனர்; விசய நகர வேந்தர்கள் ஆண்டனர். இவர்தம் கூட்டுறவால் உருது, இந்துஸ்தானி, பாரசீக, அராபியச் சொற்களும், தெலுங்கு, கன்னடச் சொற்களும் தமிழிற் புகுந்தன.

ஜமீன், சிபாரிசு, சிப்பந்தி, சிப்பாய், சுமார், பந்தோபஸ்து, தாஸ்தாவேஜ், பக்கிரி, மேஜை, ரஸ்தா என்பன **பாரசீகச்** சொற்கள்.

ஆசாமி, அநாமத், இலாகா, கஜானு, காடிகானு, காய்தா, ஜப்தி, மாமுல், வசூல், முனிசீப் என்பன **அராபியச்** சொற்கள்.

அசல், அந்தஸ்த், அபின், அல்வா, அம்பாரி, ஆஜர், இஸ்திரி, உஷார், குமாஸ்தா, குல்லா, ஜமுக்காளம், ஜாப்தா, ஜல்தி, பஞ்சாயத் என்பன **இந்துஸ்தானி** சொற்கள்.

முகலாயர் ஆட்சிக் காலத்தில் தென்னுட்டில் வாணிகம் செய்ய வந்த போர்த்துகீசியர் கூட்டுற வால் கிராம்பு, சன்னல், சாவி, அலமாரி, பாதிரி என் பன தமிழிற் கலந்தன. இவ்வாறு காலப்போக்கில் பற்பல நாட்டவர் கூட்டுறவால் அவ்வவர் மொழிச் சொற்கள் தமிழிற் புகுந்தன. இவை அனைத்தினும் தமிழ்நூல்களிற் புகுந்து தமிழ்ச் சொற்கள் வழங்கி வந்த இடங்களைக் கைப்பற்றிய பெருமை வட மொழிக்கே உரியது.

கேடுகள்

மகிழ்ச்சி என்பது தமிழ்ச் சொல். தமிழன் அதைச் சொல்வதற்குப் பதிலாகச் **சந்தோஷம்** என்ற வடசொல்லைப் பயன்படுத்துகிருன். இச்சொல்லையே தொடர்ந்து அவன் பயன்படுத்துவானுயின், நாளடைவில் மகிழ்ச்சி என்னும் தமிழ்ச்சொல் வழக் கொழிந்துவிடும் அல்லவா ? இவ்வாறு வழக் கொழிந்த தமிழ்ச் சொற்கள் பலவாகும். நம் நாட் டில் செய்யப்படும் ஆடைகளைப் பயன்படுத்தாமல் பிறநாட்டு ஆடைகளைப் பயன்படுத்துவதால், நம் நாட்டு நெசவுத் தொழில் நாளடைவில் நசித்து விடும். அதுபோலவே, நமது தாய்மொழிச் சொற்

களை விட்டுவிட்டுப் பிறமொழிச் சொற்களை நாம் வழங்கிவருவோமாயின், தமிழ்ச்சொற்கள் நாளடைவில் வழக்கு ஒழிந்துவிடும். அதனால் தமிழ்மொழி வலிமை குன்றும்.

பாதுகாக்க வழிகள்

ஒரு பொருளை உணர்த்தத் தமிழில் சொல் இல்லாத பொழுதுதான் வேறொரு சொல்லைப் பயன் படுத்த வேண்டும் என்ற திடமான கொள்கை தமிழரிடம் இருத்தல் வேண்டும். தமிழ் மக்கள் தமிழ்ப் பெயர்களையே தங்கள் குழந்தைகளுக்கு இட்டு வழங்குதல் வேண்டும்.

சங்க நூல்களிற் காணப்படுகின்ற இளங்கோ, நெடுஞ்செழியன், பெருவழுதி, இளம்வழுதி முதலிய தூய தமிழ்ப் பெயர்கள் தமிழ்ப் பிள்ளைகளுக்கு இட்டு வளங்குதல் ஆகாதோ ? இப்பெயர்கள் வழக்கிழந்து விட்டனவே,' என்று இருபது ஆண்டுகட்கு முன் கவலைப்பட்ட தமிழறிஞர் உள்ளங்குளிர, தமிழ் தழைக்க, இன்று இப்பண்டைப் பெயர்களை நற்றமிழர் சிலர் வழக்கில் கொண்டுவந்துள்ளமை பாராட்டற்பாலது. அந்நன்மக்கள் தமிழன்னையின் திருவருளால் சிறந்து வாழ்வார்களாக ! அவர்களைப்பின் பற்றிப் பலரும் தமிழ்ப் பெயர்களைத் தங்கள் பிள்ளைகளுக்கு இட்டு வழங்கும் நாளே தமிழ் வளர்ச்சிக்குரிய நன்னாள் ஆகும்.

புதிய தெருக்களுக்கும் புதிய நகரங்களுக்கும் தமிழ்ப் பெயர்கள் வழக்குப் பெறுதல் வேண்டும். கடைகளை உணர்த்தும் விளம்பரப் பலகைகள் தமிழ்ச் சொற்களைத் தாங்கியிருத்தல் வேண்டும்.

'ரைஸ் மில்' என்று தமிழில் எழுதப்படாமல், 'அரிசி அரைக்கும் இடம்' என்று எழுதப்படுதல் வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு கடையின் விளம்பரப் பலகையும் நற்றமிழில் எழுதப்படுமாயின், நற்றமிழ்ச் சொற்கள் பொதுமக்கள் பேச்சில் வழக்குப் பெற்று விடும்.

போக்குவரவு சாதனங்களான புகைவண்டி முதலியவற்றில் காணப்படும் அறிவிப்புகளும், புகைவண்டி நிலையங்களிலுள்ள அறிவிப்புகளும் பிழையற்ற தமிழில் எழுதப்படல் வேண்டும். புகைவண்டி நிலையங்களிலுள்ள மக்கள் ஒதுங்குமிடங்களில் 'ஸ்திரீகள்', 'புருஷர்கள்' என்று எழுதப்பட்டிருத்தல் 'பெண்கள்', 'ஆண்கள்' என்று மாற்றப்படுதல் வேண்டும். படக்காட்சி தயாரிக்கும் இடங்களில் எல்லாம் தமிழறிந்த புலவர்கள் அமர்த்தப் பெற்றுக் கதையும் உரை நடையும் பாடல்களும் பிழையற்ற எளிய தமிழில் ஆக்கப்படல் வேண்டும். ஒவ்வோர் அச்சகத்திலும் தமிழ்ப் புலவர் இருந்து எளிய தூய தமிழ் நடையில் விளம்பரத்தாள்கள், நூல்கள் முதலியன அச்சிட்டு வெளிவரும்படிக் கவனித்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். செய்தித்தாள்கள் எளிய-இனிய-தூய தமிழ் நடையில் வெளியிடப்படுதல் வரவேற்கத் தக்கது.

சமயத்துறையில் தமிழ்

தமிழர் வரிப்பணத்தாலும் தமிழர் வள்ளன்மையாலும் கட்டப்பட்ட தமிழகத்துக் கோவில்களில் தமிழில் வழிபாடுகள் நடைபெறுவதில்லை. இதனால் சமுதாயத்தில் சமய உணர்ச்சி குறைகிறது. இந்த

உண்மையை உணர்ந்து ஒவ்வொரு கோவிலிலும் தமிழில் வழிபாடு நடைபெறச் செய்தல் வேண்டும். கோவிலிலுள்ள ஒவ்வொரு மூர்த்தத்திற்கும் மேல் உள்ள சுவரில் எழுதிப்பட்டுள்ள அதன் பெயர் நல்ல தமிழில் மாற்றி எழுதப்படல் வேண்டும். **தக்ஷிணமூர்த்தி** என்னும் பெயர் **தென்முகக் கடவுள்** என மாற்றி அமைக்கப்பட வேண்டும். காலத்திற் கேற்றவாறு உள்ளத்தை உருக்கும் சமயப் பாடல்களை மட்டும் தொகுத்து அவற்றை ஓதுவார்களைக் கொண்டு பாடுவித்தல் வேண்டும். சமயச் சொற் பொழிவுகள் எல்லாப் பொதுமக்களுக்கும் புரியும்படி தமிழ்ச் சொற்களைக் கொண்டே ஆற்றப்படுதல் வேண்டும்; சமயநூற் கருத்துக்களை எளிய தமிழ் நடையில் அனைவரும் படித்துணரத்தகும் முறையில் வெளியிடுதல் வேண்டும்.

வாழ்வில் தமிழ்

மனித வாழ்வில் மிகவும் சிறப்பான நிகழ்ச்சி திருமணமாகும். பலர் அறியச் செய்யும் திருமணத்தில் கணவன் மனைவியின் கடமைகளை அவ்விருவரும் உணரும்படி செய்தல் மரபு. தமிழன் திருமணத்தில் இவை உணர்த்தப்பட வேண்டுமாயின், மண நிகழ்ச்சிகள் தமிழிலேயே நடைபெறல் வேண்டும். தமிழர்க்குப் புரியாத வேற்று மொழியில் மணவினை நிகழுமாயின், அதனால் மணமக்கள் பெறும் பயன் யாது? இவ்வாறு **மணவினை முதல் வாழ்வில் நடைபெறும் எல்லா நிகழ்ச்சிகளிலும் தமிழே ஆட்சி புரிதல் வேண்டும்.**

ஒரு தமிழன் மற்றொரு தமிழனைக் காணுங்கால் தன் தாய்மொழியிலேயே பேசுதல் வேண்டுமென்ற

உறுதிப்பாடு ஒவ்வொரு தமிழனுக்கும் இருத்தல் வேண்டும். ஆந்திரரிடமும் வங்காளியரிடமும் இவ்வுறுதிப்பாடு இருந்து வருகிறது. ஆயின், தமிழிற் பேசுதல் சிறப்புத்தராது என்று கருதும் கீழ்மகனை ஆங்கிலம் கற்ற தமிழன் இருந்துவருகிறான். இந்த இழி நிலை நம்மிடமிருந்து மறைதல் வேண்டும்.

முடிவுரை

இதுகாறும் கூறப்பெற்ற வழிவகைகளை உணர்ந்து, உள்ளத்தில் அமைத்து, பழக்கத்தில் கொண்டுவரின், ஏறத்தாழப் பத்தாண்டுகளுக்குள் தமிழ் மொழி தமிழகத்தில் வேரூன்றி வளரும். **தமிழ் வளர்ந்தால்தான் தமிழன் வளர்வான்.** தமிழன் வளர்ந்து வாழ்ந்தால்தான் தமிழ்நாடு வாழ்தல் கூடும். தமிழன் என்ன செய்யப் போகிறான் ?

ARCHIVES
110188
MADRAS